ஏப்ரல் 15, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි

வார மலர்

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

## சித்திரைப் புத்தாண்டு

சண்டையெனும் சங்கிலியை
சாம்பலாக உடைத்தெறிந்து
தண்டனைகள் அழிந்தவொரு
தமிழ் நிலத்தை ஆக்கிட வா!

வன்னியதில் இயல்புவர
வடகிழக்கில் உரிமைபெற
சென்றியதை அகற்றி வரம்
செய்வாயா புத்தாண்டே?

இடம் பெயர்வும் இன்னல்களும்
இனியெமக்கு முடியாது
தடம் பதித்து எம் நிலத்தில்
தழைக்க வழி செய்திட வா!



# அரசும் புலிகளும் ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டு!

எரிபொருள், சிமெந்து இல்லை; வன்னிக்கு ஜூஸ் எதற்கு?

தமிழ்ப் பெண்கள் மானம் காக்கும் போர் ஆரம்பம்

மட்டக்களப்பு அபிவிருத்திக்கு படையினர் தடையா?

# நாடாளுமன்ற அமளி துமளியால் சிறுவர்கள் பயந்து கதிகலங்கினர்!

## பொலிஸார் மற்றும் அதிகாரிகள் பாடு, பெரும்பாடு!

ஏப்ரல் மாதம் என்றாலே உஷ்ணத்துக்குக் கேட்கவா வேண்டும்? உச்சி கொதிக்கும் வெய்யில். சூடு பறக்கும். அதனால் தானோ என்னவோ நாடாளுமன்றத்திலும் கடந்த சில நாட்களுக்கு முன் வார்த்தைகளில் சூடு பறந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதம் கடந்த வியாழனன்று சபையில் நடைபெற்றது.

அப்பொழுது கண்டி மாவட்ட ஐ.தே.க உறுப்பினரான ஏ.ஆர்.எம். காதர் உரையாற்றினார்.

தனது உரையில் அவர், சபையில் இருந்த அரசாங்க கட்சி உறுப்பினர் ஒருவரைத் தாக்கு, தாக்கு என்று தாக்கிப் பேசினார்.

பெயர் குறிப்பிடாது அவர் இத் தாக்குதலைத் தொடுத்த போதிலும் யாரைத் தாக்குகிறார் என்பது தெளிவாகத் தெரிந்தது. இதனால் பிரதியமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே பதில் தாக்குதலைத் தொடுத்தார். இவ்விருவரின் வாய்த்தர்க்கத்துக்கு வேறு சில உறுப்பினர்கள் எண்ணெய் வார்த்தனர்.

கேட்கவா வேண்டும். சபை அமளி துமளிபட்டது. இருதரப்பிலும் இருந்து வார்த்தைகள் பறந்தன. ஒலிக்கக் கூடாத வார்த்தைகளும் ஒலித்தன. ஆசனங்களில் இருந்து எழுந்து நின்ற பல உறுப்பினர்கள் கரங்களை உயர்த்தியபடியே உரக்கப் பேசினர். காட்டுக் கூச்சலையே சபையில் கேட்க முடிந்தது.

சபையின் பொது மக்கள் கலரியில் அப்பொழுது பாடசாலைச் சிறுவர்கள் நிறைந்திருந்தனர். நாட்டின் அதி முக்கிய இடமொன்றைப் பார்க்கப் போகிறோம் என்று வந்திருந்த அச் சிறுவர்களுக்கு இந்தக் காட்சி எப்படி இருந்திருக்கும்? சிறுவர்கள் பயந்து நடுங்கி விட்டார்கள். பலர் எழுந்து வெளியேறவும் முயன்றனர். சிலர் அழவும் தொடங்கினர்.

நாடாளுமன்ற ஊழியர்களும் பொலிஸாரும் இச்சிறுவர்களை அமைதிப் படுத்த பெரும் பாடுபட்டனர்.

சபைக்குத் தலைமை வகித்த திகல்மடுல்ல மாவட்ட எம்.பி. யூ. எல்.எம். மொஹிதீன் நாடாளுமன்ற உறுப்பினர்களை அமைதிப்படுத்த முடியாமல் சபையைப் பத்து நிமிடங்கள் ஒத்திவைக்க நேரிட்டது.

இச்சபைக்கு ஜனாதிபதி அடிக்கடி வருபவரல்லர். அத்தி பூத்தாற் போல வருபவர். ஆனால் எதிர்காலத்தில் அவரும் அடிக்கடி வரலாம்.

நாடாளுமன்றத்துக்கு இனி அடிக்கடி தாம் போகப் போவதை ஜனாதிபதி சந்திரிகா தனது எம்.பி.களிடம் தெரிவித்துள்ளார். அரசாங்கக் கட்சி எம்.பி.களின் கூட்டத்தில் இதைத் தெரிவித்துள்ள ஜனாதிபதி தனது அமைச்சர்களின் கையாலாகாதனத்தையும் சொல்லாமல் சொல்லி வைத்துள்ளார்.

''நாடாளுமன்றதில் எதிர்க் கட்சியினர் அரசின் மீதும் தனிப்பட்ட முறையில் என் மீதும் குற்றஞ்சாட்டுகிறார்கள், சேறுவாரி பூசுகிறார்கள். இவற்றுக்கு அமைச்சர்கள் உரியவாறு பதிலளிப்பதில்லை. எதிர்க்கட்சியினரின் குற்றச் சாட்டுக்கள் ஆதாரமற்றவை. அமைச்சர்கள் சரியாகப் பதிலளிக்காததாலேயே பெரும்பாலான குற்றச் சாட்டுகள் பெரிதுபடுத்தப்படுகின்றன. இக் குற்றச் சாட்டுகளுக்குப் பதிலளிக்க நான் அடிக்கடி நாடாளுமன்றம் வருவேன்'' என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வரவு – செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி சமர்ப்பிக்க வேண்டும். விவாதத்தின் போது அவர் சபையில் இருக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்க்கட்சியினர் ஏற்கனவே கோரியிருந் தனர். ஜனாதிபதி பட்ஜெட் விவாதத்தில் பங்கு பற்றியிருந் தால் எதிர்க்கட்சியின ருக்கு நன்கு பதிலளித்திருக்க முடியும் அல்லவா? பட்ஜெட் விவாதத்தின் போது அவர் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்தார்.

ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற அரசாங்க கட்சி எம்.பி.களின் கூட்டத்தில் மற்றொரு முக்கிய தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது. எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதே அத்தீர்மானம்.

எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக கட்டாயமாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதை அமைச்சர் மங்கள சமரவீர வலியுறுத்திக் கூறியுள்ளார். பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்படும் வரை அது பற்றிய விவரங்களை வெளியிடாது இரகசியமாக வைத்திருக்க அரசாங்கத் தலைவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவிருப்பதேன்? அரசுக்கும் எதிர்க் கட்சியான ஐ.தே.க.வுக்கும் இடையிலான போட்டா போட்டியே காரணம் எனலாம்.

ஐ.தே.கட்சி எம்.பி. ராஜித சேனாரத்னவுக்கு எதிராக அரசுக் கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது. ஜனாதிபதிக்கு புதிய மாளிகை அமைக்கும் விவகாரத்தில் அரசுடன் முட்டி மோதி வருபவர் இவர்.

மாளிகை குறித்து அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்ட தகவல்கள் பிழையானவை எனவும் தான் வெளியிட்ட தகவல்களே சரியானவை எனவும் அவர் வாதாடி வருகிறார்.

ராஜித சேனாரத்னவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவே அதற்குப் போட்டியாக ஐ.தே.க.வும் செயலில் இறங்கியது. அரசாங்க கட்சி எம்.பி.கள் அறுவருக்கு எதிராக அக்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டு வந்துள்ளது. இவர்களில் ஐவர் பிரதியமைச்சர்கள்.

விவசாய பிரதியமைச்சர் த.மு. தஸநாயகா, பௌத்த சாசன பிரதியமைச்சர் எதிரிவீர பிரேமரத்ன, பெருந் தெருக்கள் பிரதியமைச்சர் மஹிந்தானந்த அனுத்கமகே, சுகாதார பிரதியமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், நகர அபிவிருத்தி நிர்மாண பிரதியமைச்சர் சந்தன கத்திரியாராச்சி, குருணாகல் மாவட்ட எம்.பி. சோமா குமாரி தென்னக்கோன் ஆகியோரே இந்த ஆறு எம்.பி.களுமாவர்.

ஆசிய நாடுகளில் நாடாளுமன்றங் களே முக்கிய போராட்டக்களங்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் எல்லாம் எதிர்ப்புக்காட்ட நாடாளுமன்ற அலுவல்கள் அடிக்கடி சீர் குலைக்கப்படுகின்றன. உறுப்பினர்கள் கூச்சலிடுகிறார்கள், குழப்பம் விளைவிக்கிறார்கள் சிலவேளைகளில் சபாநாயகர் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியுமிருக்கிறது. ஜனநாயகத்தின் காவலர்கள் ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்குவதையே காண முடிகிறது.

—அவதானி

# புலிகளுடன் பேச்சு நடத்த ஐ.தே.க. முழு ஒத்துழைப்பு

புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிக்கு ஐ.தே.க முழுமையான ஒத்துழைப்பு வழங்கும்.

இவ்வாறு ஐ.தே.க தேசிய பட்டியல் எம்.பியான கே.என்.சொக்சி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாக இருப்பதால் நாட்டில் பொருளாதாரச் சீர்கேடுகள் ஒழிந்து விடும் என்று நம்புகிறேன். சமாதானப் பேச்சுக்களுக்கு நிதி அமைச்சின் பங்களிப்பு அவசியம். புலிகளுடனான பேச்சு நிதித்துறையில் பல மாற்றங்களை ஏற்படுத்தும்.

புலிகள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபடவேண்டும்.

புலிகளுடனான சமாதானப் பேச்சு வெற்றி அடைய ஐ.தே.க.முழுமையான ஒத்துழைப்பை வழங்கும். கட்சிக்கு அப்பாற் பட்ட ஒரு தேசிய விடயமாகவே நாம் இந்தப் பிரச்சினையைக் கருதுகிறோம்.

பொ.ஐ.மு அரசாங்கத்தினால் ஒருபோதும் தனித்துச் செயல்பட முடியாது.

ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறுதல், கருத்தொருமைப்பாட்டுக்கு வருதல் என்பன அரசாங்கத்துக்கு அவசியம். இதனை அரசாங்கம் உணர வேண்டும்.

சமாதான நடவடிக்கைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பை நாடும் அதே வேளை தேசிய ரீதியில் கருத்து ஒருமைப் பாட்டை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மேலும், நீதி அமைச்சின் கடமை குறித்து இங்கு ஒரு விடயத்தைக கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நீதித்துறை வினைத்திறன் மிக்கதாகவும் வடக்கு – கிழக்கு உட்பட சகல பிரதேசங்களுக்கும் உரியதாகவும் இருக்க வேண்டும். அமைச்சின் முக்கியமான கடப்பாடு இது எனலாம்.

மேலும் நீதி மன்றங்கள் மூன்று மொழி களிலும் கடமையாற்றுதல் வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

# 24 பொருட்கள் மீதான தடை அரசால் நீக்கம்

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் முன்வைத்த புரிந்துணர்வு உடன்பாட்டுக்கிணங்க வடக்கு – கிழக்கில் இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதிகளுக்கான பொருளாதாரத் தடையை அரசு தளர்த்தி உள்ளது.

24 பொருட்களுக்கான தடையை நீக்கி உள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த 24 பொருள்கள் மீதான தடை நீக்கம் கடந்த 22ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

22ஆம் திகதி முதல் இத்தடை நீக்கம் அமுலுக்கு வந்துள்ளபோதிலும் ஏன் அது இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பது குறித்து பாதுகாப்பு அமைச்சு எதுவும் தெரிவிக்கவில்லை.

நோர்வேத் தூதுவர் வெஸ்பேர்க்கின் வன்னி விஜயம் வரை அது ரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது.

பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ள இந்தப்பட்டியலில் தடை நீக்கப்பட்ட பொருட்களின் விவரம் இருவகைப்படுத்தப் பட்டுள்ள போதிலும் இதில் எவ்வகைப் பொருட்களை இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிக்குத் தராளமாக எடுத்துச் செல்லலா மென்பது குறித்து எதுவும் தெரிவிக்கப் படவில்லையென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ன தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் அறிவிப்புக்கமைய பின்வரும் பொருட்களை இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல முடியும்.

அவையாவன

* பழரச பக்கற்றுகள்,
* சூப் கட்டிகள்,
* ஜெலற்றீன் பவுடர்,
* தேங்காய் எண்ணெய்,
* றோணியோ பேப்பர்,
* பிறிஸ்ரல் போட்,
* சாதாரண 'கம்',
* விவசாய உபகரணங்கள்,
* அஸ்பிரின் வகையான குளிசைகள்,
* தைலங்கள் (Balm) விற்றமின்கள்,
* மலேரியாக் குளிசைகள்,
* அரிசி, பருப்பு வகைகள்,
* முட்டை,
* நூடில்ஸ்,
* சகல வகையான குளிர்பானங்கள் (கோடியல்ஸ், மென்பான வகைகள்)
* வைன் மற்றும் சிகரெட்டுகள்,
* பிறவுண் பேப்பர்,
* சோப்,
* முச்சக்கர வண்டி,
* கோழிஇறைச்சி வகைகள்,
* எல்லாவிதமான பாய்கள்,

பச்சை, கறுப்பு மண்ணிறம் தவிர்ந்த பெயின்றுகள்.


Oasiss Rest

Luxury Rooms and Lodging

ஸ்தாபனத்தார் தங்கள் ஆதரவாளர்கள், நண்பர்கள், அபிமானிகள் அனைவருக்கும் தமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள்.

135, Maliban Street, Colombo - 11.
Tel : 338437, 323449, 433225


# அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டியதில்லை

## —நாடாளுமன்றத்தில் பிரதமர்

நாடாளுமன்ற சம்பிரதாயப்படி அமைச்சர் களிடம் எம்.பிக்கள் கேள்வி கேட்கலாம். ஆனால் கேள்வி அனைத்துக்கும் அமைச் சர்கள் பதில் சொல்ல வேண்டும் என்ற கடப் பாடு இல்லை என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்திருந்தார்.

பிரதமரின் கூற்று ஐ.தே.கட்சி எம்.பி. அஸ்வருக்கும் அவருக்கும் இடையில் சபை யில் சூடான வாக்குவாதத்தை ஏற்படுத்தியது.

இதனால் ஐந்து நிமிட நேரம் கூச்சலும் குழப்பமும் நிலவின.

நான்கு மாதங்களுக்கு முன்னர் முன் வைக்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு சமுர்த்தி விவகார மற்றும் பிரதி நிதித் திட்டமிடல் அமைச்சர் இன்னும் பதில் அளிக்கவில்லை என்று ஐ.தே.கட்சி எம்.பியான பியசோம உபாலி பிரதிச் சபாநாயகரிடம் முறையிட்டார்.

எம்.பிக்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளிக்க வேண்டும் என்ற கடப்பாடு இல்லை என்று பிரதமர் பதில் அளித்ததைத் தொடர்ந்தே சபையில் காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது.

அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும் என்ற நாடாளுமன்ற மரபுகளுக்கு ஏற்ப நிலையியல் கட்டளைச் சட்டங்களை மேற் கோள் காட்டி பிரதமரின் கூற்றை அவர்கள் மறுத்துப் பேசினர். நாடாளுமன்ற மரபு களின் படி கேள்வி நேரம் முக்கியமானது என்று அஸ்வர் எம்.பி கூறினார்.

இல்லை, பதில் அளிக்க முடியாது என்று பிரதமர் சொன்னார்.

அப்பொழுதே காரசாரமான வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

நிலையியல் மற்றும் 'எஸ்கின்ஸ்மே' யின் மரபு முறைச் சட்டங்களை மேற்கோள் காட்டி எதிர்த்தரப்பினர் கோஷம் எழுப்பினர். இந்தக் கட்டத்தில் அப்பொழுது சபைக்குத் தலைமை வகித்த பிரதிச் சபாநாயகர் தலையிட்டு அவரை எச்சரித்தார்.

இதனை அடுத்து சபையில் அமைதி நிலவியது.

# புலித்தடை நீக்கக் கோரிக்கை: பேச்சுக்குப் பெருந் தடை!




இலங்கைக்கான நோர்வே நாட்டுத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் கடந்த 6ஆம் திகதி திடீர் விஜயம் மேற்கொண்டு புலிகளின் கட்டுப்பாட்டில்உள்ள வன்னிப் பிரதேசத்துக்குச் சென்றிருந்தார்.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலி ஒன்றில் வவுனியா விமானப்படைத் தலைமையகம் சென்ற நோர்வேத் தூதுவர் அங்கிருந்து சர்வதேச செஞ்சிலுவைக் குழு அதிகாரிகளின் துணையுடன் பிரமணாலங்குளம் இராணுவ தடைமுகாமின் முன்னரங்கப் பகுதிக்குச் சென்றார்.

ஆனால் அங்கு காவலில் நின்ற படையினர் அவரைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கவில்லை.

அவரைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்குமாறு படையினருக்கு அறிவுறுத்தல் வழங்கப் பட்டிருக்கவில்லை.

அங்கு பொறுப்பாக இருந்த கேணல்தர உயர் அதிகாரி உடனடியாக விடயத்தை வன்னிப்பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொடவுக்குத் தெரியப்படுத்தினார்.

அதுவரை எதுவுமே தெரியாதிருந்த அந்த அதிகாரி இராணுவத்தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவுடன் தொடர்பு கொள்ள முயன்றார்.

ஆனால் பலகல்ல முக்கிய அதிகாரிகளின் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டிருந்தமையால் தொடர்பு கொள்ள முடியவில்லை.

பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்றார் வன்னி இராணுவத் தளபதி.

அதன் பின்னரே நோர்வேத் தூதுவரும் அவருடன் கூடவே சென்றிருந்த நோர்வே தூதரகப் பேச்சாளர் தோமஸ் ஸ்ரங்லாண்ட்டும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

படையினரின் அனுமதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் அவர்கள் சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் பிரமணாலங்குளம் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளுக்கு சமீபமாக காத்திருக்க வேண்டியிருந்தது.

இங்கு கவனிக்க வேண்டிய அம்சம் என்னவென்றால், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் தான் நோர்வேத் தூதுவர் வன்னிக்குச் செல்ல முடிவு செய்திருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் தான் விமானப் படையின் ஹெலியில் வவுனியா சென்றிருந்தார்.

ஆனால் பாதுகாப்பு அமைச்சினதும், இராணுவ உயர் அதிகாரிகளினதும் அசமந்தப் போக்கினால் நோர்வேத் தூதுவர் பிரமணாலங்குளத்தில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது.

வன்னிக்குச் சென்ற நோர்வேத் தூதுவரை விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர்களும், பிரதிநிதிகளும் வரவேற்று மல்லாவிக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு விடுதலைப்புலிகளின் காரியாலயம் ஒன்றில் நோர்வேத் தூதுவர் விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவுத் தலைவர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து முதல் சுற்றுப் பேச்சுக்களை மிக நீண்ட நேரம் நடத்தினார்.

அப்பொழுது புரிந்துணர்வு அடிப்படையில் காணப்படும் விசேட அம்சங்கள் குறித்தும் அதில் அரசு மேற்கொள்ள முயற்சிக்கும் திருத்தங்கள் குறித்தும் தமது அதிருப்தியை தமிழ்ச்செல்வன் வெளியிட்டார்.

அத்துடன் விடுதலைப் புலிகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்க வேண்டும் எனவும் அப்படி நீக்கினால் மட்டுமே பேச்சு வார்த்தையில் சுதந்திரமாகக் கலந்து கொள்ள முடியும் எனவும் அவரால் தெரிவிக்கப்பட்டது.

தமது ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்துக்கு அரசு சாதகமான முறையில் பிரதிபலிப்பை வெளிப்படுத்த வேண்டும் என்றும்—

யுத்தத்துக்கு மத்தியில் திறந்த மனதுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தங்களது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் மீது அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும் என்றும்—

அரசு யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்க வேண்டும் என்றும்— கடந்த பல மாதங்களாக விடுத்லைப் புலிகள் கோரி வந்தார்கள். இது பழைய நிபந்தனை.

ஆனால் இம்முறை வன்னி சென்ற நோர்வேத் தூதுவரிடம், தம்மீது அரசு விதித்துள்ள தடையை நீக்கினால் மட்டுமே பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள முடியும் என்று புலிகள் கூறியிருப்பது பேச்சுவார்த்தை நடைபெறுமா என்ற சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறது.

புலிகளைப் பொறுத்த வரை, பேச்சுக்களில் ஈடுபடும் இருதரப்பினரும் சமபலத்துடன் இருந்தால் மட்டுமே சுமுகமான தீர்வு ஏற்பட முடியும் என்று கருதுகிறார்கள்.

அதாவது புலிகளைப் பயங்கரவாதிகள் என்று பட்டியல்படுத்தி விட்டு அவர்களுடன் சமாதானம் பேசுவது எப்போதுமே ஒருவர் மீது மற்றொருவர் சந்தேகம் கொள்ளவே வழிவகுக்கும்.

இனப்பிரச்சினை கடந்த இருதசாப்தங்களாக தொடர்வதற்கு அடிப்படைக்காரணம் பரஸ்பர நம்பிக்கையின்மையும், தப்பபிப்பிராயங்களுமே ஆகும்.

அத்துடன் புலிகளின் யுத்த நிறுத்த காலத்தில் அரசு இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும் இராணுவத்தைப் பலப்படுத்துவதிலுமே கவனம் செலுத்தி வந்ததே தவிர சமாதானத்துக்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை.

மாறாக புலிகள் தம்மைப் பலப்படுத்தவே யுத்த நிறுத்த காலத்தைப் பயன் படுத்துகிறார்கள் என்றும், நூற்றுக்கும் மேற்பட்ட தடவைகள் யுத்த நிறுத்தத்தை மீறியிருக்கிறார்கள் என்றும் அவர்களுக்கு சமாதானத்தில் நம்பிக்கை இல்லை என்றும் அரசு பிரசார யுத்தத்தில் ஈடுபட்டு வருகிறது.

இராணுவத்தை அரசு பலப்படுத்தி வருவது பற்றி கடந்தவாரக் களநிலைமையில் குறிப்பிட்டிருந்தோம்.

அதாவது பலநூறு மில்லியன் ரூபா பெறுமதியான BMP-2, BMP-3 ரக அதிநவீன யுத்த கவச வாகனங்களை இலங்கை இராணுவம் ரஷ்யாவிடம் இருந்து கொள்வனவு செய்திருக்கிறது.

அத்துடன் உயர் இராணுவ அதிகாரி ஒருவரின் தகவலின்படி இராணுத்திலிருந்து விலகி ஓடியவர்களில் 3500 பேர் மீண்டும் சேர்ந்திருக்கிறார்கள்.

புதிதாக 3700 பேர் வரையில் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே அரசு தனது நல்லெண்ண முயற்சிகளில் ஒன்றாக சமாதான புறநிலைச் சூழலை உருவாக்கும் நோக்குடன் புலிகள் மீதான தடையை நீக்கி விட்டு யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்க வேண்டும். அதன் மூலம் அரசுக்கு சமாதானத்தில் நம்பிக்கை இருக்கிறது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்பதே புலிகளின் வாதம்.

ஆனால் மறுபுறத்தில் அரசைப் பொறுத்தவரையில் அரசு விரும்பினாலும் கூட உடனடியாகப் புலிகள் மீதான தடையை நீக்க முடியாத ஒரு நிலைமை இருந்து வருகிறது.

புலிகளைத் தடைசெய்யும்படி சர்வதேச நாடுகளிடமும் வேண்டி நிற்கும் அரசு எவ்வாறு புலிகள் மீது தான் விதித்த தடையை நீக்க முடியும்?

அவ்வாறு அரசு உள்நாட்டில் புலிகள் மீதான தடையை நீக்கினால், அதைவாய்ப்பாகப் பயன்படுத்தி சர்வதேச நாடுகளில் தமக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடைகளில் இருந்து புலிகள் தம்மை விடுவித்துக் கொள்ள முயற்சிக்கலாம்.

இது புலிகளின் கைகளைப் பலப்படுத்தி விடும் என்ற பயமும் அரசுக்கு உள்ளூர இருக்கத்தான் செய்கிறது.

இதனால் அரசு புலிகளின் மீதான தடையை உடனடியாக நீக்கப்போவது கிடையாது, அப்படியாயின் சமாதானப் பேச்சுவார்த்தை சாத்தியப்படுமா?

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நம்பிக்கைக்கு உரியவரான மூத்த அமைச்சர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், ''பேச்சுவார்த்தைக்கான காலம் கனிந்து வருகையில் புலிகள் புதிய புதிய நிபந்தனைகளை விதிப்பது வேதனையாகவே இருக்கிறது'' என்றார்.

''புலிகள் தம்மீதான தடையை நீக்கக்கோரி முன்நிபந்தனை விதித்திருப்பது ஒரு துரதிஷ்டமான நிகழ்வே. பேச்சுவார்த்தையில் இறங்குமுன் புலிகளின் இந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்வது கடினம்.

''ஆனால் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடக்கும் போது அவற்றில் காணப்படும் முன்னேற்றத்துக்கு அமைய புலிகள் மீதான தடையை நீக்குவதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படலாம். அதற்கு முன் தடையை நீக்குவது சாத்தியமானது இல்லை.

''ஆனால் அதற்கு மாறாக, பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் அரசு யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்கக் கூடும். இப்படி அந்த அமைச்சர் மேலும் கூறினார்.

இதே வேளை, சுமார் மூன்று வார கால இடைவெளிக்குப்பின் தேசிய பாதுகாப்புக் கவுன்ஸில் கடந்த 9ஆம் திகதி மாலை அவசர அவரசமாகக் கூடியது.

இச்சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் புதிய நிலைப்பாடு குறித்தும் அவர்களது புதிய நடமாட்டங்கள். மற்றும் தயார்ப்படுத்தல்கள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிய வருகிறது.

புலிகளிடம் உள்ள புதிய விமான எதிர்ப்பு ஏவுகணைகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

இதே வேளை பாகிஸ்தானில் இருந்து மூன்று யுத்தக் கப்பல்கள் கடந்த 8ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன.

பி.என்.எஸ். மோவின் என்ற ஹெலிகொப்டர் தாங்கிக் கப்பலும், பி.என்.எஸ் திப்பு சுல்தான் என்ற நாசகாரிக் கப்பலும், பி.என்.எஸ் சுசுக் என்ற நீர் மூழ்கிக் கப்பலும் கொழும்பில் தங்கிவிட்டு மே மாதம் முதல் வாரத்தில் சிங்கப்பூரில் நடைபெறவுள்ள சர்வதேச பாதுகாப்பு ரோந்துக் கண்காட்சி யில் — 2001 கலந்து கொள்வதற்காக புறப்படவுள்ளன.

இக்கப்பல்கள் மூன்றும் நல்லெண்ண விஜயம் மேற்கொண்டே இலங்கை வந்துள்ளன என்று பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

சிங்கப்பூரில் நடக்கவிருக்கும் இக்கண் காட்சியில் உலகின் பலம்மிக்க பல நாடுகள் கலந்து கொள்ளவுள்ளன.

இரண்டு ஹெலிகொப்டர்களை ஒரே சமயத்தில் தன் முதுகில் சுமக்கக் கூடிய பி.என் எஸ் மோவின் கப்பல், மூன்று நாசகாரிக் கப்பல்களுக்கு ஒரே சமயத்தில் எரிபொருட்களையும், தேவையான ஆயுத உபகரணங்களையும் வழங்கக் கூடிய ஆற்றலைக் கொண்டது.

கடந்த இரு வருடங்களுக்குப் பின் முதன் முதலாக நீர்மூழ்கியுடன் கூடிய முழுமையானதொரு கப்பல் தொகுதி (வழங்கல் கப்பல், நாசகாரி, நீர்மூழ்கி) இலங்கைக் கடற்படையில் நுழைந்திருப்பது இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான இராணுவ நட்புறவுகளை மேலும் வளர்ப்பதற்குப் பெரும் உதவிபுரியும் என்பது பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் அசையாத நம்பிக்கை.


**மலைநாட்டில்**

**Maths / Science & Technology**
**O/L 2001, O/L 2002, Grade 9**

| Subject | O/L 2001 | O/L 2002 | Grade 9 |
|---|---|---|---|
| Maths | Sat 1.30-330 | Sun 10.30-12.30 | Mon / Tue 4.45-5.30 |
| Science | Sat 11.30-130 | Sun 8.30-10.30 | Mon / Tue 4.45-5.30 |

விரிவுரை W.L.Rajaratnam
EPI
87/1A, கட்டுகஸ்தோட்ட வீதி, கண்டி. தொலைபேசி:072-500475
(வித்தியார்த்த கல்லூரி முன்னால்)

**தலைநகரில்**

**Maths / Science & Technology**
**O/L 2001, O/L 2002**

| Subject | O/L 2001 | Grade 10 |
|---|---|---|
| Maths | Fri 5.00-7.00 | Fri 3.00-5.00 |
| Science | Thu 5.00-7.00 | Thu 3.00-5.00 |

விரிவுரை W.L.Rajaratnam
EPI
316, காலி வீதி, கொழும்பு - 04. தொலைபேசி:075-516790
(St. Peters பஸ்தரிப்பு முன்னால்)

தமிழ் பேசும் அனைத்து நெஞ்சங்களுக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

SIVA NARUMANA POONGA

General Merchants and Commission Agents

Dealers in Flouring Essences, Food Colour Powders, Royal Baking Powder, Custard Powder, Coco Powder, Talcum Powder, Deepa Rose Talcum Powder and Groceries Etc.

**No. 288, Hospital Road, Jaffna.**
**Tel: 021-2567**

தமிழ் பேசும் அன்பு நெஞ்சங்களுக்கு எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

INKARAN STORES IS
ஐங்கரன் ஸ்ரோர்ஸ்

General Merchants and Commission Agents

யாழ்ப்பாண மக்களுக்குரிய அனைத்து அத்தியாவசிய பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

354, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சுடர் ஒளி

15 ஏப்ரல், 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com

## வன்செயல்கள்

நாட்டில் பாரதூரமான வன்செயல்கள் இப்போது குறைந்து வருகின்றன என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார்.

அது உண்மையானால் மகிழ்ச்சி தான். ஆனால் நாளாந்தம் வெளிவரும் செய்திகள் நிலைமையை வேறு விதமாகக் காட்டுகின்றன.

இன்று சிறைச்சாலைகள் கொலைச் சாலைகளாக மாறி வருகின்றன என்று குற்றம் சாட்டுகிறார் மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம்.

மனித உரிமை மீறல் விடயங்களை வெளிக் கொணர்ந்து பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் பெறுவதற்கு முன்னின்று அயராது உழைத்து வருபவர் அவர்.

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சம்பவத்தை அடுத்தே ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. கண்டனமும் கவலையும் தெரிவித்திருக்கிறார்.

குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் பெரும்பாலும் தமிழர்கள். நீர்கொழும்புச் சிறைச்சாலையில் நீண்ட காலமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். கவனிப்பார் இல்லை.

அவர்களில் சிலர் தம்மைப் பிணையில் விடக் கோரிக் கூரை மீது ஏறி இருந்து உண்ணா விரதம் இருக்க முற்பட்டார்கள். அப்போது அவர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார்கள். 15 பேர் காயமடைந்தார்கள். 7 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள்.

தாக்குதலை நடத்தியவர்கள் யார்? சிறைச்சாலை அதிகாரிகள் மீது தான் புகார். வேலியே பயிரை மேய்ந்த கதை.

குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களைப் பிணையில் விடச் சட்டத்தில் இடமில்லை. சட்டத்தைத் திருத்தியாவது நீதி வழங்குங்கள் என்று கோரிக்கை விடுத்து சாத்வீக முறையில் போராடுவது தவறா? அது குற்றமா?

தமிழ்க் கைதிகள் சிறைச்சாலையில் தாக்கப்பட்ட சம்பவங்கள் முன்னரும் நடந்திருக்கின்றன. அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழர்கள் கொழும்பு, களுத்துறை சிறைச்சாலைகளில் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

தாக்கியவர்கள் மீது உடனுக்குடன் சரியான நடவடிக்கை எடுத்து அவர்களைத் தண்டனைக்கு உள்ளாக்கியிருந்தால் இப்போது நீர் கொழும்புச் சிறைச்சாலைச் சம்பவம் நடந்திருக்குமா?

தமிழர்கள் எப்போது, எங்கே, எதற்காக, எந்த விதத்தில் தாக்கப்பட்டாலும் அது சர்வசாதாரண விடயமாகவே கருதப்படுகிறது.

தமிழருக்கும் மனித உரிமை உண்டு. அது மீறப்படக்கூடாது என்ற எண்ணம் அதிகாரிகளுக்கு இல்லையோ என்று கேட்கும் அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது.

வடக்கு— கிழக்கில் சகட்டு மேனிக் குண்டு வீச்சுகள், ஷெல் அடிகள், துப்பாக்கிச் சூடுகள் இவற்றால் இதுவரை எத்தனை பேர் உயிர் இழந்து விட்டார்கள்! எத்தனை பேர் ஊனமடைந்து முடங்கிக் கிடக்கிறார்கள்.

கைதுகள், தடுத்து வைப்புகள், துன்புறுத்தல்கள், பாலியல் வல்லுறவுகளுக்கும் குறைவில்லை. சமீபத்தில் நடந்த மன்னார் சம்பவம் மறக்க முடியாத அரக்கத்தனம்; அசிங்கமான கோரத்தனம்.

தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல் சம்பவங்களை மூடி மறைப்பதில் அந்தச் சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களை ஏதாவது ஒரு விதத்தில் முடிந்தவரையில் காப்பாற்றுவதற்கும் முயற்சி செய்யப்படுகிறது.

சர்வதேச அழுத்தங்கள் காரணமாக ஆரம்ப நடவடிக்கைகள் சில எடுக்கப்படுவது உண்மை. ஆயினும் அவை பெரும்பாலும் இழுத்தடிக்கப்பட்டு கடைசியில் ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுகின்றன.

அதிகாரத்தில் உள்ளவர்களின் இந்தப் போக்கால்தான் தமிழ் மக்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. மனித உரிமை மீறல் சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன. பாலியல் வல்லுறவுகள் தடையின்றித் தொடர்கின்றன.

தமிழ் மக்களும் இந்த நாட்டுப் பிரஜைகள் தான். அவர்களும் மனிதர்கள் தான். அவர்களுக்கும் மனித உரிமைகள் உண்டு. சட்டப் பாதுகாப்புகளும் உண்டு. இதை மற்றவர்கள் சொல்லி என்ன பயன்? அதிகாரத்தில் உள்ளவர்கள் அனைவரும் உணர்ந்து நடக்க வேண்டுமே!

# அரசாங்கமும் புலிகளும் பரஸ்பரம் குற்றச்சாட்டு!

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முயற்சி என்ற கப்பல் பாரிய பாறை ஒன்றுடன் மோதி மேற்கொண்டு நகர முடியாமல் நிற்கிறது.



இது பலருக்கும் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் அளித்திருக்கலாம் ஆனால் 'சுடர்ஒளிக்கு' இது எதிர்பாராதது அல்ல.

இலங்கையில் உள்ள நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க்கும் தூதரக உயர் அதிகாரி தோமஸ் ஸ்ட்ராங்லண்டும் கடந்த வெள்ளி சனிக்கிழமைகளில் வன்னிக்குச் சென்று புலிகள் இயக்கத் தலைவர்களுடன் பேசினார்கள் அல்லவா?

புலிகள் தரப்பில் இயக்க நிர்வாகப் பகுதித்தலைவர் எஸ். தங்கன், புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் புலித்தேவன், ஜோர்ஜ் ஆகியோர் சகிதம் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் எஸ்.பி தமிழ்ச் செல்வன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டார்.

அப்போது அவர் நோர்வேத் தூதுவரிடம் தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறிய முக்கிய விஷயங்கள் மூன்று:—

1. பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமானால் இலங்கை அரசு, புலிகள் இயக்கத்துக்கு விதித்த தடையை நீக்க வேண்டும்.

2. நாம் யுத்தநிறுத்தம் செய்துள்ளது போல் அரசாங்கமும் யுத்தநிறுத்தம் செய்ய வேண்டும்.


3. தமிழ்ப் பகுதிகளுக்கான பொருளாதாரத் தடையை அரசு முறையாக நீக்க வேண்டும்.

இவற்றை இலங்கை அரசிடம் எடுத்துக் கூறுங்கள் என்று நோர்வே தூதுவரிடம் தமிழ்ச் செல்வன் கேட்டுக்கொண்டார்.

நோர்வே தூதுவரிடம் தமிழ் செல்வன் தெரிவித்த விளக்கங்கள் தனிச் செய்தியாக இப்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

தமிழ்ச் செல்வனின் இந்த அறிவிப்புப் பற்றி அரசாங்கம் (இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரை) உத்தியோகபூர்வமாக எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

ஆயினும்




அரசாங்கத் தரப்பில் பலரும் புலிகள் ஏமாற்றி விட்டார்கள், சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் புதிதாக நிபந்தனை விதித்து காரியத்தைக் கொடுத்து விட்டார்கள். அவர்கள் தங்கள் சொந்தப் புத்தியைக் காட்டி விட்டார்கள் என்றெல்லாம் குற்றம் சுமத்துகிறார்கள்.

ஆனால் புலிகளோ தாம் தம்முடைய நிலைப்பாட்டிலிருந்து மாறவில்லை என்றும் அரசுதான் குழம்பிப்போய் மற்றவர்களையும் குழப்புகிறது என்கிறார்கள்.

நோர்வே தூதுவர் மூலம் தமிழ்ச்செல்வன் அரசுக்குத் தெரிவித்த மூன்று கருத்துக்களையும் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கமும் வேறு வார்த்தைகளில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்திருக்கிறார்கள் என்று புலிகள் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் லண்டனில் நடைபெற்ற மாவீரர் தினக் கூட்டத்தில் அன்டன் பாலசிங்கம் பேசுகையில் பின்வருமாறு கூறினார்:—

"இலங்கை வெளிநாட்டு அமைச்சர் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கை அரசு தனது பயங்கரவாதப் பட்டியலில் இருந்து எம்மை அகற்றினால் மட்டும்தான் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படும். நாம் அதனை வற்புறுத்திக் கொண்டே வருகிறோம்.

எம்மைப் பயங்கரவாதப் பட்டியலிலிருந்து எடுத்தால் மட்டுமே பேசுவோம் என்று வற்புறுத்தவும் தயங்கமாட்டோம்''

இதைத்தானே இப்போது தமிழ்ச் செல்வன் சொல்லியிருக்கிறார்.

கடந்த வருடம் நவம்பர் மாதக் கடைசியில் பிரபாகரன் நிகழ்த்திய மாவீரர் தின உரையில் கூறியவை இவை:—

சமாதானப் பேச்சுக்கு நாம் நிபந்தனை எதையும் விதிக்கவில்லை. ஆயினும் பேச்சுவார்த்தைக்கு உகந்ததான நல்லெண்ணப் புற நிலையும் இயல்பு நிலையும் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை என்றுமே நாம் வலியுறுத்தி வருகிறோம்.

இதில் யுத்த நிறுத்தமும் பொருளாதாரத் தடை நீக்கமும் அடங்கும்.

பிரபாகரனின் இந்த உரையை அடுத்து அரசு தரப்பில் கூறப்பட்டது என்ன?

''பிரபாகரன் உண்மையில் நிபந்தனையின்றி அரசுடன் பேச்சு நடத்திப் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு காண விரும்பவில்லை. தொடர்ந்து போராடித் தனிநாடு — தமிழீழம் அமைப்பதே அவரின் குறிக்கோள்.

முதலில் நிபந்தனையற்ற பேச்சு என்று பிரபாகரன் சொல்வதையே ஏற்றுக்கொள்ள முடியாது.

நிபந்தனையற்ற பேச்சு நடப்பதற்கு ஏற்ற சூழ்நிலை — இயல்பு நிலை எல்லாம் வேண்டும் என்று கூறி, அவற்றை ஏற்படுத்த என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்று தமது மாவீரர் தின உரையில் பிரபாகரன் குறிப்பிட்டிருக்கிறார்.

அவை எல்லாம் நிபந்தனை என்று சொல்லப்படாவிட்டாலும் உண்மையில் நிபந்தனைகளே.

20 ஆண்டுகளுக்கு மேலாகப் பரஸ்பர பகையுடனும் சந்தேகத்துடனும் ஒரு கொடிய போரில் ஈடுபட்டு வரும் இரு தரப்பினரும் சண்டையைத் தொடர்ந்த படி திடீரெனச் சமாதானப் பேச்சில் இறங்குவது நடைமுறைச் சாத்தியமானது அல்ல.

இதனால் தான் போர் நெருக்கடியைப் படிப்படியாகத் தளர்த்தி போர் ஓய்ந்த சமாதான நல்லெண்ணப் புறச் சூழ்நிலையில் பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகின்றோம்.

இயல்பு நிலை என்னும் போது தமிழ்மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதாரச் சுமைகள், தடைகள் நீங்கி எமது மக்களின் வாழ்க்கை நிலை இயல்பான இருப்புக்குத் திரும்ப வேண்டும். என்பதையே நாம் கருதுகிறோம் என்கிறார் பிரபாகரன்.

ஆக சமாதானப் பேச்சுவார்த்தைக்குப்




போர் நிறுத்தப்பட வேண்டும் பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும் என்று பிரபாகரன் மிகுந்த அரசியல் சாணக்கியத்துடன் ராஜதந்திர ரீதியில் நிபந்தனை விதித்திருக்கிறார் என்று அரசு தரப்பில் கூறப்பட்டது.

ஆக, இது அரசு ஏற்கனவே ஊகித்துக் கொண்ட அர்த்தம். ஆயின் இப்போது தாம் குழம்புவதற்கும் மற்றவர்களைக் குழப்புவதற்கும் என்ன இருக்கிறது என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

யார் சொல்வது சரி, யார் சொல்வது பிழை என்பது ஒருபுறம் இருக்க பேச்சுவார்த்தை கேள்விக்குறியாகிவிட்டது என்பது மட்டும் உண்மை.

இதை முன்




கூட்டியே அறிந்து வாசகர்களுக்கு அறிவித்த ஒரே பத்திரிகை சுடர் ஒளிதான்.

மற்றப் பத்திரிகைகள் எல்லாம் ''பேச்சுவார்த்தைகளுக்கு காலம் கனிந்து விட்டது'' என்றும் ''இன்னும் சில நாட்களில் பேச்சு'' என்றும் எங்கே எந்தத் தேதி அளவில் பேச்சு நடக்கப் போகிறது என்றும் செய்திகளை வெளியிட்டன.

சுடர்ஒளி ஜனவரி 7ஆம் திகதி இதழில் வெளியிடப்பட்ட செய்தித்தலைப்பு இதோ:—

''பேச்சு நடக்காது
நடந்தாலும் தொடராது
தொடர்ந்தாலும் பலன் தராது''

பெப்ரவரி 4ஆம் திகதி:
''பிரச்சினை வலுத்து இழுபறி
அதற்குக் காரணம் என்ன?''

பெப்ரவரி 11ஆம் திகதி:
''சமாதான முயற்சியில்
மீண்டும் சிக்கல்''
''பிரிட்டிஷ் தடை வருகிறது
பேச்சு விடைபெறுகிறது''

மார்ச் 11 ஆம் திகதி:
''பேச்சு பற்றி முடிவு இல்லை என்கிறார் பாலசிங்கம்.

ஆணித்தரமான அரசியல் செய்திகளை தூரதிருஷ்டியுடன் மற்றெல்லாப் பத்திரிகைகளையும் முந்திக் கொண்டு தருவது சுடர் ஒளி என்பது புரிகிறது அல்லவா?

காண்டீபம்

# அரசு குழப்புகிறது! ஆதாரங்களை அடுக்குகிறார் தமிழ்ச் செல்வன்



தம்மைச் சந்தித்துப் பேசிய நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க் இடம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன் தெரிவித்த கருத்துகளின் சாரம் வருமாறு:—

* உங்கள் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து ஒருதலைப் பட்ச யுத்த நிறுத்தம் செய்தோம்.
* அரசு இதைப் புறக்கணித்தது.
* தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியது.
* எம்மால் மீட்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் ஆக்கிரமிக்கும் நோக்குடன் தாக்குதல்களை நடத்தியது.
* எமது போராளிகளின் நிலைகளைத் தேடித் தேடித் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.
* மொத்தத்தில் அரசு எமது நல்லெண்ண நடவடிக்கைகளைக் குழப்பி வருகிறது. அமைதி முயற்சிகளையும் குழப்பும் நோக்கில் தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வருகிறது.
* அரசின் தற்போதைய நடவடிக்கைகளால் 145 போராளிகளை இழந்து விட்டோம்.
* சில முக்கிய பிரதேசங்களை விட்டு விலகும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.
* தமிழ் மக்கள் மீது விமானப்படை, கடற்படை கொண்டு தாக்குதல். இப்படிப் பல்வேறு ஆத்திரம் மூட்டும் செயல்கள்.
* சமாதானத்திற்காகப் புலிகளும் தமிழ் மக்களும் இதுவரை கொடுத்த விலை அதிகம்.
* இன்று சமாதானத்திற்கு விரோதமானவர்கள், யுத்த வெறி பிடித்து நிற்பவர்கள் யார் என்பதைச் சர்வதேச சமூகமும் தமிழ் மக்களும் உணர்ந்து விட்டார்கள்.
* அரசு சமாதானம் என்றும் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்றும் கூறிக்கொண்டு யுத்தத்திற்கு அதிக நிதி ஒதுக்குகிறது. நவீன ஆயுத தளவாடங்களை வாங்கிக் குவிக்கிறது. படைகளுக்குக் கூடுதலான ஆட்களைத் திரட்டி வருகிறது. கிழக்கிலும் பாரிய குண்டு வீச்சுகளை நடத்துவதற்காக மக்களை அவர்களது வாழ்விடங்களை விட்டு வெளியேறச் சொல்கிறது.
* அரசு சிஹல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளுக்கு உற்சாகமளித்து வருவதோடு இன வெறியைத் தூண்டும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது.
* சிங்கள ஆயுதப் படைகளின் சகலவிதமான போர் நடவடிக்கைகள், சுற்றிவளைப்புகள், கைதுகள், சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள் போன்ற அட்டூழியங்கள் முழுமையாக நிறுத்தப்பட வேண்டும்.
* ஒரு முழுமையான போர் நிறுத்தமும் பொருளாதாரத் தடைகள் நீங்கிய இயல்பு நிலையும் அமைதியும் தோன்ற வேண்டும். அப்போதுதான் பேச்சுக்களை நடத்த முடியும்.
* மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் உண்மைகளையே வெளிப்படுத்தும் நாகரிகமான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதே அமைதி முயற்சிகளுக்கு ஊக்கம் தரும்
* புரிந்துணர்வு உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிபந்தனைகளை நாம் கடந்த நான்கு மாதங்களாக இறுக்கமாகக் கடைப்பிடித்து வருகிறோம்.
* ஸ்ரீலங்கா அரசாங்கம் பொருளாதாரத் தடைகளை நீக்கி, போர் நடவடிக்கைகளையும் மற்றும் பொது மக்கள் மீதான அட்டூழியங்களையும் உடனே நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறுமானால் சமாதான முயற்சிகள் அனைத்துமே குழப்பமடைந்து மீண்டும் இத்தீவிலே கடுமையான போர் நெருக்கடி நிலவுவது தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.
* முன்பு கலந்துரையாடப்பட்ட விஷயங்கள், பேசப்பட்ட விடயங்கள் நோர்வே அரசினால் முதலில் தரப்பட்ட உடன்படிக்கையில் உள்ள பல விடயங்கள் நீக்கப்பட்டு இலங்கை அரசு தனக்குச் சார்பான பல விஷயங்களைப் புகுத்தியிருக்கிறது.
* புதிய உடன்படிக்கை முற்று முழுதாகவே ஒரு பக்கச்சார்பானது. புலிகளின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவது. தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பலவீனப்படுத்துவது.

(தொடர்ச்சி 21ஆம் பக்கம்)

# ஆண் உடைதரித்து மண் மீட்பு போர் புரிந்த வீரப் பெண்!

## உலக வரலாற்றில் இடம்பெற்று ஜொலிக்கிறார்

முறத்தால் புலிகளை விரட்டியடித்த வீரப்பெண்ணின் புகழை மரபு வழிக்கதைகள் எமக்குக் கூறிக் கொண்டிருக்கின்றன.

காலத்தாலும், தேவையினாலும் வீராங்கனையாகி பிரான்ஸ் மண்ணை மீட்டெடுத்த வீரப்பெண் ஜோன் ஒவ் ஆர்க்கினால் பிரான்ஸ் விடுதலைக் காற்றைச் சுவாசித்திருக்கின்றது. இது எம்மில் பலருக்குத் தெரியாத ஒன்று.

கல்வி அறிவற்ற இந்த இளம் பெண் உலகமே மெச்சத்தக்கவண்ணம் பிரான்ஸின் வீராங்கனையாவாள் என்பதை எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

1429ஆம் ஆண்டு. பிரித்தானியாவின் 6ஆவது ஹென்றி மன்னனுக்கும் பிரான்ஸின் 7ஆவது சார்ள்ஸ் மன்னனுக்கும் இடையில் பிரான்ஸின் கிரீடம் அல்லாடிக் கொண்டிருந்த காலம் அது.

பிரான்ஸின் பெரும்பாலான பகுதி பிரித்தானியர்களினதும் அவர்களுக்கு ஆதரவான பேர்கண்டியர்களினதும் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

கிட்டத்தட்ட 12 வருடங்களாக போரை மட்டுமே கண்ட நிலையில் 7ஆவது சார்ள்ஸ் மன்னன் சலிப்படைந்திருந்தான்.

ஸ்பெயினுக்கு தப்பிப் போய்விடுவது அல்லது பிரித்தானியர்களிடம் சரணடைவது என முடிவு செய்தான்.

ஆனால் மன்னனின் நிலையும் மக்களின் நிலையும் மாறுபட்டிருந்தன.

'ஒலையன்' நகரத்தின் விடுவிப்பே எதிரிக்கு எதிரான தங்களின் போராட்டத்தின் ஓர் அடையாளமாக இருக்க முடியும் என மக்கள் நினைத்தனர்.

அந்த நேரம் பிரான்ஸின் டொம்ரெமி கிராமத்தில் ஆடுமேய்த்துக் கொண்டிருந்தாள் ஜோன்.

நில உரிமையாளரின் மகளான அவளின் மனம் பிரான்ஸின் துாக்க நிலையைக் கண்டு வருந்தியது.

பிரான்ஸை விடுவிப்பதற்கு ஜோன் தன்னாலான உதவிகளைச் செய்ய நினைத்தாள். சார்ள்ஸ் மன்னனைக் காண்பதற்காக தனது பயணத்தைத் தொடங்கினாள்.

> வரலாற்றில் இடம்பெற்றிருக்கும் வீரமங்கை அவள். மண் மீட்புக்காக இள வயதிலேயே வேங்கையெனப் புறப்பட்டாள். பாதி வெற்றி கண்ட நிலையில் பல குற்றச்சாட்டுகள் அவள் மீது சுமத்தப்பட்டன. கொலைப் பயமுறுத்தலுக்குக் கூட அவள் அஞ்சவில்லை.

ஆனால் அவளது முயற்சிக்கு பல தடைகள் ஆரம்பத்திலேயே வரத் தொடங்கின. 16 வயது இளம் பெண் மன்னனைக் காண விரும்புகிறாள் என்பதை வேடிக்கையாகக் கருதினர் காவலதிகாரிகள். இதனால் மன்னனை ஜோன் சந்திப்பதற்கு அவர்கள் அனுமதி வழங்கவில்லை. ஜோன் ஏமாற்றத்துடன் ஊர் திரும்பினாள்.

மனந்தளராது மீண்டும் மன்னனைக் காணப் புறப்பட்டாள் ஜோன்.

அவளது மன உரமும் இலட்சியத்தெளிவும் மக்களிடையே பரவி அவளுக்கு நன் மதிப்பைப் பெற்றுக் கொடுத்திருந்தன.

ஜோனை மீண்டும் கண்ட அரண்மனைக் காவலதிகாரி அவளின் மன உறுதியைக் கண்டு வியந்தான். மன்னனைச் சந்திப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தான்.

7ஆவது சார்ள்ஸ் மன்னன் அப்பொழுது, சினொன் நகரத்தில் இருந்தான். அவனைச் சந்திப்பதென்றால் எதிரிகளின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருக்கும் பிரதேசத்தைத் தாண்டியே செல்ல வேண்டும்.

ஜோன் அதற்கு அஞ்சவில்லை. தனது இலட்சியத்தில் திடமாக இருந்தாள். ஆணுடை தரித்து ஆறு ஆயுதந்தாங்கிய வீரர்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டு மன்னனைச் சந்திப்பதற்காகப் புறப்பட்டாள்.

பெண்கள் ஆணுடை தரிப்பது அந்தக்கால வழக்கப்படி மரபை மீறியதாகவே இருந்தது. இது அவளைப் புரட்சிகரப் பெண்ணாகக் காட்டியது.

ஒருவாறு ஜோன் மன்னனைச் சந்தித்தாள். தான் அவனுக்கு உதவ விரும்புவதைக் கூறினாள். துரும்பு கிடைத்தாலும் அதனைப் பற்றிக் கரை ஏறும் நிலையில் இருந்த மன்னனுக்கு ஜோன் ஆபத்பாந்தவளாகத் தோன்றினாள்.

ஆனாலும் அன்றிருந்த நிலையில் மன்னன் மட்டுமே எதனையும் தனித்து முடிவு எடுக்க முடியாது.

எந்த முடிவை எடுப்பதானாலும் மதச்சபையின் அனுமதி வேண்டும். அதன் பிரகாரம் ஜோனை மதச் சபையினரிடம் மன்னன் ஒப்படைத்தான். மதச் சபையினரால் ஜோன் 3 கிழமைகள் விசாரிக்கப்பட்டாள். அவளது மனத்திடமும் உறுதியும் மதச் சபையைச் சம்மதிக்க வைத்தன. சார்ள்ஸ் மன்னன் அவளது உதவியைப் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

தனது இரு சகோதரர்களின் துணையுடன் பல நூறு பேர் கொண்ட படை அணியுடன் ஜோன் யுத்தகளம் புறப்பட்டாள்.

சிறு பெண்ணின் தலைமையில் ஒரு படையா? என்று அதிருப்தி தெரிவித்தவர்களும் அப்பொழுது இருந்தனர்.

எதிரணியிலும் இதே எண்ணம் நிலவியது. சிறு பெண்ணின் தலைமையில் படையா? அவளாவது எம்மை வெற்றி கொள்வதாவது! என்ற இறுமாப்பு பிரித்தானியாவிடம் இருந்தது.

ஆனால் எல்லோரும் மூக்கில் விரலை வைக்கும் விதமாக 1429 ஏப்ரல் 29இல் அவள் ஒலையன் நகரில் வெற்றிக் காலடி வைத்தாள்.

மே 4இல் உக்கிர தாக்குதல் நடத்தப்பட்டது. ஜோனின் படையினர் அங்குள்ள முக்கிய கோட்டை ஒன்றைக் கைப்பற்றினர். பல தசாப்த கால போரின் திருப்பு முனையாக இது அமைந்தது.

ஜோன் ஓயவில்லை! அவளின் அடுத்த இலக்காக மே 6இல் இன்னொரு கோட்டையை நோக்கிப் புறப்பட்டாள். பெண்ணிடம் தோற்க விரும்பாத பிரித்தானியர் தந்திரமாகப் பின்வாங்க ஆரம்பித்தனர். அடுத்த நாள் அந்தக் கோட்டையும் ஜோனின் வசமானது.

இந்தப் போரில் ஜோன் காயமடைந்தாள். எனினும் இலட்சிய வெறியினால் அவள் விரைவிலே குணமடைந்தாள். மீண்டும் சமர். ஜூன் 18இல் இரு படைகளும் நேருக்கு நேர் பொருதின. இப்போரிலும் வெற்றி ஜோனுக்கே கிடைத்தது. பிரித்தானியப் படைகள் தோல்வி அடைந்தன.

முறைப்படி முடி சூடும்படி சார்ள்ஸை ஜோன் கேட்டபோது, சார்ள்ஸ் தயங்கினான். ஆனாலும் ஜோன் அவனை ஊக்கப்படுத்தி முடிசூடச் சம்மதிக்க வைத்தாள். முடிசூடுவதற்காக றீம் நகருக்கு சார்ள்ஸ் புறப்பட்ட போது பிரித்தானியர்களுக்கு ஆதரவான அந்த நகர வாசிகள் தமது எதிர்ப்பைக் காட்டினர்.

ஜோனின் படைகள் அவர்கள் மீதும் தாக்குதல் நடத்தின. அவர்களை அடக்கி முறைப்படி றீம் நகரில் சார்ள்ஸ் முடிசூட்டப்பட்டான்.


ஜோன் தனது அடுத்த திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கினாள். பாரீஸ் நகரின் விடுதலையே ஜோனின் அடுத்த இலக்காக இருந்தது. ஆனாலும் சார்ள்ஸ் மன்னன் அத்திட்டத்தைக் கைவிட்டு விட்டான். இதனால் ஜோன் ஏமாற்றம் அடைந்தாள். ஜோனும் படையினரும் திரும்பி வரும்படி மன்னனால் பணிக்கப்பட்டனர்.

ஜோன் திரும்பி வரும்போது கம்பீன் நகரம் மீண்டும் பேர்கண்டியர்களால் கைப்பற்றப்பட்டதை அறிந்து விசனமடைந்தாள்.

இருட்டான நேரம் நகருக்குள் ஜோன் நுழைந்த போது பக்கப்புறமாகச் சூழ்ந்து நின்ற ஆங்கிலேயரின் முற்றுகைக்குள் அகப்பட்டாள். தன் படைகள் ஆற்றைக் கடந்து செல்லும் வரை பின் புலத்தைக் காத்து நின்றவள் குதிரையிலிருந்து விழுந்து காயமுற்றாள். மீண்டும் குதிரையில் ஏற முடியாத நிலைமை ஏற்பட்டது.

சந்தர்ப்பம் பார்த்திருந்த பேர்கண்டியர்களினால் அவளும் அவளது சகோதரர்களும் சிறைப்பிடிக்கப்பட்டு வேர்மண்டிஸ் கோட்டைக்கு அனுப்பப்பட்டனர்.

சிறையிலிருந்து பல தடவைகள் தப்ப முயன்றாள் ஜோன். அவளைப் பாதுகாப்பான சிறை ஒன்றுக்கு மாற்ற முயன்றனர். ஆனால் அவள் கோபுர உச்சி ஒன்றில் இருந்து கீழே குதித்த போதிலும் மீண்டும் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டாள்.



அப்பொழுது பிரித்தானியரின் கட்டுப் பாட்டிலிருந்தது பாரிஸ் பல்கலைக் கழகம். விசாரணைக்காக அது ஜோனை விலை பேசியது.

இதற்கென பேர்கண்டி மன்னரிடம் விலை பேசப்பட்டது. 10,000 பிராங்க் பணத்துக்கு ஜோன் கையளிக்கப்பட்டு பிரித்தானியரின் பாதுகாப்பில் சிறையில் அடைக்கப்பட்டாள்.

அவள் பல முறை சிறையிலிருந்து தப்ப முனைந்ததனால் கடுங்காவல் வழங்கப்பட்டது. அவளது கால்களும் கைகளும் இரும்புச் சங்கிலிகளினால் கட்டப்பட்டன.

ஆங்கிலம் பேச மறுத்து பிரெஞ்சு பேசியது, ஆணுடை தரித்தது உட்பட 70 குற்றங்களுக்காக 12 தடவைகள் ஜோன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டாள்.

துன்புறுத்தப்பட்ட போதும் அவள் குற்றங்களை ஒப்புக் கொள்ளவில்லை. சிறையில் பெண்ணுடை தரிக்குமாறு கூறப்பட்டது. ஆனால் ஜோன் ஆணுடையிலேயே இருந்தாள். அவளுடைய கருத்துக்களை மதச் சபையினர் ஏற்கவில்லை.

மிகப்பெரும் போர் வல்லமை கொண்ட திறமைமிக்க நாட்டுப்பற்று மிக்க வீராங்கனையான ஜோன், மத நம்பிக்கைக்கு எதிரானவள், சூனியக்காரி என்று குற்றஞ் சாட்டப்பட்டு 1431 மே 30இல் உயிருடன் எரிக்கப்பட்டாள்.

ஆனாலும் அவளது இறப்பு, அவள் தொடக்கி வைத்த பிரெஞ்சு விடுதலைப்போரை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட மக்களின் எழுச்சியும் போராட்டமும் 7 ஆவது சார்ள்ஸின் கையில் பிரான்ஸை ஒப்படைத்தது.

ஜோனை தேசிய வீராங்கனையாக அறிவித்தான் சார்ள்ஸ் மன்னன்.

ஒரு பெண்ணின் வீரத்தினால் நாடு விடுதலை யானதை விரும்பாத உலகம், ஜோனின் வீரத்தை மறைத்து அவளுக்கு சமயச் சாயம் பூசி இறையருளி னால் வழி நடத்தப்பட்ட புனிதையாக வர்ணித்தது.

ஏது எப்படியிருப்பினும் தன் தாய் நாட்டை மீட்டெடுப்பதற்குப் போராடி வெற்றி பெற்ற வீரப் பெண் ஜோனுக்கு வரலாற்றில் ஒரு முக்கிய இடம் இருக்கும் என்பது உண்மையே!

## பல்கலைக்கழகத்தில் அசாருதீன் பாடம் நீக்கம்

கிரிக்கெட் ஊழல் குற்றச்சாட்டு எதிரொலியாக, இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் அசாருதீன் பற்றிய பாடத்தைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் இருந்து நீக்க பெரியார் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சேலம், தர்மபுரி, நாமக்கல் ஆகிய 3 மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளை உள்ளடக்கி சேலம் பெரியார் பல்கலைக்கழகம் செயற்பட்டு வருகிறது.

இதில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 38உம், தொழில் நுட்ப எஞ்ஜினியரிங் கல்லூரிகள் 12உம் ஆக மொத்தம் 50 கல்லூரிகள் உள்ளன.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பி.ஏ, பி.எஸ்.சி, பி.கொம் முதலாம் ஆண்டு படிப்பில் இந்தியக் கிரிக்கெட் அணிக் கப்டன் முகமட் அசாருதீன் பற்றிய பாடம் இடம் பெற்று இருந்தது.

அசாருதீன் மீது கிரிக்கெட் போட்டி முடிவுகளை நிர்ணயிக்கும் ஊழல் குற்றச்சாட்டு கூறப்பட்டு விசாரணை நடந்தது. அதைத் தொடர்ந்து அவர் கிரிக்கெட் போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பெரியார் பல்கலைக்கழக பாடத்திட்டத்தில் இருந்து அசாருதீன் பற்றிய பாடத்தை நீக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது.

இந்தக் கோரிக்கை பற்றி பெரியார் பல்கலைக்கழக நிலைக்குழுக் கூட்டத்திலும் சின்டிகேட் உறுப்பினர்கள் கூட்டத்திலும் பரிசீலிக்கப்பட்டு அசாருதீன் பற்றிய பாடத்தை நீக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து கிரிக்கெட்டில் செய்த சாதனை தொடர்பான அந்தப் பாடத்தை நீக்க பெரியார் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அது தொடர்பாக 38 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைச் சேர்ந்த முதல்வர்களுக்கும் பல்கலைக்கழகப் பதிவாளர் கடிதம் எழுதி உள்ளார்.

# சித்திரை பிறக்கு முன்னரே புத்தாண்டு அவசர பிரசவம்!

விக்கரம வருடம் விடைபெற்றுச் செல்ல விஷு புதுவருடம் பிறக்கிறது. இந்தப் புது வருடம் சித்திரை மாதம் தொடங்குவதற்கு முன்னரே பிறப்பது குறிப்பிடத்தக்கது.

வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பின்படி கலியுகாதி சுத்தினமான விக்கரம வருடம் பங்குனி மாதம் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முன்னிரவு 9.57 மணிக்கு விஷு வருடம் பிறக்கிறது.

சித்திரை மாதம் பிறப்பதற்கு முன்னரே புது வருடம் பிறப்பதால் நாட்டு நலன்கள் பாதிக்கப்படுமா?

இவ்வாறு கேள்வி எழுப்பப்படுகிறது. ஆயினும் பங்குனி மாதம் இறுதி நாளில் சித்திரைப் புதுவருடம் பிறப்பது இது முதல் தடவை அல்ல. 1997 ஆம் ஆண்டு ஈஸ்வர புது வருடம் இவ்வாறே பங்குனி மாதத்தில் பிறந்தது.

### பிறக்கும் நேரம்

அபரபக்ஷ ஷஷ்டித் திதியில் மூல நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் விக்கிரம வருட பங்குனி மாதம் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை முன்னிரவு 9 மணி 57 நிமிட நேரத்தில் விஷு வருஷம் பிறக்கிறது.

### புண்ணிய காலம்

வெள்ளிக்கிழமை பிற்பகல் நாடி 28 விநாடி 26 (மணி 5.57) முதல் அன்றிரவு நாடி 48 விநாடி 26 (மணி 1.57) வரை விஷு புண்ணிய காலமாகும்.

### ஸ்நான முறை

இப்புண்ணிய காலத்தில் யாவரும் மருத்து நீர் தேய்த்து சிரசில் கொன்றையிலையும் காலில் புங்கமிலையும் வைத்து ஸ்நானம் செய்யவேண்டும்.

### ஆடைகள்

வெள்ளை நிறப் பட்டாயினும் வெள்ளைக்கரை, சிவப்புக் கரைஅமைந்த புதிய ஆடையாயினும் அணிய வேண்டும்.

### ஆபரணம்

பவளமிழைத்த ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி, நறு மலர் சூட வேண்டும்.

### வழிபாடு

பிள்ளையார் மற்றும் குல தெய்வ வழிபாடு செய்து இயன்ற தான தருமங்களியற்றி குரு, பெற்றோர் முதலியோரை வணங்கி அவர்களிடம் ஆசி பெறுதல் வேண்டும்.

### தோஷ நட்சத்திரங்கள்

அச்சுவினி, கார்த்திகை 2,3,4ஆம் கால், ரோகினி, மிருகசீரிடம் 1,2ஆம் கால், மகம், மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் கால்.

### செய்ய வேண்டியவை

1ஆம் திகதி சனிக்கிழமை காலையில் நித்திய நைமித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு தத்தம் வீடுகளில் சூரிய பகவானுக்குப் பொங்கல், பூசை செய்ய வேண்டும்.

### உண்டிகள்

அறுசுவை உண்டிகளுடன் கடுகு, புளி, எள், நெல்லிக்கனி சேர்த்து அருந்தி தாம்பூலம் தரித்து கண்ணாடியில் முக தரிசனம் செய்ய வேண்டும்.



### கை விசேஷம்

சனிக்கிழமை (14.04.2001) காலை 6.41 முதல் 8.19 வரை காலை 8.31 முதல் 9.03 வரை பொதுவாக மாலை 9.57க்கும் அதிகாலை 1.57க்கும் இடையில் கைவிசேஷம் பரிமாறலாம்.

### மருத்து நீர்

தாளம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, சீதேவியார் செங்கழு நீர், வில்வம், அறுகு பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு ஆகியவற்றைச் சுத்தமாக்கிக் காய்ச்சி மருத்து நீர் எடுக்கப்படுகிறது. ஆலயங்களில் மருத்து நீர் பெறலாம்.

### நல்ல நேரம்

அனுசம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம் ஆகிய நட்சத்திரகாரர் வருட நேரத்தைத் தவற விட்டால் ஞாயிறு (15–4–2001) காலை 6.35 தொடக்கம் 8.59 வரை அவர்களுக்கு நல்ல நேரம்.

திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு சனி (14–4–2001) காலை 8.05 முதல் 8.59 வரை நல்ல நேரம்.

### திருக்கணித பஞ்சாங்கப் படி

திருக்கணித பஞ்சாங்கக்கணிப்பின் படி விக்கிரம வருஷம் பங்குனி மாதம் 31 ஆம் திகதி (13.04.2001) வெள்ளிக்கிழமை நடுஇரவு உதயாதி நாழிகை 44.05 (மணி இரவு 12–13) இல் ''விஷு'' புதுவருடம் பிறக்கின்றது.

அன்று நட்சத்திரம் மூலம். திதி அபரபட்ச ஷஷ்டி. அமிர்தயோகம். இது 60 வருடசுற்றுவட்டத்தில் 15ஆவது வருடமாகும். வெள்ளிக்கிழமை இரவு நாழிகை 34–05 (மணி இரவு 8–13) தொடக்கம் பின்னிரவு நாழிகை 54–05 (மணி பின்னரவு 4–13) வரையும் மேடசங்கிரமண புண்ணியகாலம் ஆகும். வருடம் பிறக்கும் போது உதயலக்கினம் ''தனுசு'' ஆகும்.

இப்புண்ணிய காலத்தில் சகலரும் சங்கற்பபூர்வமாக மருத்துநீர் தேய்த்து, தலையில் புங்கமிலையும், காலில் ஆலிலையும் வைத்து ஸ்நானஞ் செய்ய வேண்டும். வெண்மஞ்சள் பட்டாயினும், அல்லது மஞ்சள் கரை வைத்த வெள்ளி புதுவஸ்திரமாயினும் தரிக்கலாம்.

சனிக்கிழமை சித்திரை 1ஆம் திகதி அதிகாலைஎழுந்து ஸ்நானஞ்செய்து, நித்திய கருமங்களை முடித்து, கண்ணாடி, தீபம், பூரணகும்பம் முதலான மங்கலப் பொருட்களைத் தரிசித்து, சூரியனுக்கு பொங்கல், பூஜை, வழிபாடுகள் செய்ய வேண்டும்.


**மலையாள மாந்திரீகம்**



பிரிந்தவர்களை ஒன்று சேர்க்க, விட்டு சென்றவர்களை அழைத்து எடுக்க, கணவன், மனைவி தன்னை விட்டு பிரியாமல் இருக்க, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரயாண தடை நீங்க தடைப்பட்ட திருமணம் கைகூட, காதல் வெற்றிபெற, வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும். நேரடி தொடர்புகளுக்கு

T.P. 01-466271

கருணாகர பூசணம், உலக மலையாள மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி

Dr. P.K. Samy J.P. (Hon. Prof. IUMA)

162, Kotahena St, Mayfield Rd, Col-13
Tel: 01-342463 Fax: 0094-1-344831
E-Mail : drpksamy@sltnet.lk
Web site : www.imexpolanka.com/drpksami

வழமைபோல் நவரேல்பாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.










## சித்திரையாள் வருகிறாள்

விக்கிரம நங்கை
விடை பெற்று அகல்கின்றாள்
விஷு வருடச் சித்திரையாள்
விரைந்தோடி வருகின்றாள்
புத்தாண்டு பிறந்ததுவே
புதுமைகள் மலர்ந்திடுமா?
இன்பநிலையது பிறந்து
இனிய நாதம் மீட்டிடுமா?
அகிலத்தின் அகல்விளக்காய்
ஆரணங்காள் ஒளிர்கின்றாள்
புலம்பெயர்ந்தோர் வாழ்வினில்
புதுப் பூவாய் மலர்ந்திடம்மா
புவனமது பூரிக்க
புதுமகளே நீ வருவாய்
புஷ்பங்கள் தூவி
பூவையை வரவேற்போம்
காளையரின் வாழ்வினிலே
கானமிசைத்திடம்மா
யுத்தம் அகன்றிடவே
யுக்தியைப் பகன்றிடுவாய்!

மாவையூர்
வி. சண்முகசுந்தரம்

## நிறைவாய் பிறந்திடு

சித்திரை பிறந்திடும்
நாளினிலே
சீர்மைகள் பெருகட்டும்
நாட்டினிலே

யுத்த அவலங்கள்
ஒழியட்டுமே
ஒற்றுமை யெங்கும்
ஒளிரட்டுமே
சித்திரைத் தாயே
உன் வரவால்
எங்கும் அமைதி
நிலவட்டுமே

உறவுக ளென்றும்
நிலைத்திடவும்
உரிமைகள் யாவர்க்கும்
கிடைத்திடவும்
அறவழி நாட்டில்
தழைத்திடவும்
நிறைவாய் சித்திரை
பிறக்கட்டுமே.

க. கிருஷ்ணா


எமது வாடிக்கையாளர்கள்
விநியோகஸ்தர்களுக்கு
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

லிங்க் அயடீன் கலந்த
தூள் உப்பை
இலங்கையில்
முதன் முதலில்
அறிமுகப்படுத்திய
முன்னோடிகள்.

LINK - Salt to taste

Link Imports & Exports (Pvt) Ltd.
86/1, Chatham Street, Colombo-01
Sri Lanka.
Tel : 321085 Telefax : 435959
E-mail : link@scienceland.lk

# புத்தாண்டுக் கொண்டாட்டம் புது முறையில்



சித்திரைப் புதுவருடப் பிறப்பில் ஜோதிடர்கள் கணித்துக் கூறிய புண்ணிய காலத்தில் தமிழ் மக்கள் தலையில் மருத்து நீர் வைத்துப் புனித நீராடுவர். பின்னர் புத்தாடை தரித்து தெய்வ வழிபாடு செய்வர். கைவிஷேசம் வழங்குவது அல்லது வாங்குவது முக்கிய நிகழ்ச்சியாக இருக்கும்.

கிராமப் புறங்களில் பண்டைய தமிழர் விளை யாட்டுக்கள் நடைபெறும். போர்த்தேங்காய் அடித்தல், மாட்டுவண்டிச் சவாரி, பட்டம்பறக்க விடுதல் போன்றவை கோலாகலமாக நடக்கும். இன்றைய யுத்த சூழ்நிலை யில் இந்தக் கோலா0கலங்கள் இல்லை. சமய சம்பிரதாயங்கள் தான் இடம்பெறுகின்றன.

இந்த சித்திரைப் புத்தாண்டு விஷு ஆண்டு. இது அறுபது ஆண்டுக்கொரு முறை வரும். இப்படி ஒவ்வொரு ஆண்டும் அறுபது ஆண்டுக் கொருமுறை வரும். இது ஒரு வட்டம். இந்த வட்டத்தில் வரும் ஒவ்வொரு ஆண்டும் அதன் இயல்பு மாறாது வரும்.



குருவாயூரப்பன்

## விஷு கனி

இந்தப் புத்தாண்டுத் தினத்தை "விஷு கனி" என்று கேரள மாநிலத்தினர் கொண்டாடுவது வழக்கம். கேரளத்தில் வாசம் செய்யும் குருவாயூரப்பன் புகழ் இன்று உலகமெல்லாம் பரவி யுள்ளது. இந்தக் கண்ணனுக்கு சித்திரை விசு ஆன இன்று விசேஷமான தினமாகக் கூறப் படுகிறது.

"கருத்த மனம் வேண்டா கண்ணனல்லால் தெய்வ மில்லை" என்று நம்மாள்வார் புகழ்ந்து பாடுகிறார்.

"சித்திரை விஷு" என்னும் சித்திரை மாதப்பிறப்பு தமிழ் வருஷப்பிறப்பாகக் கருதப்படுகிறது என்றாலும் இந்தியாவில் தமிழ் மக்கள் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகிற அளவுக்கு இந்தத் தமிழ் வருஷப் பிறப்பைக் கொண்டாடுவது இல்லை. ஆனால், மலையாளிகளுடைய சிறப்பான பண்டிகை இந்த விஷுதான்.

## புதுமைப் பண்டிகை

தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பை கேரளத்தில் 'விஷு' பண்டிகையாக, விசேஷமான முறையில் கொண்டாடுகிறார்கள். அவர்களுக்கு ஆண்டுப் பிறப்பு ஆவணி மாதத்தில் அவர்கள் பின்பற்று வது கொல்லம் ஆண்டைத்தான்.

பங்குனி முப்பத்து ஓராம் தேதி நள்ளிரவுக்குப் பின் சித்திரை ஆரம்பிக்கும் போது 'விஷு கனி காணல்' என்ற அந்தப் புதுமையான பண்டிகை நடைபெறும். அரிய இயற்கைச் செல்வங்களைப் புனித நாள் தோன்றும் நேரத்தில் முதன்முதலாகக் காண்பதை ஒரு புண்ணியமாகக் கருதுகிறார்கள்.

பங்குனி மாதம் முப்பத்து ஓராம் திகதி இரவு வீட்டிலுள் ளவர்கள் உறங்கத் தொடங் கியதும் அந்த வீட்டின் மூத்தவர் அந்தக் கனி காட்சியை முறையாக அமைப்பார்.

வீட்டில் வழக்கமாக பூஜை நடக்கும் இடத்தில், அல்லது பொருத்தமான சுத்தமான ஓர் இடத்தில், மையமாக முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்து அதை நகைகள், மலர்களால் அலங்கரிப்பர்.

இரு பக்கமும் தங்கம் போல் தேய்த்துப் பளபளக்கும் குத்துவிளக்குகளை வைத்து திரியும் நெய்யும் இடுவர். நெல்லும் வைப்பர். கிண்ணங்களில் நிரம்ப பருப்பு முதலிய தானி யங்களையும் வைப்பர்.

## நாலு அலங்காரம்

இவைகளைச் சுற்றி பெரிய புஷ்டியான வாழைப் பழக் குலை, நேத்திரங்காய்க்குலை, பலாப்பழம், பலாக்காய்க் குலை, மாங்காய்க்குலை, கொத் துக்கொத்தாகக் கொன்னைப் பூ, தென்னம்பூ, மஞ்சள் கொத்து, பூசனிக்காய், வெள்ளரிக்காய், சேனை இன்னும் சிறந்த பொருள்களை எல்லாம் ஒவ்வொன்றும் கொலுபோல அலங்காரமாக வைப்பார்கள்.

ஒரு கிண்ணத்தில் சில்ல றைப்பணம், தங்கப் பவுண், முழு வெள்ளி ரூபாய் இவை களையும் இந்த தானியக் கிண்ணங்களுக்கு மேல் வைத் திருப்பார்கள்.

## அரிய காட்சி

நள்ளிரவு கழிந்ததும் வீட்டின் முதியவர் நெருப்புப் பெட்டியை எடுத்துக் கொண்டு இருட்டில் அந்த இடத்துக்குச் செல்வார்.

குத்துவிளக்குகளை ஏற்றி நமஸ்காரம் செய்து கண்ணா டியில் முகம்பார்ப் பார்.

அதன்பின் அங்குள்ள ஒவ் வொரு பொருளையும், அகலக் கண்விழித்து ஒவ்வொன்றாகப் பார்ப்பார்.

தங்க வெள்ளிப் பொருள் களைக் கண்களில் ஒற்றிக் கொண்டு, மீண்டும் நமஸ் கரித்துப் புனித நாளில் முதன் முதலாக அரிய காட்சி களைக் கண்ட நிறைவு அடை வார்.

அடுத்தபடியாகத் தொடர்ந்து வயது வரிசைப்படி கனி காண எல்லோரையும் எழுப்பிக் கையைப் பிடித்து அழைத்து வருவார். ஏன் என்றால் அவர்கள் கண்ணை மூடியபடிதான் வரவேண்டும். கனியின் பக்கத்தில் வந்ததும் தான் கண் திறக்க வேண்டும்.

## முக்கியம்

இப்படியாக வீட்டிலுள்ள சின்னஞ் சிறு குழந்தைகள் வரை அனைவரையும் விஷு கனி காண வைப்பார்கள்.

இவற்றை எல்லாம் விட முக்கியமானது வருஷப் பிறப்பன்று முதன்முதலில் ஸ்ரீ குருவாயூரப்பன் முகத்தில் விழிப்பதுதான்.

அந்த வருஷம் முழுவதும் நல்ல பலன்களைத் தரும்" என்ற உயர்ந்த நம்பிக்கை காரணமாக அதற்கு முந்திய இரவே ஆண்களும் பெண்களும் குழந்தை களுடன் ஆயிரக் கணக் காணோர் "குருவாயூர்" கோயிலுக்குச் சென்று அதன் பிரகாரங்களில் படுத்துக் கிடப்பர். காலை மூன்று மணிக்குக் கோயில் நடை திறந்ததும் கண்களை மூடியபடியே விழுந்தடித்து ஓடிவந்து ஸ்ரீ குருவாயூரப்பனைத் தரிசித்து விட்டே மற்றவர்களைப் பார்ப்பர்.

பொழுது விடிந்ததும் வீட்டுத் தலைவர் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் காட்சியில் வைத்திருந்த சில்லறையை எடுத்துக் கொடுப்பார். இதில் தொகையினுடைய அளவு முக்கியம் அல்ல. நல்ல நாளில் நல்ல காட்சியில் வைக்கப்பட்ட பொருள் என்று கண்ணில் ஒற்றிக் கொண்டு பெருமை அடைவார்கள்.


எமது அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், மற்றும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த இனிய புத்தாண்டு வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம் 256



A.M.T. TRANSPORT SERVICE
Exporters, Importers,
Government Transport Contractors
Clearing and Forwarding Agents

THANUJAA ENTERPRISES
Importers and dealers in food items.
Electrical Appliances and Hardwares

No. 178,
Central Road,
Colombo-12.
Tel : 451716,
334976
334985
074-612521
Fax : 342138

No. 102/4,
Wolfendhal Street,
Colombo-13
Tel : 470465,
433391/93
Fax : 342138

அதிக சக்தியைத் தந்து வயிற்றுப் போக்கை நிறுத்தும்
பாரம்பரியமாக வைத்தியர்கள் அறிவுறுத்தும் அரறூட் கஞ்சி குழந்தைகள் வயதானவர்கள் எல்லோருக்கும் போஷாக்குமிக்க உணவு-போலிகளைத் தவிர்ப்பதற்கு பிரவுன்சன் அரறூட் மாவு என்று கேட்டு வாங்குங்கள்.
Brownson Arrowroot
பிரவுன்சன் அரறூட் மாவு
BROWNSON INDUSTRIES
139, பாங்ஷால் வீதி, கொழும்பு -11.
T.P: 327197, Fax: 458507

Jewell Craft 254
22Kt. Jewellers Gem Merchants & Pawning Centre.
உங்கள் இராசிகளிற்கு ஏற்ற சகல விதமான நவரத்தினக் கற்களையும் தரமான விலையில் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.
Show Room
403, Galle Road
Wellawatta
Colombo - 06.
Tel : 595338,597230
596806
Office
Vijaya Jewellery
104, Main Street
Maskeliya.
Tel : 052-77205
052-77487

அச்சு வேலைகளுக்கும்
தன்னிகரற்ற
ஒரே அச்சகம்
அரசன் அச்சகம்
ARASAN PRINTERS
Offset, Letterpress and Silk Screen Printers
30, Hyde Park Corner,
Colombo - 02.
Tel : 326482,422393
Fax : (94-01) 422393
255

மிருனாஸ் சுப்பர்
வீட்டிற்கு தேவையான சகல விதமான மளிகைப் பொருட்கள், இறைச்சி வகைகள், ஐஸ்கிரீம், சொக்லெட், பால்மா, சமையலுக்கான அனைத்து தேவைகளுக்கும்





நம்பிக்கையுடன் நாடுங்கள்
MIRUNA'S SUPER
342, Aluthmawatha Road, Colombo-15.
Tel: 525147 Fax: 075-364298
E-mail: miruna@sri.lk

# திருகோணமலை டாக்டரின் சுவாரசியமான கதை

சமாதான வெளிச்சத்தால் குளிர்ந்துள்ள தமிழர்களின் மனம் போன்று, கோடை மழையால் தேரடி மணலும் அன்று ஈரமாக இருந்தது.

அதனைப் பொருட்படுத்தாது அனைவரும் அரட்டைக்காக தேரடியில் அமர்ந்திருந்தனர்.

''மாஸ்டர், சமாதானம் வந்தாலும் சந்தோஷம் வருமா என்று போனமுறை சந்தேகம் எழுப்பியிருந்தீர்கள். எனக்கென்னவோ, யோசித்துப் பார்த்ததில் அப்படிப் பயப்படும் அளவுக்கு ஒன்றும் வராது என்றுதான் தோன்றுகிறது, அரட்டையை ஆரம்பித்தான் லோகன்.

அதற்கு மாஸ்டருக்குப் பதிலாக விநாசியர் விடை கூறத் தொடங்கினார்...

''மாஸ்டரின் சந்தேகத்திலும் காரணம். இருக்கு தம்பி. சமாதானத்துக்குப் பிறகு, தமிழ்ப் பிரதேசக் காடுகள் எல்லாம் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலை இருந்தால், அந்தப் பகுதியிலை புதிய குடியேற்றங்களை ஆரம்பிக்கிற அதிகாரம் அவையிட்டை போகும்.

''அந்தச் சமயத்திலை அந்தப் பகுதியில் தங்கடை ஆள்களை அதிகமாகக் குடியேற்றினால், தமிழர்கள் தங்களுக்கு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கிற உரிமையிலை அவையும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்குவினம்.

''இதன் மூலம் தமிழ்ப் பிரதேசத்தின் எல்லைப் புறங்களில் அவையின்ரை செல்வாக்கு கூடும். இருக்கிற கொஞ்சத் தமிழ் எம்.பி மார்களும் பிறகு, அவையின்ரை வாக்குகளுக்காக சில விஷயங்களை விட்டுக் கொடுக்கும் நிலைக்கு தள்ளப்படுவினம். பிறகு இவ்வளவு கஷ்டங்களை அனுபவிச்சதுக்கு பலன் இல்லாமல் போகும்'' முடித்தார் விநாசியர்.

அது மட்டுமில்லை என்று ஆரம்பித்த மாஸ்டர், ''தங்களுக்கு பிடிக்காத கட்சியின் கட்டுப்பாட்டிலை உள்ள மாநகராட்சி நிர்வாகத்தை கலைக்கச் சொல்லி போராட்டங்கள் நடத்திற காலம். நிலைமை அப்படி இருக்கும் போது, சமாதானத்துக்குப் பிறகு, தமிழ்ப் பகுதியின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை, விரும்பினால் கலைக்க மத்திய அரசுக்கு அதிகாரம் இருந்தால் என்ன நடக்கும்?'' என்ற கேள்வியை எழுப்பினார்.

''வேற என்ன நடக்கும், தங்களுக்கு வால் பிடிக்கிறவையைத் தூண்டி விட்டு, ஏதாவது பிரச்சினைகளை உருவாக்கி, அதனைக் காரணம் காட்டி மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய அரசாங்கத்தை கவிழ்க்க நேரிடும் அப்படித்தானே இந்தியாவிலை பல மாநிலங்களிலை நடக்குது, விளக்கமளித்தான் டானியல்.

''காலப்போக்கிலை எங்கடை தமிழ்க் கட்சிகளின் துணையோடை அவை இங்கேயும் கால்பதிப்பினம், பிறகு 'பழைய குருடி கதவைத் திறடி' என்ற கதைதான்,'' அதுவரை அமைதியாக இருந்த சின்னாச்சி கூறினாள்.

''அவை இங்கை காலடிக்க இன்னொரு முக்கியமான விஷயமும் இருக்கு என்ற மாஸ்டரை மற்றவர்கள் ஆவலுடன் பார்த்தனர்.

மாஸ்டர் விளக்க ஆரம்பித்தார்.

''சமாதானத்துக்குப் பிறகு தமிழருக்கு என்று ஒரு பிரதேச அமைப்பு உருவாக்கப்பட்டால், அது, தனக்கு வேண்டிய நிதி உதவிகளை, கடன்களை நேரடியாக வெளியில் இருந்து பெறுவதற்கு அதிகாரம் இருக்க வேணும்.

''இல்லாட்டி எல்லாவற்றுக்கும் மத்திய அரசிடம் தான் கையேந்த வேண்டி வரும்.

''தங்களுக்கு ஏற்ற கட்சி இங்கு ஆட்சியில் இருந்தால் அவையும் எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பினம். இல்லாவிட்டால் கொடுப்பது குறையும். எங்கடை சனமும் தேவையானது கிடைக்கும் என்ற நப்பாசையிலை அவை பக்கம் சாய்வினம்'' என்று விசனத்துடன் குறுக்கிட்டாள் சின்னாச்சி.

''அப்படித்தான் நடக்கும். பிறகு நாங்கள் பட்ட கஷ்டங்களுக்கு அர்த்தமில்லாமல் போயிடும். என்று முடித்தார் மாஸ்டர்.



## தேரடி அரட்டை

''அப்ப சமாதானப் பேச்சிலை எல்லாவற்றையும் சரியாய்ப் பேசி முடிக்க வேணும் என்று சொல்லுறியள்'' கேட்டான் டானியல்.

''பேசும் ஆள்கள் ஒழுங்காப்பேசுவினம். நாங்கள்

''இல்லாட்டி எல்லாவற்றுக்கும், மத்திய அரசிடம் தான் கையேந்த வேண்டிவரும்.

''தங்களுக்கு ஏற்ற கட்சி இங்கு ஆட்சியில் இருந்தால் அவையும் எல்லா வசதிகளும் செய்து கொடுப்பினம். இல்லா விட்டால் கொடுப்பது குறையும். எங்கடை சனமும், தேவையானது கிடைக்கும் என்ற நப்பாசையிலை அவை பக்கம் சாய்வினம்.'' என்று விசனத்துடன் குறுக்கிட்டாள் சின்னாச்சி.

குறுக்காலை இழுக்காமல், மனம் சலிக்காமல் ஆதரவு கொடுத்தாப் போதும். எல்லாம் நல்லபடி நடக்கும்.'' கதைக்கு முற்றுப் புள்ளி வைத்தாள் சின்னாச்சி.

''திருகோணமலையிலை இருந்து சிநேகிதன் வந்தவன். அவன் சொன்ன கதையைக் கேட்டால், சமாதானத்துக்குப் பிறகு நாங்கள் இன்னொரு ஆள்களிட்டை சிக்கப் போறம் என்று படுகுது'' என்று தொடங்கினான் லோகன்.

''இதென்ன புதுக்கதை தம்பி'' கேட்டார் விநாசியர்.

சொல்லத் தொடங்கினான் லோகன்.

''திருகோணமலையிலை திருப்புகழ் பாடிய வீதியிலை தேவாலாய அதிபதியான அறுவைச் சிகிச்சை நிபுணர் இருக்கிறாராம். அவரிடம் ஒருத்தர் மருத்துவம் பார்க்கச் சென்றாராம். நோயாளி அறுவைச் சிகிச்சை நிபுணரிடம் தனது நோயைப் பற்றிச் சொல்லிவிட்டு, இந்த நோய்க்கு முன்னர் இன்னொரு மருத்துவரிடம் வைத்தியம் பார்த்ததையும் சொன்னாராம். அவ்வளவுதான். அறுவைச் சிகிச்சை நிபுணருக்கு பயங்கரக் கோபம் வந்திட்டுதாம்.

''உமது நோயை என்னால் குணப்படுத்த முடியும். ஆனால் நீர் இன்னொரு மருத்துவரிடம் போய்விட்டு வந்தப்படியால் நான் உமக்கு சிகிச்சை அளிக்க மாட்டேன். வேணுமென்றால் கொழும்புக்குப் போய் வைத்தியம் பாரும் என்று அறுவைச் சிகிச்சை நிபுணர்'' சாமியாடினாராம்.

''சிகிச்சைக்காகப் போனவர் நீயெல்லாம் ஒரு மனுசனே என்று காறித் துப்பிப் போட்டு வந்திட்டாராம்.

''அறுவைச் சிகிச்சை நிபுணர் தனியார் மருத்துவ மனையில்தான் இப்படி என்றால், வேலை பார்க்கும் பொது மருத்துவ மனையில் இதைவிட மோசமாம். தனக்குப் பிடிக்காத மருத்துவர்களின் வார்ட்டுகளில் இருந்து வரும் நோயாளிகளை புறக்கணிப்பாகத்தான் நடத்துவாராம்.

''இதனால் கோபம் கொண்ட மற்ற மருத்துவர்கள் இவர் பார்த்த நோயாளிகளைப் புறக்கணிக்கத் தொடங்கியுள்ளனராம்.

''இவையின்ரை கௌரவப் பிரச்சினையை திருகோணமலை நோயாளிகள் மாட்டிக் கொண்டு முழிக்கினமாம்''.

''இப்படி ஒன்று, இரண்டு டொக்டர்மாரின் கோணல் புத்தியாலை, ஒழுங்கா வேலை செய்யிற டொக்டர்களுக்கும் எல்லே கெட்ட பெயர்'' கவலைப் பட்டாள் சின்னாச்சி.

''சமாதானம் வந்த பிறகு, எங்களுக்கு ஒழுங்கான அரச நிர்வாகிகள் கிடைக்காமல் போனால், திருகோணமலை அறுவைச் சிகிச்சை நிபுணர் போன்ற தலைக்கனம் பிடிச்ச ஆள்களிட்டை மாட்டிக் கொண்டு அவதிப்பட வேண்டியது தான்'' என்றார் விநாசியர்.

எழுந்து நின்று வேட்டியை இறுக்கினார் மாஸ்டர். மற்றவர்களும் எழுந்தனர்.

கடலைக் கடையைக் கட்டத்தொடங்கினாள் சின்னாச்சி.

—ஏகலைவன்

## வாசகர் இதயம் பேசுகிறது

சுடர் ஒளியில் அரசியல் செய்திகளைத் தொகுத்துத்தரும் பாணி சிறப்பானது. வியாழக் கிழமையே எமது கைகளுக்கு சுடர் ஒளி கிடைக்கிறது. மகிழ்ச்சி தருகிறது.

—ஜே.எம்.பாரீஸ், தெல்தெனிய

சுடர் ஒளியில் புதுப்புது அம்சங்கள் எம்மைப் பலவிதத்திலும் கவர்ந்து விடுகின்றன. வாசகர்களுக்கு சாள்ஸ் கிரிக்கெட் பரிசுப் போட்டியைத்தந்து அதிரவைத்து விட்டார்கள். தினசரி சுடர் ஒளியை நாம் பெற்று மகிழும் நாள் விரைவில் வரட்டும்.

—அ. அரசரெத்தினம், சேனையூர் 06.

ஒளிவு, மறைவு, இன்றி உண்மைகளை வெளிக்கொணரும் சுடர் ஒளிக்கு நிகராக வேறு பத்திரிகை இல்லை.

—ம.துரைமுருகன், அவிசாவளை

இந்தியாவில் ஆயுத ஊழலில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டிருக்கிறார்கள். இலங்கையில் நடக்கும் ஆயுதக் கொள்வனவு மோசடிகளையும் பத்திரிகைகள் அம்பலப்படுத்த வேண்டும்.

—முஹமது ஹஸனி, கல்முனை —07

மலையக சமுதாயத்தினரின் அவல நிலையை அட்டைப்படத்தில் வெளியிட்டு ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய சுடர் ஒளிக்கு நன்றி.

—ரா.சேகர், கம்பளை

உண்மைச் சம்பவங்களையும், தில்லுமுல்லுகளையும் தெரியப்படுத்தும் சுடர் ஒளியின் பங்கு சிறப்பானது.

—எம்.எம்.ஹுஸைன், வத்தளை

''மிஸ்டர் க்றோ'' கண்டறிந்து கூறும் சம்பவங்கள் எம்மைக் கண்கலங்கவைத்து விடுகின்றன.

—ஆமினா அசினி, கல்முனை—7

சுடர் ஒளி தரும் வடபுலத்து உண்மைகள் எம்மைக் கவர்ந்து இழுத்துவிட்டன.

—எஸ்.துரைராஜ், டைரபா மேற்பிரிவு


**Satha Video**

PHOTO GRAPHERS & VIDEO GRAPHERS

ஸ்தாபனத்தார் தமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தமது புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றனர்

**ORCHARD BUILDING**

7-2/2, (Secont floor) Galle Road, Colombo-06, Sri Lanka.
Tel:584191, 591812 Mobile:077-304027
Fax : 94-1-591812

**சங்கீதா ஜுவலரீஸ்**

ஸ்தாபனத்தார் தமது வாடிக்கையாளர்கள் அன்பர்கள், அபிமானிகள் அனைவருக்கும் தமது உள்ளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார்கள்.



Sangeetha

Dealers in 22kt Gold Jewellery
333C, Galle Road, Wellawatte, Colombo - 06. Tel : 500682, 585321

223

**Retina Institute of Business Studies**

RIBS

SPOKEN ENGLISH

for ELDERS, SCHOOL LEAVERS & KIDS

Express Stream 1 Month Only

TOEFL

Duration 3 Months

3 Months Duration
Fully Packed Preparation for Computer Based Test

- *Use of original latest cassettes and lessons on CD's*
- *Regular Handouts based on the latest materials*
- *More enough Exercises in listening comprehension & structure*
- *Hands on training in our modern computer lab for answering TOEFL*

**Computer Studies**

- Kids Computing
- MS office 2000
- Web Designing
- Graphic Designing
- Diploma in Computer Studies
- Diploma in Computerized Accounting
- Visual Basic
- Diploma in Hardware Engineering

Special Features of at RIBS

Every Course is Personally Designed and evaluated by a Qualified Team, Dedicated Team of Lecturers and Instructors to Guide Students on a hand on basis, Unlimited practical Hours, Special attention for children by trained instructors (also trained in Child Psychology), Internationally recognized Certificates and Easy Terms of Payment.

**Retina Institute of Business Studies**

2. 1/2, Edward Lane., Colombo-03., Tel : 507781,507782. Fax:507781
E-mail : study@retina.lk

# வன்னிக்கு ஜூஸ், ஜெலட்டின் அனுப்பி அரசு பம்மாத்துதா?

## எரிபொருள், சீமெந்து எங்கே என்று மக்கள் கேள்வி

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு பொருளாதாரத் தடை எதுவுமே கிடையாது என்று அரசு அறிவித்து வந்தது.

இது பற்றி ஏற்கனவே இதே பத்தியில் குறிப்பிட்டு அமுலில் உள்ள தடைகள் பற்றி விலாவாரியாக விவரித்திருந்தோம்.

ஆனால், கடந்த மாதம் 22 ஆம் திகதி தடாலடியாக ஓர் அறிவிப்பை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டீ சில்வா வெளியிட்டிருக்கிறார். இதன்படி.

* ஜூஸ் வகைகள்
* ஜெலட்டின்
* றோணியோ பேப்பர்
* பிறவுண் பேப்பர்
* கழிம்பு மருந்துகள் (பாம்வகை)
* விவசாய உபகரணங்கள்
* மலேரியாக் குளிசைகள்
* தானிய வகைகள்
* நூடில்ஸ் (உடன் தயாரிக்க முடியாதவை)
* குடிவகைகள்
* சவர்க்காரம்
* சிறுவர்களுக்கான மூன்று சில்லு சைக்கிள்கள்
* பாய்
* சூப் வகைகள்
* தேங்காய் எண்ணெய்
* பிறிஸ்டல் போர்ட்
* பிசின்
* பனடோல், டிஸ்பிரின் போன்ற மருந்து வகைகள்
* விற்றமின் குளிசைகள்
* அரிசி
* முட்டை
* குளிர்பானங்கள், பழச்சாறுகள்
* சிகரெட் வகைகள்
* கோழிக்குஞ்சு
* பச்சை, கறுப்பு, பிறவுண் தவிர்ந்த ஏனைய பெயின்ட் வகைகள்

என்பன வற்றிற்கான தடை நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் பொருட்களை கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தமாக எடுத்துச் செல்ல இதுவரை அனுமதிக்கப்பட்டன என்றும் — இனிமேல் பிரஸ்தாப பொருட்களை பயணிகள் தமது கையிலேயே எடுத்துச் செல்ல அனுமதிக்கும்படி படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தப் பொருட்களின் தடை நீக்கத்தால் ஏற்பட்டுள்ள அனுகூலங்கள் பற்றி விசாரிக்க முற்பட்டோம்.

வன்னிக்கு ஜூஸையும், ஜெலட்டினையும் சூப்பையும் அனுப்பிவிட்டு அரசு பம்மாத்துக்காட்ட முயற்சிப்பதாக பொது மக்கள் பலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர். அத்தியாவசியப் பொருட்களான எரிபொருள்கள், சீமெந்து வகைகள் எங்கே என்று அவர்கள் கேள்வி எழுப்பினர்.

வன்னிக்கு வியாபார நோக்கமாக பொருட்களை எடுத்துச் சென்று விற்றுவிட்டு வவுனியாவுக்கு வந்து போகும் ஒரு வியாபாரியிடம் இந்த பட்டியலைக் காட்டி விபரம் கேட்டோம். அவர் விழுந்து விழுந்து சிரித்தார். இவைகளுக்கெல்லாம் இதற்கு முன்னர் தடை இருந்ததென்று யார் சொன்னதென்று அவர் எம்மையே திருப்பிக் கேட்டார்.

இது பற்றி விலாவாரியாகக் கேட்டபோது எமக்கும் இந்தத் தடை நாடகம் பெரும் சிரிப்பைத்தான் தந்தது.

அதாவது தற்போது பயணிகள் தங்களது கைகளில் இரண்டு பைகளை மட்டுமே எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் அந்த இரண்டு பைகளும் 40 கிலோ நிறைக்கு உட்பட்டே இருக்க வேண்டும் என்றும் கண்டிப்பான உத்தரவு இருந்து வருகிறது. இந்த நிலையில் பொருட்களின் பட்டியலை அதிகரித்து என்ன பிரயோசனம் . என்று கேட்டார் அந்த வியாபாரி.

இது தவிர பட்டியலில் உள்ள பொருட்களைப் பார்த்தால் தேங்காய் எண்ணெய் கொண்டுபோக ஏற்கனவே அனுமதி இருந்து வருகிறது. அதனால் ஒவ்வொரு பயணியும் 5 லீற்றர் தேங்காய் எண்ணெயை எடுத்துச் செல்லக் கூடியதாக இருக்கிறது . மிகக் கூடுதலாக ஒருவர் ஒரு பிளாஸ்டிக் கானில் மட்டுமே தேங்காய் எண்ணெயை எடுத்துச் செல்வார்.

அதற்குமேல் சுமை காரணமாக எவரும் தேங்காய் எண்ணெயை எடுத்துச் செல்ல விரும்புவதில்லை என்றும் அவர் கூறினார்.

அடுத்து சவர்க்காரம், பிறிஸ்டல் போர்ட், பிறவுண் பேப்பர் என்பன கூட்டுறவுச் சங்கங்களினால் எடுத்துச் செல்லப்பட்டு வன்னியில் தாராளமாகக் கிடைக்கின்றன.

வவுனியாவில் 14 ரூபா 50 சதமாக விற்கப்படும் சவர்க்காரம் ஒன்றை வன்னியில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் 18 ரூபாவுக்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இந்த நிலையிலும் இதுவரை ஒவ்வொரு பயணியும் 5 சவர்க்காரக் கட்டிகளை எடுத்துச் செல்ல அனுமதி உண்டு.

ஆயினும் சொற்ப பணத்துக்காக ஏன் இவைகளைக் காவிச் சுமப்பானென பயணிகள் சவர்க்காரத்தை எடுத்துச்



புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் பொது மக்களின் பொதிகள் படையினரால் நுணுக்கமாகப் பரிசோதிக்கப்படுகின்றன.

செல்வதே இல்லை. இதே போன்ற நிலைதான் பிறிஸ்டல் போட், பிறவுன் பேப்பர், றோணியோ பேப்பர் ஆகியவற்றுக்கும்.

அடுத்து, பைக்கெட்டில் அடைக்கப்பட்ட பழரசம், சூப் வகைகள் ஜெலட்டின் வகைகள் என்பன.

தேசிக்காய், பழவகை, இளநீர் என்பன வன்னியில் தாராளமாகக் கிடைக்கும் நிலையில் — பழரசங்களும் , மீன், இறைச்சி போன்றனவும் தாராளமாகக் கிடைக்கும் நிலையில் — சூப் வகைகளையும், ஜெலட்டினையும் வன்னிவாழ் மக்கள் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்பதுதான் உண்மை நிலை.

இந்த நிலையில் பழரச வகைகள் , சூப் வகைகள் ஆகியவை மீதான தடையை நீக்கியதால் என்ன பெரிய சாதனை நிகழ்ந்து விடப் போகிறது என்றார் அந்த வியாபாரி.

அடுத்த விடயம்தான் வேடிக்கையானது. மதுபான வகைகளுக்கும் சிகரெட் வகைகளுக்கும் தடை விலக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்புதான் இதுவரை இவைகள் தடை செய்யப்பட்ட பொருள்களாக இருந்திருக்கின்றன என்ற விடயமே தெரியவருகிறது.

ஆனால் அதில் உண்மை என்னவென்றால் மதுபான வகைகள், சிகரெட் வகைகள் என்பனவற்றை தமது பகுதிக்குள் எடுத்து வர வேண்டாம் என்று புலிகள் ஏற்கனவே தடை விதித்திருக்கிறார்களே தவிர அரசாங்கம் அல்ல.

இந்த நிலையில் அரசாங்கமென்ன மதுபான வகைக்கும், சிகரெட் வகைக்குமான தடையை விலக்குவது? என்று கேட்டார் அவர் . புலிகள் போட்டிருக்கும் தடையை அரசாங்கம் விலக்குகிறதோ என்றும் அவர் கேட்டார்.

அதேபோல் நூடில்ஸும் வன்னியில் விரும்பி உண்ணப்படும் உணவல்ல. ஆயினும் அது கூட்டுறவுக் கடைகளில் தாராளமாகக் கிடைக்கிறது. அதனால் பயணிகள் நூடில்ஸை எடுத்துச் செல்வதில்லை என்றார்.

அடுத்து முட்டைக்கான தடை நீக்கமும் விசித்திரமானது என்றார் அவர். வன்னியில் கோழி வளர்ப்பு தாராளமாக நடக்கிறது. தனியாரும் சரி. விடுதலைப் புலிகளும் சரி பெரிய பெரிய கோழிப்பண்ணைகளை நடத்திவருகின்றனர்.

இந்த நிலையில் அங்கு நல்ல ஊர்க்கோழி முட்டை ஒன்று 4 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. ஆனால் வவுனியாவில் முட்டை 5 ரூபா.

எனவே இந்த நிலையில் எவராவது வவுனியாவிலிருந்து வன்னிக்கு முட்டையை எடுத்துச் செல்ல முன்வருவார்களா? என்றும் கேள்வி எழுப்பினார் அந்த வியாபாரி.

மேலும் பனடோலுக்கு ஒரு கணக்குப் போட்டுக் காட்டினார் அவர்.

வன்னிக்குப் பயணம் செய்யும் ஒருவர் 5 காட் பனடோல் குளிசைகளை. அதாவது 60 பனடோல் குளிசைகளை எடுத்துச் செல்ல படையினர் ஏற்கனவே அனுமதிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் வாரம்தோறும் செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களிலும் 1400 பயணிகள் வன்னிக்குப் பயணம் செய்கின்றனர். தற்காப்புத் தேவைகளுக்காக இவர்கள் அனைவரும் கொண்டு செல்லக் கூடிய அளவு பனடோலை எடுத்துச் செல்கின்றனர்.

இது தவிர கூட்டுறவுச் சங்கங்களும் பனடோல் குளிசைகளை எடுத்துச் செல்கின்றன. இந்நிலையில் வன்னியில் உள்ள 3 லட்சத்து 74 ஆயிரம் பேருக்கும் தற்போது அனுமதிக்கப்படும் பனடோலே மித மிஞ்சியதாக இருக்கும்.

இந்த நிலையில் இந்த தடைத் தளர்வு தேவைதானா என்று கேட்ட அவர் இதெல்லாம் ஒரு உப்புச் சப்பில்லாத வேலை என்று முடித்துக் கொண்டார்.

இதே போன்றே அரிசி மீதான தடை நீக்கமும்.

வன்னியிலிருந்து இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நெல் கொண்டு வரப்படும் இன்றைய நிலையில் தற்போது அரிசியை இங்கிருந்து வன்னிக்கு எடுத்துச் செல்லலாம் என்று அறிவிக்கப்பட்டிருப்பதானது விசித்திரமாகவே இருக்கிறது.

மேலும் விவசாய உபகரணங்கள், பிசின், களிம்பு மருந்துகள் (Balm), விற்றமின் குளிசைகள், தானியவகைகள், சிறுவர்களுக்கான 3 சில்லுச் சைக்கிள் , கோழிக் குஞ்சு, பாய், பெயின்ட் வகைகள் என்பனவும் ஏற்கனவே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் படையினரால் அனுமதிக்கப்பட்டு வருகின்றன.

இதில் பெயின்ட் வகைகளில் பச்சை நிறப் பெயின்டையும் எடுத்துச் செல்லக் கூடாதென அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் அனுமதிக்கப்பட்ட நீல — மஞ்சள் நிற பெயின்ட்களை கலந்து பச்சை நிறப் பெயின்டை பெற்றுக் கொள்ள முடியும் .

இதேவேளை இந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பொருட்கள் தவிர இன்னும் பல பொருட்களை தற்போது படையினர் மனிதாபிமான அடிப் படையில் பயணிகள் எடுத்துச் செல்ல அனும தித்து வருகின்றனர்.

உதாரணமாக பற்றரி, மண்ணெண்ணெய், சைக்கிள் ரயர், ரியூப் போன்ற பொருட்கள் தடை செய்யப்பட்ட பொருட்களாக இருந்தபோதிலும் படையினர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அவற்றை எடுத்துச் செல்ல அனுமதித்து வருகின்றனர்.

தற்போது இந்தப் பொருட்கள் பயணிகளால் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதனால், மனிதாபிமான அடிப்படையில் அனுமதிக்கப்படும் பொருட்களை காலப் போக்கில் நிறுத்திவிட்டு, அனுமதிக்கும்படி அறிவுறுத்தப்பட்ட பொருட்களை மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடுமோ என பலரும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

— வன்னி மைந்தன்


இட வசதி உள்ளது

தொடர்புகளுக்கு: Mr. M. Abbas,
26-1/1, K.D. David Mawatha,
maradana, Colombo - 10

MARUTHY SERVICES



ஸ்தாபனத்தார் தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தமது புத்தாண்டு நல் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றனர்.

- Reception Hall
- Hall Arrangements
- Meals (indoor & out door)

For All Occasions

ORCHARD BUILDING, (Opp. Savoy)

7-2/9, Galle Road, Colombo-06, Sri Lanka.
Tel : 584191, 591812, Fax : 94-1-591812.

HOTEL WESTEERN



பம்பலப்பிட்டியில் கடற்கரையோரமாக அமைந்துள்ள உல்லாச ஆடம்பர ஹோட்டலில், வெளிநாட்டவர்கள் அனைவரும் விரும்பி வந்து தங்கி, விருந்தோம்பிச் செல்வதுடன் மதுபான வசதி, மற்றும் விசேஷ வைபவங்களுக்கு ஏற்ற வகையில் அடக்கமான 3 மண்டபங்கள், தொலைக்காட்சி, தொலைபேசி, குளிரூட்டப்பட்ட அறைகள் போன்ற வசதிகளுடன்

ஐரோப்பிய நாடுகளிலிருந்து பதிவு செய்வதற்கான கட்டணங்கள்

US 25$, London 15Pounds, France 150 Frank, German45 Mark, Canada 35 Dollars, Swiss 45 Frank

இக்கட்டணத்துடன் காலை உணவும் இரவு உணவும் இலவசம்

HOTEL WESTEERN

Tourist Hotel - Approved by Ceylon Tourist Board

No.35, Frankfurt Place, Bambalapitiya.
Colombo-04. Sri Lanka.
Tel: 941-507161-3 Fax: 94 74-518481
E-mail: info@hotelwesteern.com
Web: www.hotelwesteern.com

# ஜெயலலிதாவின் அறிவிப்பு மூப்பனாருக்கு மூக்கறுப்பு!


மூப்பனார்

தமிழக சட்டசபைத் தேர்தலில் ஜெயலலிதாவுடன் தேர்தல் கூட்டணி அமைக்க மூப்பனார் கேட்ட தொகுதிகள் 60 ஆகும். ஆனால் ஜெயலலிதா இறுதியில் 47 தொகுதிகளை மாத்திரம் தருவதற்கு இணங்கினார்.

மூப்பனாருக்குக் கிடைத்த 47 தொகுதிகளில் சோனியா காங்கிரசுக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டு எஞ்சியதைப் பங்கு போட்டுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய சட்டசபையில் மூப்பனாருக்கு 39 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சட்டசபைத் தேர்தலில் தி.மு.கவுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட காரணத்தினால் கிடைத்த வெற்றி இது. தமிழக சட்ட சபையில் இரண்டாவது தனிப்பெரும் கட்சி என்ற பெருமை தமிழ் மாநில காங்கிரஸுக்கே இருந்தது.

அடுத்த முறையும் மூப்பனாருடன் கூட்டணி அமைக்க கருணாநிதி முன்வந்தார். மூப்பனாருக்கு 40 தொகுதிகள் தருவதாக அறிவித்தார். ஆயினும் மூப்பனார் அந்த அன்பளிப்பை ஏற்றுக் கொள்ளவில்லை.

சோனியா காங்கிரஸுடன் மீண்டும் இணைந்து ஓரணியாக இயங்கும் விருப்பம் இருப்பதால் கருணாநிதியுடன் இணையும் எண்ணத்தை அவர் கைவிட்டார். அதன் பாதிப்பை இப்போது உணர்ந்து கொள்ளும் நிலைக்கு மூப்பனார் வந்திருக்கிறார்.

ஜெயலலிதாவுக்கு சட்டசபையில் இப்போது 4 உறுப்பினர்களே இருக்கிறார்கள். அவர்களில் தாமரைக்கனி ஏற்கனவே ஜெயலலிதாவுக்கு எதிராகக் கிளம்பிவிட்டார். 39 த.மா.கா உறுப்பினர்களைத் தற்போது கொண்டுள்ள மூப்பனார் ஜெயலலிதாவிடம் மன்றாடிப் பெற்றது 47 தொகுதிகளையே.

சோனியா காங்கிரஸுக்குத் தமிழக சட்டசபையில் ஒரு உறுப்பினர் கூடத் தற்போது இல்லை. ஆனால் ஜெயலலிதா வழங்கிய 47 தொகுதிகளில் 15 தொகுதிகளை அவர்கள் கேட்கிறார்கள்.

மூப்பனாருக்கு எஞ்சியது 32 தொகுதிகளே. அதாவது 39 உறுப்பினர்களில் 7 பேருக்கு தேர்தல் டிக்கெட் இல்லை என்பது முடிவாகிவிட்டது.

எஞ்சிய 32 தொகுதிகளாவது நிலைக்கும் என்று எண்ணியிருந்தார் மூப்பனார். ஆனால் ஜெயலலிதாவின் திடீர் அறிவிப்பு ஒன்றுமூப்பனாருக்கு மூக்கறுப்பாக வந்துவிட்டது.

ஜெயலலிதா எண்ணிக்கை ரீதியாகத் தொகுதிகளை ஒதுக்கியதில் கருணாநிதியை விட முன்னணியில் இருந்தவர். அதேபோல் எந்தத் தொகுதிக்கு எந்தக் கட்சி என்பதை நிர்ணயிப்பதிலும் அவரே முன்னணியில் இருக்கிறார்.

234 உறுப்பினர்களைக் கொண்ட தமிழக சட்ட சபைக்கு அ.தி.மு.க சார்பில் 141 உறுப்பினர்களைப் போட்டியில் நிறுத்த ஜெயலலிதா முடிவு செய்தார். எஞ்சிய 93 தொகுதிகளையும் தமது நட்புக் கட்சிகளுக்கு வழங்கியிருக்கிறார்.

அதிலும் எவரும் எதிர்பார்த்திராத வேளையில் ஜெயலலிதா அ.தி.மு.க போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ள 141 தொகுதிகள் எவை என்பது பற்றியும் அறிவித்துவிட்டார். இதனால் பாதிப்பு அதிகம் மூப்பனாருக்குத்தான்.

மூப்பனார் தமக்கு எஞ்சியிருந்த 32 தொகுதிகளில் 21 தொகுதிகளை தற்போது ஜெயலலிதா சூறையாடிவிட்டதைக் கண்டு அதிர்ச்சியடைய வேண்டியதாகிவிட்டது. மூப்பனாரின் 21 தொகுதிகளில் அ.தி.மு.க உறுப்பினர்களைப் போட்டிக்கு நிறுத்த ஜெயலலிதா முடிவு செய்துவிட்டார்.

மூப்பனாருக்கு எஞ்சியிருப்பது 11 தொகுதிகள் தான். மேற்கொண்டு எண்ணிக்கையளவில் தரப்பட்ட புதிய தொகுதிகளில் புதியவர்களை நிறுத்தி அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டிய பொறுப்பு மூப்பனாருடையதாகிவிட்டது. கட்சி உறுப்பினர்கள் கொதிப்படைந்து போய் இருக்கிறார்கள்.

சோனியா காங்கிரஸ் உறுப்பினர்கள் தாம் வெற்றி பெறக் கூடிய தொகுதிகளாகச் சிலவற்றைக் குறிப்பிட்டிருந்தனர். அவற்றையும் ஜெயலலிதா வாரிச் சுருட்டிவிட்டார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினருக்குத் தற்போது 5 தொகுதிகள் இருக்கின்றன. அவற்றில் 3 தொகுதிகளையும் ஜெயலலிதா தம் வசப்படுத்திவிட்டார்.


ஜெயலலிதா

மூப்பனார், சோனியா, மற்றும் கம்யூனிஸ்ட் அணியினர் தாம் வெற்றி பெறக் கூடிய தொகுதிகளைக் குறிப்பிட்டு அவற்றைத் தமக்கு ஒதுக்கித் தரும்படி கேட்டிருந்தனர்.

ஆனால் ஜெயலலிதா தமது கட்சி வெற்றி பெறக்கூடிய தொகுதிகளைத் தாமே சுவீகரித்துக் கொண்டு எஞ்சியவற்றை உதிரிக் கட்சிகளுக்குத் தந்திருக்கிறார். ஆனால், பாட்டாளி மக்கள் கட்சி ராமதாஸ் கேட்டிருந்த தொகுதிகளை அப்படியே கொடுத்துவிட்டார். இவற்றில் மூப்பனாரின் தொகுதிகள் எத்தனையோ தெரியவில்லை.

ஜெயலலிதா கைகழுவி விட்ட தொகுதிகள் கருணாநிதியின் கோட்டைக்குள் இருக்கின்றன. எனவே தமது கூட்டாளிகளைப் பலிக்கடாக்களாக்கி தாம் வெற்றிக் கொடியை எட்டிப் பிடிக்கப் பார்க்கிறார் ஜெயலலிதா. ஜெயலலிதாவை நம்பி பாண்டிச் சேரியைக் கோட்டைவிட்டார் மூப்பனார். தற்போது தமிழகத்திலும் மண் கௌவும் நிலை வந்துவிட்டது.

வை.கோபால சாமி கேட்ட தொகுதிகளைக் கருணாநிதி தராத காரணத்தினால் தான் வை.கோ வெளியேறினார். ஆனால் மூப்பனார் கேட்ட தொகுதிகளை ஜெயலலிதா தராத காரணத்தினால் மூப்பனார் வெளியேறப் போவதில்லை. இறுதிவரை ஜெயலலிதாவே கதி என்று இருக்க வேண்டியது தான்.

இருப்பினும் தமது கட்சியை நட்டாற்றில் கொண்டு வந்து தவிக்கவிட்டு விட்டார் மூப்பனார்.

—கதாசி

# புலிக்கொடியுடன் தமிழர்கள் ஜெனிவாவில் ஆர்ப்பாட்டம்!

இலங்கையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்தும் —விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இலங்கை அரசுக்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும்—

ஜெனிவாவில் உள்ள ஐ.நா கட்டடத்துக்கு வெளியே சுமார் 10 ஆயிரம் தமிழீழ ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டம் கடந்த 2ஆம் திகதி நடைபெற்றது.

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்காக விசேட பஸ்களிலும், விசேட ரயில்களிலும் ஜெனிவா வந்திருந்தனர்.

ஜெனிவாவில் ஆரம்பமான ஐ.நா மனித உரிமைகள் கமிஷனின் 57 ஆவது மாநாட்டையொட்டி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் விடுதலைப் புலிகளின் இலட்சினை பொறிக்கப்பட்ட கொடிகளையும் பதாதைகளையும் ஏந்திச் சென்றனர்.

விடுதலைப்புலிகளின் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை இலங்கை அரசும் ஏற்று யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும்—

இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கான பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் விடுக்கப்பட்ட அறிக்கையில், இலங்கையில் தமிழர்களுக்கு தாயகம் ஒன்றை ஏற்படுத்துவதன் அடிப்படையில் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை பிரிட்டன் தடை செய்ததற்கும் அறிக்கையில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படும் வரை வெளிநாடுகள் இலங்கைத் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பக்கூடாது என்றும் — இலங்கை அரசு தனது பயங்கரவாதத்தை நிறுத்த சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும்—

நோர்வேயின் உதவியுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கு வசதியாக விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்றும்— அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


யாழ்ப்பாண விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்ய உதவும்
பெருங்குடி மக்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எமது உளம் கனிந்த இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.





E.R.TRANSPORT SERVICE
General Merchants, Commission Agents and Transporters

Vallipura Pariariyar Lane, (Odai Lane) Point Pedro, Jaffna.
172, Central Road, Colombo -12. Tel: 074-714311



தமிழ் பேசும் அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

JAFFNA TRADERS
யாழ்ப்பாண வணிக நிலையம்

யாழ்ப்பாண மக்களிற்குரிய அனைத்து வகையான அத்தியாவசியப் பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

இல.302 (108) மருத்துவமனை சாலை, யாழ்ப்பாணம்.
No.302 (108) Hospital Road, Jaffna.
Tel : 021-2509, 021-2806



விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!
விஷு வருஷ (2001 - 02)

திருக்கணித பஞ்சாங்கம்
சோதிட உலகில் பிரசித்தி பெற்று விளங்குவது
திருக்கணித பஞ்சாங்கமே!

ஏகவிநியோகஸ்தர்:
L. முத்தையா அன் கோ
155/2, குமார வீதி, கொழும்பு - 11.
Tel: 335477



இனிய தமிழிற்கு இன்னல்கள் தீர்ந்து இன்பம் பிறக்க இனிய புத்தாண்டில் வாழ்த்திடுவோம்





K.S.M.TRANSPORTS
கே.எஸ்.எம். பொதிகள் சேவை

இல. 67A, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு - 13. தொ.பே: 01-612656
இல. 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொ.பே: 021-2007

# உறவுகள்

''வாங்க,வாங்க '' உபாலியின் குடும்பத்தாரை விஸ்வநாத் வரவேற்றார்.

''தங்கச்சிட பிறந்த நாள் அண்ணாமார் ரெண்டு பேரும் வார நேரமா இது. ரெண்டு பேரும் இந்த தங்கச்சியை மறந்துட்டிங்க, நான் ஒரு தமிழ் பொண்ணு அதனாலே தானே''

கல்யாணி முடிக்கும் முன்னே சரத் வாயைப் பொத்தினான்.

''என்னம்மா பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசற! மதம் வேறானாலும் அண்ணன் தங்கை பாசம் ஒன்னுதான். நாங்க ரெண்டு பேரும் ஒன்ன எங்கட கூடப்பிறந்த தங்கச்சியாகத்தான் நெனக்கிறோம். கொஞ்சம் அதிகமாக இன்னைக்கு வேலை அதனால்தான் இருவரும் வர நேரமாயிற்று. இந்தக் குற்றத்திற்கு தண்டனை தோப்புக்கரணம் போடவா...?''

''இந்த அன்பு என்னைக்கும் நீடிக்குமா அண்ணா..?

பாசத்தால் ஆறு விழிகள் குளமாகின.

''கல்யாணி இது என் சின்னப் பரிசு'' என்று வெள்ளிப் பாதச் சதங்கையைக் கொடுத்தான். உன் முதலாவது நாட்டிய அரங்கேற்றத்திற்கு இந்த மூத்த அண்ணனின் பாதச் சதங்கைகள் ஜதி சொல்லனும்''

சந்தோஷமாய் வாங்கி அணிந்து கொண்டாள்.

''ஏய் சின்ன அண்ணா நீ என்ன கொண்டு வந்த''

''ஒண்ணுமே கொண்டு வரல்லயா?'' கல்யாணி கோபத்தோடு முனங்கினாள்.

''ஹய்யா கல்யாணி அழுவுறா'' கூச்சலிட்டான் யமுனு. ''அப்பாடா எவ்வளவு நாளைக் கப்புறம் உன்ன அழுக வச்சிருக் கேன்'' என்று அழகான கைக்கடி காரத்தை நீட்டினான். மூவரும் இன மத பேதமின்றி சகோதரர் களாக அன்றைய பிறந்த நாள் விழாவைக் கொண்டாடத் தொடங்கினர்.

சுற்றிவர அடர்ந்த மரங்கள், பற்றைகள் சின்ன சமவெளியில் சாரத்தை முழங்காலுக்கு மேல் மடித்துக் கட்டிய நான்கு ஐந்து உருவங்கள் போதையில் சிவப்பேறிய கண்களுடன் சீட்டாடிக் கொண்டிருந்தன.

கஞ்சாப் புகை அந்த இடத்தை வளையம் இட்டிருந்தது. இங்கிருப்போர் அனைவரும் சமூகத்தின் பார்வையில் தீயவர்கள்.

''தயா இப்படியே இருந்தா கைச் செலவுக்கு நாதியின்றி பிச்சதான் எடுக்கணும், பெரிய இடமா பார்த்து கை நுழைச்சா ஒரு வருடத்திற்காவது சுகமா இருக்கலாம். ஏதாவது ஐடியா சொல்லேன்.''

பியசேன கஞ்சாப் புகையின் சுகத்தை அனுபவித்தவாறே சொன்னான்.

''எண்பத்தி மூணுல வந்த கலவரம் மாதிரி இப்ப வந்தா எங்களுக்கு எவ்வளவு பெரிய சௌகரியமாக இருக்கும்.'' சொல்லிவிட்டு பிரதீப் கனவு காணத் தொடங்கினான்.

***

உபாலி வீட்டிலிருந்து வந்த ஒப்பாரிச் சத்தம் அந்தக் கிராமத்தையே அதிர வைத்தது. ஒவ்வொருத்தரா உபாலி வீட்டை நோக்கி துயரம் விசாரிக்க படையெடுத்தனர்.

ஆனையிறவு மோதலில் ரெண்டு மகன்மாரும் மரணித்து விட்டார்களாம். இதேபோல் இன்று எத்தனை குடும்பங்கள் கதறியழும். விஸ்வநாத் மனதில் நினைத்தவாறே உபாலியின் வீட்டிற்குள் போகப் பயப்பட்டார். எல்லா சிங்களச் சகோதரர்களும் தன்னை கோபத்தோடு கொல்லும் வெறியோடு பார்ப்பது போல கூனிக்குறுகி நின்றார்.

''அங்கு அவையள் சண்டை பிடிக்கினம் அதனால வெளியில சிதறி வாழும் நம்மளப் போன்றவர்களின் வாழ்வு இரு தலைக் கொள்ளி எறும்பு தவிப்பதைப் போல் எம்வாழ்வு''

மனதில் வேதனைப்பட்டார்.

பழைய நினைவுகள் நிரம்பலாய் அவர் மனதில்.

சரத்—யமுனு துடிப்புள்ள இளைஞர்கள். அதைப்போல் மனிதத் தன்மை வாய்ந்தவர்கள். ''வாங்க அங்கிள் உக்காருங்க தங்கச்சி கல்யாணி டியுசன் போயிருச்சா?'' அன்பு கலந்த குசலம் விஸ்வநாத்தை பிரமிக்க வைக்கும்.

எண்பத்தி மூணு இனக் கலவரத்தின் போது எமக்கு அடைக்கலம் கொடுத்த வேளை, ''ஏய் அவனுகள வெளியில் விடு, இது எங்கட நாடு, நீ எங்கட இனத்த சேர்ந்தவன் போயும் போயும் அவனுகளுக்கு இடம் கொடுத்திருக்க வெளியில விடு.'' பல குரல்கள் உபாலியின் வீட்டை நோக்கி.

விஸ்வநாத்தும் குடும்பத்தாரும் அச்சத்தால் இனி பிழைக்க மாட்டோம் இன்றோடு வாழ்வு அஸ்தமித்து விடும் போல் தோன்றியது அவர்களுக்கு.

அன்று பாடசாலை மாணவர்களான சரத்தும் யமுனுவும் வெறிபிடித்த கூட்டத்தை நோக்கி ''நாங்க அவங்கள வெளிய விடமாட்டோம், அவங்களும் எங்களைப் போல மனுசங்க தானே, ஒங்களுக்கு கொல்லனும்னு வெறி இருந்தா முதல்ல எங்களைக் கொன்னு எங்கட சவத்தத் தாண்டி அந்த அப்பாவி ஜீவன்களை கொல்லுங்க.'' இருவரும் ஒருமித்த குரலில் சொன்னதும் விஸ்வநாத் குளிர்ந்து போனார்.

தமது வெறி அடங்காத கோபத்தில் அந்தக் கூட்டம், வீட்டு வேலியையும் கேற்றையும் உடைத்துவிட்டுச் சென்றது. அன்று எம் உயிர்களுக்காகக் கர்ஜித்த சிங்கங்கள், இன்று எம்மினத்தவர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இலக்காகி இறந்துவிட்டார்கள்...! பொங்கியெழுந்த கேவலையும் அழுகையையும் அடக்கிக் கொள்ள இயலாமல் தவித்தார். உபாலிக்கு என்னால் ஆறுதல் சொல்ல இயலுமா? ''ஒன்னோட இனத்தவரால தானே என் மகன் ரெண்டு பேரும் இறந்து போனாங்கன்னு என்னப்பாத்து கேள்வி கேட்டா, ஐயோ எப்படி வேதனைப்படுவேன். செத்துபோய்விடமாட்டேனா?'' இறைவனே உபாலி குடும்பத்தாருக்கு ஆறுதல் சொல்ல நான் தகுதியற்றவனா? எங்களுக்காக எங்கள் குடும்பத்திற்கு உயிரையே குடுக்க முன் வந்த குடும்பத்திற்கா இந்த நிலை. உள்ளே செல்ல திராணியற்று வாசலிலே தயக்கத்தோடு நின்றுகொண்டிருந்தார் விஸ்வநாத் துயரமான மனதோடு.

ஆதரவாய் அவர் தோளில் கரம் விழுந்தது. திரும்பிப் பார்த்தார். விழியில் வழிந்தோடும் நீரோடு உபாலி, ''விஸ்வா'' தாளாத துயரத்தோடு தோளில் சாய்ந்தார் உபாலி.

''விஸ்வா நீ கவலைப்படுகிறாயா...? அச்சப்படுகிறாயா...? உந்தன் மனநிலை நானறிவேன். நீ வீட்டிற்குள் வரத் தயங்கும் போதே ஊகித்து விட்டேன். அவங்க செய்த குற்றத்திற்கு நீ எப்படி குற்றவாளியாக முடியும். இல்ல விஸ்வா என் செல்வங்களின் ஆயுள் அவ்வளவு தான். இந்த நாட்டு மண்ணுக்காக உயிரிழந்ததையிட்டு பெருமைப்படுகிறேன். ஒரு தகப்பனாக விஸ்வா இங்குள்ள ஒவ்வொருத்தரும் உன்ன விரோதியா பார்க்கல உறவினராகத்தான் பார்க்கிறாங்க உள்ளே வா.''

''இவ்வளவு துன்பத்த உன்னில் சுமந்துகொண்டு எப்படி எனக்கு ஆறுதல் சொல்ல முடியுது?''

''எனக்குள் என் செல்வங்களின் நெனப்பு, வேதனை தீயாய் மனதில் சுழல்கிறது. இப்ப என்னால் அதனை வெளிப்படுத்த இயலாது. விஸ்வா தனியா அழனும். என் கண்மணிகளின் புகைப் படத்தை பார்த்துக்கொண்டே பெயரை சொல்லி சொல்லி கத்தி அழனும். என் சோகம் தீரும் வரை, நானும் பாசமுள்ள ஒரு சராசரி தகப்பன் தானே விஸ்வா.''

விஸ்வநாத் உபாலியின் கரங்களை அழுத்திப் பற்றினார். அந்த பற்றுதலில் அலாதியான ஆறுதலை உபாலி உணர்ந்தார்.

''விஸ்வா நீ என் நண்பன், நீ தவறு செய்யல, அதனால் குற்ற உணர்வில் அவஸ்தைப்படாதே, இந்த உடலில் உயிர் மூச்சு இருக்கும் வரை நம் நட்பு என்றும் பிரியாது''.

ஆங்காங்கே சில கேவல்களும் சாம்பிராணிப் புகையும் ஊதுவர்த்தியின் மணமும் வீட்டை நிரப்பின. உபாலியும் விஸ்வாவும் ஆறுதல் சொல்ல வருகிறவர்களுக்கு தேநீர், வெற்றிலை கொடுத்து உபசரித்துக் கொண்டிருந்தனர்.

***

தயா எல்லோரையும் ஆழமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''விளையாடுறத கொஞ்சம் நிப்பாட்டிவிட்டு நான் சொல்லுறத கொஞ்சம் கவனிக்கிறிங்களா?'' என்றான்.

''ஆனையிறவு மோதலில் நம் கிராமத்தைச் சேர்ந்த இருவர் இறந்திருக்காங்க.''

''அதற்கு நாம என்ன பண்ண?'' கருணா இடைமறித்து அலுத்துக் கொண்டான்.

''பொறு..பொறு.. சொல்லவாற விஷயத்த கவனி, இந்த ஊருல நெறைய தமுல் குடும்பங்கள் இருக்கு. எல்லோரும் பெரிய பணக்காரங்க.''

''இன்னைக்கு இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் அவங்கட வீடுகள சூறையாட போவோம்.''

''மாட்டிக்கொண்டா'' கருணா சந்தேகம் கேட்டான்.

''மாட்டிக்கொள்கிற நிலம வந்தால், உபாலியின் ரெண்டு மகன்மார் செத்திருங்காங்க, இதப்போல நாடு பூரா பல வீரர்கள் செத்திருக்காங்க. இதப் பயன்படுத்தி, தமுல் பொடியன்மார்கள ஆயுதங்களோட வீட்டுக்குள் தங்க வச்சிருக்காங்கன்னு ஒவ்வொரு தெருவா கத்திக்கொண்டு ஓடுவம், இனக்கல வரத்தை உண்டு பண்ணிடுவோம்''.

தயா சொன்ன ஐடியா எல்லாத்துக்கும் பிடித்துப்போக இரவு பன்னிரெண்டு மணிக்கு போவதற்கு தயாராகிக் கொண்டிருந்தது அந்தக் கூட்டம்.

***

விஸ்வநாத்

இரவு நித்திரையின்றி தவித்தார். தன் நண்பன் வீட்டில் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய இயலாமல், உள் அறையில் கல்யாணி, ''அரங்கேற்றத்தைப் பார்க்காமலே போய்விட்டீர்களே சரத் அண்ணா, யமுனு அண்ணா ஒங்கட கடிகாரத்தின் டிக் டிக் ஓசையில் உங்கள் இதயத் துடிப்பை உணர்கிறேன், ஐயோ இரண்டு அண்ணன்களுமா என்னை விட்டு நிரந்தரமா பிரியணும்.''

நட்பின் ஆழத்தோடும், சகோதரத்துவத்தாலும் இரு உயிர்கள் இரவில் கனத்த இதயத்தோடு ஊசலாடின.



இரவு பன்னிரெண்டு மணிக்கு பயங்கர ஆயுதங்களோடு வெளியேறியது அக்கூட்டம். திடீரென வானம் இருண்டது. பயங்கரமாகக் காற்று வீசியது, அக்காற்று சிறிது நேரம் செல்லச் செல்ல புயல் காற்றாக மாறியது. இடி, மழை, காற்று அப்பிரதே சத்தை உலுக்கியது. மரங்கள், கிளைகள் ஒடிந்து விழுந்தன.

எதிர்பாராத மழையாலும் காற்றாலும் தாக்கப்பட்ட அந்தக் கூட்டம் ஆயுதங்களை ஆங்காங்கே தூக்கி வீசிவிட்டு உயிர்தப்பு வதற்காக பல திசைகளை நோக்கி ஓடியது.

பல மரங்களின் 'சரசர' என்ற ஒடிந்து விழும் சப்தத்தோடு பல அபயக் குரல்கள் அந்தக் கடும் மழையின் சப்தத்தில் இலேசாகக் கேட்டன.

***

மறு நாள்

வானொலி காலைச் செய்தியில், ''நேற்றிரவு திடீரென ஏற்பட்ட மழையினாலும் புயலினாலும் ஐந்து அப்பாவி கிராம மக்கள் உயிரிழந்துள்ளார்கள். இந்த திடீர் மழை, புயலைப் பற்றி வானிலை ஆராய்ச்சி நிலையம் அதிர்ச்சி தெரிவித்துள்ளது. இதைப்பற்றி இன்னும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்'' என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் புயல் நாட்டில் ஏற்படவிருந்த இன்னொரு இரத்தப் புயலை அடக்கியது என்பதை எவருமே அறியவில்லை புயலால் இழக்கப்பட்ட வீட்டுச் சேதங்களை எண்ணி இந்த மக்கள் இன்னும் புலம்புகின்றனர்.

**அம்ரிதா**

DHARSHI'S BEAUTY CARE CENTRE
- Facial
- Hairstyle's
- Waxing
- Pedecure
- Manicure
- Hot Oil Massage
- Body Care
- Bridal Makeup
- Bleaching and Dressing etc.

அத்துடன் உங்கள் உள்ளம் கவரும் வண்ணங்களில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சல்வார்களும், சாறிகளும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

No. 198, Galle Road,
Colombo - 06.
Tel: 074-515548

# நந்தா புலிகளின் கதையா? சூர்யா பதில் சொல்கிறார்



தந்தையை ஞாபகப்படுத்தும் உருவஅமைப்புக் கொண்ட துடிப்பான இளைஞன் சூர்யா.

திரையுலக மார்க்கண்டேயன் என்று பெயரெடுத்தவர் நடிகர் சிவகுமார். அவரது மகன் சூர்யா

'சந்திப்போமா'வின் மூலம் திரையுலகப் பிரவேசம் செய்தார். தொடர்ந்து 'பூவெல்லாம் கேட்டுப்பார்', 'உயிரிலே கலந்தது', 'பெரியண்ணா' படங்களில் நடித்தார். ஆனாலும் இப்படங்களைப் பார்த்தவர்கள் நடிகர் சிவகுமாரின் மகன் அல்லவா நடிக்கிறான் என்று சொன்னார்களே தவிர சூர்யா நல்ல நடிகன் என்று சொல்லவில்லை.

ஆனால் சமீபத்திய ரிலீஸ் 'ப்ரண்ட்ஸ்' சூர்யாவின் பெயர் சொல்ல வைத்திருக்கிறது.

உறவுகள் எல்லாவற்றையும் விட நட்புத்தான் சிறந்தது என்பதை 'ப்ரண்ட்ஸ்' வலியுறுத்தியிருக்கிறது.

'ப்ரண்ட்ஸ்' படத்தில் சூர்யாவின் நடிப்பைப் பாராட்டாதவர்களே இருக்க முடியாது.

இப்படியொரு அற்புதமான நடிப்பாற்றலை இவ்வளவு நாளும் எங்கே வைத்திருந்தார் என்று இப் படத்தைப் பார்த்தவர்கள் தங்களுக்குத் தாங்களே கேள்வி கேட்டுக் கொள்கிறார்கள்.

அடுத்து சூர்யா நடித்துக் கொண்டிருக்கும் படமும் பெரும் எதிர்பார்ப்புக்குரியதாகி விட்டது. பிரமாண்டமான புகழையும் மிகப் பெரிய வெற்றியையும் பல விருதுகளையும் பெற்றுத் தந்தது 'சேது' படம். இப் படத்தினைத் தந்த பாலா தயாரிக்கும் 'நந்தா' படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார்.

'நந்தா'விற்குப் பின்னர் முன்னணி நாயகர்களின் வரிசையில் சூர்யாவும் இடம்பிடிக்கக் கூடும் என்று திரையுலகினர் ஆரூடம் கூறுகின்றனர்.

இது இப்படியிருக்க சூர்யா 'நந்தா'விற்காகத் தன் உருவத்தையே பெரு மளவில் மாற்றிக் கொண்டு நடித்து வருகிறார்.

'நந்தா' ஷூட்டிங்கில் சூர்யாவைச் சந்தித்தபோது,

ஒட்ட வெட்டிய தலைமுடியுடன் ஷேவிங் செய்யப்படாத முகம் சகிதம் சோகமே உருவாகக் காணப்பட்டார்.

விவரத்தை அறியும் நோக்கில் அவரிடமே வினவினோம்.

**கே:—என்ன சூர்யா ஆளே மாறிவிட்டீர்களே?**

ப:— 'நந்தா'

விற்காக இப்படியொரு கெட்டப் தத்ரூபமாக வரவேண்டுமென்பதற்காக சாப்பாட்டையும் குறைத்துக் கொண்டு விட்டேன்.

**கே:— கறுப்பாக இருந்தாலும் களையாக இருப்பீர்களே! இப்படியொரு கோலத்தில் வேறு படங்களை ஒத்துக்கொள்ள முடியாதே!**

ப:— உண்மைதான். 'நந்தா'வை முடித்த பின்னர்தான் அடுத்த கமிட் மென்ட்ஸ் எல்லாம். இப்போது என் முழுக்கவனமும் 'நந்தா' மேல்தான்.

**கே:— நந்தா நந்தா என்று நந்தா புராணம் பாடுகிறீர்களே! அப்படியென்னதான் 'நந்தா' வில் இருக்கிறது?**

ப:—நந்தா தீப்பந்தம் போன்றவன். முன்கோபம், முரட்டுத்தனம் நிறைந்த துடிப்பான இளைஞன். இவை எனது இயல்பான நிலைக்கு மாறுபட்ட குணங்கள். அதனால் தான் அதிக அக்கறை காட்ட வேண்டி இருக்கின்றது.

**கே:— உங்க கூட லைலா நடிக் கிறாங்களே! 'தீனா' படத்தின் வெற்றிக் கதாநாயகியல்லவா?**

ப:— ஆமாம் அஜித் கூட நடிச்சாங்க. இப்ப 'நந்தா'வில் என்கூட ஜோடி சேரப்போறாங்க சந்தோஷமாயிருக்கு.

**கே:—'நந்தா' படத்தின் கதை விடுதலைப் புலிகளைப் பின்னணியாக வைத்துப் பின்னப்பட்டது என்று ஒரு செய்தி அடிபடுகின்றதே?**

ப:— இது ஒரு சராசரி மனிதனைப் பற்றிய கதை. அவன் ஒரு அற்புதமான மனிதன். அது அவனுடைய வட்டத்துக்குள் இருப்ப வர்களுக்கு மட்டும் தான் தெரியும். வட்டத்தை விட்டு வெளியே நின்று பார்ப்பவர்களுக்கு அது புரியாது.

'நந்தா' தீவிரவாதிகளின் கதை, விடுதலைப் புலிகள் பற்றிய கதை என்று சொல்வதை விட இது நம் எல்லோருடைய கதை என்றே சொல்லலாம்.

**கே:—பொதுவாக சினிமா இன்டஸ்ரியைப் பொறுத்தவரை இப்படியான வேடங்களுக்கு அஜித்தைத் தான் தேர்ந்தெடுப்பார்கள். சூர்யா தெரிவானது எப்படி?**

ப:— பாலா ஸார் தான் என்னைத் தேர்வு செய்தார்.

அஜித்தின் இடத்தில் சூர்யாவா என்று பலர் பாலா ஸாரிடமே கேட்டிருக்காங்க.

''இப்போதைய சூழ்நிலையில் சூர்யா என்ற ஆர்ட்டிஸ்ட் முழுக்க முழுக்க தன்னையே என்னிடம் ஒப்படைத்திருக்கிறான். சூர்யாவுக்குள் மிகப்பெரிய கலைஞன் இருக்கிறான் என்பதை சூர்யா கண்டிப்பாக நிரூபிப்பான்'' என்று பாலா கூறியிருக்கிறார்.

**கே:—'ப்ரண்ட்ஸ்' படத்தில் நடித்த விஜயலட்சுமி உங்களுக்கு சிபாரிசு செய்கிறார் என்று ஒரு பத்திரிகையில் செய்தி வெளி வந்திருந்ததே!**

ப:— நானும் விஜயலட்சுமியும் ஒரு படத்தில் சேர்ந்து நடித்தோம். மற்றப்படி அவர் எனக்கு சிபாரிசு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

**கே:—நீங்கள் கிசுகிசுவுக்குள் அகப்பட வில்லை. அப்பா சிவகுமாரின் பெயரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறீர்களே! எப்படி?**

ப:— அப்பா சொல்லித் தந்த தியானம் தான் காரணம். அதிகம் அலட்டிக் கொள்ளாமலிருப்பதற்கு அது உதவுகின்றது.

**கே:—'இதனால் தான் ஜோதிகா உங்களை 'அமைதியான ஹீரோ' என்று குறிப்பிட்டிருக்கிறாரோ?**

ப:—அவர் சந்தித்த ஹீரோக்களில் நான் அமைதியான ஹீரோவாக இருந்திருக்கலாம்.

**கே:— 'ப்ரண்ட்ஸ்' படத்தின் மூலம் நீண்ட நாள் நண்பர்களாக இருந்த நீங்களும் விஜய்யும் எதிரிகளாக மாறிவிட்டீர்களாமே?**

ப:— நானும் விஜய்யும் கல்லூரி நாட்களில் இருந்தே நண்பர்கள். ஆனால் 'நேருக்கு நேர்' படத்தில் நடிக்கும் போது நான் புதியவன் என்ற முறையில் எனக்கு அதிக விளம்பரம் கொடுத்தார்கள். இது விஜய்க்குப் பிடிக்கவில்லை.

'ப்ரண்ட்ஸ்' வெளிவரு முன்னர் எனக்கு மார்க்கெட் இல்லை என்பதனால் இப்படவெளியீட்டில் அவரை அதிகம் விளம்பரப்படுத்தினார்கள்.

ஆனால் படத்தில் என் கரெக்டர் ஸ்ட்ராங்காக இருந்ததனால் என்னை ஒன்றும் செய்ய முடியவில்லை.

இவ்வளவு பிரச்சினைக்கும் மத்தியில் நானும் விஜய்யும் நண்பர்களாகத்தான் இருக்கிறோம்.

**கே:— இனி டபிள் ஹீரோ சப்ஜெக்ட்களில் நடிக்கமாட்டேன் என்று சொன்னீர்களாம் உண்மையா?**

ப:— ஆமாம். ஒரேஅந்தஸ்துள்ள இரண்டு பேர் சேர்ந்து தொழிற்பட முடியாது. அப்படியும் மீறித் தொழிற்பட்டால் இப்படித்தான் ஏதாவது ஏடாகூடமாக நடக்கும். அதனால் பிரச்சினைகளைத் தவிர்க்க வேண்டுமென்றால் டபிள் ஹீரோ சப் ஜெக்ட்களைத் தவிர்ப்பது புத்திசாலித்தனம். நட்பாவது மிஞ்சும் என்று நினைக்கிறேன்.

—ஷாம்



## விசிறிகள் இல்லை நண்பர்கள் மாதவன் ஆவேசம்

''உங்களது அதிஷ்டம் பெண் விசிறிகள் உங்களைத் தங்கள் மனதிலேயே வைத்து ஆராதிக்கிறார்கள்'' இப்படி மாதவனைப் பார்த்துச்சொல்லி விட்டார் ஒரு நிருபர். அவ்வளவுதான் மாதவனுக்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே.

''விசிறிகள் என்ன ஸார் விசிறிகள். நண்பர்கள் என்று சொன்னால் குறைந்தா போய் விடுவீர்கள்'' என்று கேட்டு நிருபரை ஒரு வழி பண்ணி விட்டாராம்.

இப்போது அந்த நிருபர் மாதவனுடன் பேசும்போது, தப்பித்தவறியும் விசிறிகள் என்ற வார்த்தையைப்பிரயோகிப்பது இல்லையாம்.






| | கிழக்கு | |
|---|---|---|
| புதன் மரகதம் Emerald | சுக்கிரன் வைரம் Diamond | சந்திரன் முத்து Pearl |
| குரு புஷ்பராகம் Y. Sapphire | சூரியன் மாணிக்கம் Ruby | செவ்வாய் பவளம் Coral |
| கேது வைடூரியம் Catseye | சனி நீலம் Sapphire | ராகு கோமேதகம் Cinnamon |
| | மேற்கு | |

வடக்கு / தெற்கு

Navaratnam

இங்கு நவகோள்களின் அம்சமான நவரத்தினங்களைப் பற்றிய விபரங்கள் உள்ளன. பிறப்பு எண்ணையும் கூட்டு எண்ணையும் வைத்து இலவசமாக கணித்து கூற அவரவர்க்கு ஏற்ற ரத்தினங்களை அணிந்து அதற்கேற்ப பலன்களையும் நன்மைகளையும் அடையலாம். நன்றி.

ARUL jewellers அருள் ஜுவலர்ஸ்

3, Sea Street, Colombo-11. T.P. 436331

மற்றவர்கள் பேசுவதை நாம் செய்கின்றோம்

இலவசம் முதல் பத்து வாடிக்கையாளர்களுக்கு அழகிய பென்டன்.





# பலே நடனம் ஆட லைலாவுக்கு ஆசை

லைலாவின் ஆசைகளில் முக்கியமான ஒன்றைக் கூறும்படி கேட்டோம்.

" பலே ஆட ஆசை என்றவர் தொடர்ந்து, என்னுடைய அம்மா சின்ன வயசில் பலே ஆட ஆசைப் பட்டு வகுப்புக்குப் போனாங்க. ஆனால் அவங்களால் தொடர்ந்து போக முடியாமல் போய் விட்டது.

அதனால் எனக்கு பலே கற்றுக்கொடுத்து அவங்களோட ஆசையை என் மூலமாக நிறைவேற்றிக்கிட்டாங்க.

ஆனால் அது இன்னிக்கு எனக்கு மிகவும் பிரயோசன மானதாகி விட்டது. நான் ரிலாக்ஸ் பண்ணிக் கொள்வதற்கு மிகவும் உதவுகின்றது. என்று கூறுகிறார்.

# பட்ஜெட் நாயகன் பிரபுதான்



'பட்ஜெட்' நம் நாட்டுக்கு மட்டுமல்ல சினிமாவுக்கும் பிரச்சினையாகத் தான் இருக்கிறது. குறைந்த செலவில் வெற்றிப்படத்தை எடுப்பதற்கு தயாரிப்பாளர்கள் முண்டியடித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த மாதிரியான குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெற வேண்டுமென்றால் பிரபு தான் அப்படத்தில் நடிக்க வேண்டும் என்று தயாரிப்பாளர்கள் ஒற்றைக்காலில் நிற்கிறார்களாம்.

# இனி இவர்கள்...!

*'வல்லரசு' படத்தை இந்தியில் ரீமேக் செய்து வரும் டைரக்டர் மகாராஜன் அடுத்து 'பிரமாஸ்ரம்' படத்தை டைரக்ட் செய்யப் போகின்றார்.

*'மகளிர்க்காக' படத்தை டைரக்ட் செய்த இந்தியன், அடுத்து கடல் சார்ந்த மக்களின் வாழ்க்கையைப் படமாக்கவுள்ளார். படத்திற்கு ''சமுத்திரம்' என்று பெயரிட்டிருக்கின்றார்.

# அலட்டிக் கொள்ளாதவர் ரம்பாவின் அம்மா



பிரபல நடிகைகளின் தாய்க்குலங்கள் ஷூட்டிங்கில் செய்யும் அட்டகாசம் அனைவரும் அறிந்ததே. ஆனால் வழக்கமான தாய்க் குலங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர் ரம்பாவின் அம்மா. மகளுடன் ஷூட்டிங்கிற்கு வந்தாலும் அவரை நடிக்க விட்டு விட்டு தன்பாட்டில் மேக்கப் ரூமில் போய் அமர்ந்து தான் கொண்டு வரும் புத்தகங்களைப் படித்துப் பொழுதைப் போக்குவார் அல்லது தூங்கியெழுவார். மகள் பிரபல நடிகை என்பதைப் பற்றிச் சிறிதும் அலட்டிக் கொள்ளாதவராம்.

# தேவ நடிகையின் மறுபக்கம்



இந்திப்படங்களில் தங்கையாகவும் நண்பியாகவும் வந்து போய்க்கொண்டு இருந்தார் 'தேவ' நடிகை. தமிழில் 'தொட்டாச்சிணுங்கி'யில் அறிமுகமானார். ஆரம்பப்படம் என்பதாலோ என்னமோ ஆடைக்குறைப்பில் நடிகையும் வழமையான செயற்பாடுகளையே கடைப்பிடித்தார்.

அப்படத்தில் ரேவதிதான் கதாநாயகி. ரேவதி கவர்ச்சியின் பக்கமே போகாதவர். இழுத்துப்போர்த்திக்கொண்டு நடிப்பவர். இதனால் 'தேவ' நடிகையை தொட்டுக்கொள்ள ஊறுகாயாகப்பயன்படுத்தினர்.

முதலில் அவருக்குத் தங்கை வேடமே கிடைத்தது. வந்த வாய்ப்பைப்பயன்படுத்தி தாராள மயக்கொள்கையுடன் நடித்தார்.

அம்மணியைப்பொறுத்த மட்டில் நல்ல ஒரு சேவையை வழங்கிய திருப்தி. ஆனால் ரசிகர்களிடம் அது எடுபடவில்லை.

அதனால் அம்மணி சைலன்டாக இருந்தார். வாய்ப்பின்றி வீட்டில் இருந்தவரை 'காதல் கோட்டை' க்கு இழுத்து வந்தார் அகத்திய டைரக்டர்.

''பார்க்காமலே கொண்ட ஆழமான காதல்'' இது தான் படத்தின் கரு. இது ரசிகர்களை ஈர்த்தது. இதன் பின்னர் நடிகையை காதல் கோட்டை நாயகி கமலியாகவே பார்த்தனர்.

அதன் பின்னர் 'தேவ' நடிகைக்கு வாய்ப்புக்கள் மள மள வென்று வந்து குவிய ஆரம்பித்தன. நாயகியின் வங்கிக்கணக்கும் ஏற ஆரம்பித்தது.

நடிகையின் வாழ்வில் குத்து விளக்கை ஏற்றி வைத்தவர் அகத்திய டைரக்டர் என்றாலும் தொடர்ந்து விளக்கைப் பிரகாசிக்க வைத்தவர் களஞ்சிய டைரக்டர் தான்.

களஞ்சிய டைரக்டரின் ஆஸ்தான நடிகையாகவே சில காலம் இருந்தார். அவர் எடுக்கும் எல்லாப்படங்களிலும் நடிகை தான் நாயகி.

அம்மணி களஞ்சிய டைரக்டரைத்தன் வலையில் விழுத்தி விட்டதாகவும் விரைவில் இருவரும் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் பேச்சு அடிபட்டது. ஆனால் இப்போது களஞ்சியம் காலா வதியாகி விட்டது. நடிகை இப்போது ராஜகுமார டைரக்டரின் ஆஸ்தான நடிகையாகி விட்டார்.

ராஜகுமாரரும் நடிகைக்காகப் படங்களைத் தொடர்ந்து எடுத்து வருகிறார். நீ வருவாயெனத் திடமாகச் சொல்லி வைத்தவர் இப்போது விண்ணுக்கும் மண்ணுக்குமாகத் தாவிக் கொண்டிருக்கிறார்.

அடுத்து டைரக்டர் எடுக்கும் படத்திலும் அம்மணி தான் நாயகியாம்.

எது எப்படியோ செல்லமாகக்கொஞ்சி நடிப்பது மட்டுமல்ல, பாரதியின் மனைவி செல்லம்மாவாகவும் நடித்துவிட்டவர்.

அம்மணியின் வலையில் இன்று இவர். நாளை யாரோ!

# திரை மறைவில்

முதல்வனின் சிஷ்யர் இயக்கும் இனிக்கும் படத்தில் 'மின்னலே' நாயகியைத்தான் ஒப்பந்தம் செய்தார்கள். 'மின்னலே' படத்தில் அசத்திய அம்மணி சாக்லேட்டையும் இனிக்கச் செய்வார் என்றார்கள்.

ஆனால் கவர்ச்சியான'தாஜ்' நடிகை தனது கைங்கரியத்தினால் 'மின்னலே' நாயகியின் வாய்ப்பைத் தட்டிப்பறித்திருக்கிறார். ஒன்றுக்கு இரண்டு வேடங்களில் நடிக்கிறார். கவர்ச்சியில் அசத்தப் போகிறாராம்.

**

தன் தங்கையை எப்படியாவது ஃபீல்டில் நிறுத்திவிட வேண்டுமென்பதில் குறியாக இருக்கிறார் 'ரன்' நடிகை.

இதற்கெனத் தங்கையிடம் அட்வைஸ் செய்திருப்பதோடு தனக்குத் தெரிந்த புரடியூசர், நடிகர், டைரக்டர்களிடம் சிபாரிசு செய்கின்றாராம்.



ஆனாலும் என்ன செய்தும் என்ன பிரயோசனம். அவருடைய மனேஜர் எந்த வித ஆர்வமும் காட்டாததினால் பார்வை பார்த்த படத்தைத் தவிர வேறு படங்கள் வரவில்லை.

இதை அறிந்த 'ரன்' நடிகை மனேஜரை நீக்கி விட்டு புதிய ஒருவரை மனேஜராக்கி யிருக்கிறாராம். இதற்கு முக்கியமான ஒருகாரணமும் உண்டாம். அவர் 'விந்திய 'நடிகைக்கும் மனேஜராக இருந்தவராம்.

**

'ஸ்நேக' நடிகை விருப்பத்திற்குரியவளே பெயர் கொண்ட படத்தில்'பெப்ஸி' மாடல் நடிகருடன் நடித்தார்.

இப்போது என்னடா வென்றால் நடிகை பெப்ஸி மாடலின் இதயத்தின் ஒரு மூலையில் இடம் பிடித்து விட்டாராம்.

இதன் ரியாக்ஷனாக தனக்கு வரும் பல புதிய படங்களில் அம்மணியையும் கதாநாயகி யாகப் போடுமாறு வற்புறுத்தி வருகிறாராம் நடிகர்.

இதற்கு கைமேல் பலனும் கிடைத் திருக்கிறது. இயக்குனர் சிகரத்தின் 100ஆவது படத்தில் அம்மணி பெப்ஸி மாடலுடன் மறுபடியும் இணைந்து நடிக்கப் போகிறார்.

**

உள்ளத்தைக் கொள்ளை கொண்ட படத்தினை பெரிதும் நம்பி இருந்தார் கவர்ச்சி காட்ட வந்த தெலுங்கு நடிகை.



ஆனால் படம் நடிகைக்கு டாட்டா காட்டி விடவே மீண்டும் தெலுங்குப்பக்கம் போவதற்கு முடிவெடுத்திருக்கிறாராம்.

ஆனால் அம்மணியுடன் ஜோடி சேர்வதற்கு எண்ணியிருந்த சில ஹீரோக்கள் அம்மணியின் பயணத்தை சிவப்புச் சிக்னல் போட்டு நிறுத்தி வைத்திருக்கிறார்களாம்.

(படம் பார்த்த ரசிகர்கள் உங்களை ஒட்டகச் சிவிங்கி என்று சொல்வதை ஹீரோக்கள் சொல்லவில்லையா அம்மணி!)

**

எப்படியாவது 'இஷா'வுடன் ஜோடி சேர்ந்து நரசிம்ம ஆட்சி நடத்தி விடுவது என்பதில் உறுதியாக நின்று அதில் வெற்றியும் பெற்றிருக்கின்றார் வெற்றி காந்த்.


ஆனால் இதில் அவரது திருமதிக்குத் துளியும் விருப்பமில்லையாம். சௌந்தர்யத்தைத்தான் தமிழுக்குக் கொண்டுவருவதற்கு எண்ணியிருந்தாராம் திருமதி. ஆனால் கணவர் தான் ஜெயித்திருக்கிறார்.


# RTK GROUP

57, 57/1, Manning Place,
Colombo-06.
Tel: 505059, 074-515083

| Video Vision | New Branch | Hardware Stores | Communications | Transport Services |
|---|---|---|---|---|
| *Tamil, English movies, Tamil Drama Cassettes, VCDs & Audio Cassettes* | *Tamil, English, Hindi Movies, Tamil Drama Cassettes, VCDs & Audio Cassettes* | *Cement, Lime, Asbestos, Steel & Building Materials* | *Local, IDD, Fax, Photocopy & Connecting Calls* | *Vans, Lorries. Marine Transport from Colombo to Jaffna and back.* |
| 57, 57/1, Manning Place, Colombo-06. Tel: 505059. | 59, Hampden Lane, Colombo-06. Tel: 074-516240 | 57, Manning Place, Colombo-06. Tel: 597677 | 57A, Manning Place, Colombo-06. Tel: 074-519506, 074-517630 | 334, Wolfendhal Street, Colombo-13. Tel: 074-517631, 01-597677 |

# புதைகுழியிலிருந்து...?



தெற்கு லண்டனிலுள்ள லம்பேத் நகரம், இரண்டாம் உலக மகா யுத்தத்தின் ஆரம்பக் கட்டத்தில் விமானக் குண்டு வீச்சுகளினால் சின்னா பின்னமாகி விட்ட தொரு பிரதேசம். இடிந்து சிதைந்து விட்ட தொரு பெப்டிஸ்ட் தேவாலயத்தின் அருகாக சிலர் துப்புரவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஓரிடத்தில்......

ஒரு வேலையாள் புதர்களை வெட்டி எறிந்து கொண்டிருக்கிறான். 'டங், டங், டங்'கென பாறையொன்றின் மீது மோதுவது போல் சத்தம் எழுகிறது.

'என்னடா இது' என கலவரமடைந்து விட்ட வேலையாள் அந்த இடத்தில் வெட்டிக் குவித்த புதர்களை 'பர பர'வென அப்புறப்படுத்துகிறான். மணற் குவியலை வாரி வாரி எடுத்தான். கல்லறை ஒன்றை மூடி வைத்தாற் போன்ற காங்கிறீட் மூடியொன்று வெளியில் தெரிகிறது.

கொஞ்ச நேரம் விறைத்தவாறு நின்ற வேலையாள் தம் பிடித்து காங்கிறீட் படியை தூக்கிப் பார்த்தான். உம்கும் முடியவில்லை.

'ஏய்! இங்கே வாருங்கள்!'

ஆங்காங்கே வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சக வேலையாட்களை சத்தமிட்டுக் கூப்பிட்டான்.

அனைவரும் ஓடோடி வந்தார்கள். எல்லோருமாகச் சேர்ந்து காங்கிறீட் மூடியைத் தூக்கினார்கள்.

உள்ளே....

ஓர் எலும்புக் கூடு கிடக்கிறது. சதை அழுகிக் கரைந்து எலும்புக்கூடாக வெளியில் தெரிகிறது. அதனைக் கண்டதும் 'ஓ! ஜீசஸ்!' என அலறிக் கொண்டு அனைவரும் பின்னால் எகிறிப் பாய்ந்தார்கள்.

சதை முற்றாகவே கரைந்து அழுகிய நிலையில் கிடக்கும் எலும்புக் கூட்டின் தலை அதன் ஒரு நுனியில் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

***

டாக்டர் கீத் சிம்சன் பல நுட்பமான கொலைகளைக் கண்டு பிடித்தவர். ஒரு சிறு ஆதாரம் கிடைத்தாலே தனது நுட்பமான இரசாயன ஆய்வின் மூலம் கொலையுண்டவர் யார்? எவ்வாறு கொலை செய்யப்பட்டார்? என்ற விவரங்களை வெளிக் கொணர்ந்து விடுவார். அதன் பிறகு கொலையாளியைத் தகுந்த ஆதாரங்களுடன் கைது செய்துவிடுவது பொலிஸாருக்கு சுலபமாகிவிடும்.

அத்தகையதொரு மனிதரின் முன்னால் ஒரு மேசையில், கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடு கிடக்கிறது.

எலும்புக் கூட்டின் சில பகுதிகளில் ஆங்காங்கே அழுகலான சதைத் துணிக்கைகள் ஒட்டிக் கிடக்கின்றன. புதைக்கப்பட்ட இடத்தில் சுண்ணாம்புப் பாறைகளும், மணலும் கிடந்தமையால் அவையும் ஆங்காங்கே படிவுகளாக இறுகிக் கிடக்கின்றன.

குழியினுள்ளிருந்து எலும்புக் கூடு வெளியில் எடுக்கப்படும் போது அதனை உதறாமல், எலும்பில் ஒட்டிக் கொண்டிருப்பவை சிதறாமல் எடுக்க வேண்டும் என டாக்டர் கீத் சிம்சன் உத்தரவு பிறப்பித்திருந்தார். அவருடைய உத்தரவுப் பிரகாரம் நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டு எலும்புக் கூடு வெளியில் எடுக்கப்பட்டது.

மணல், சுண்ணாம்பு, சதை, இடுப்பெலும்பு ஒவ்வொன்றையும் மிக நுணுக்கமாக இரசாயன மருந்துகளின் மூலம் ஆய்வு செய்த டாக்டர் கொலையுண்டவர் யார் என்ற விவரத்தை வெளியிட்டார்.

அவர் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் 12 முதல் 18 மாதங்களுக்குள் கொலை இடம் பெற்றுள்ளது. கொலையுண்டவர் ஒரு பெண். அவர் 45—50க்கும் இடைப்பட்ட வயதானவர்.

கொலை செய்யப்பட்டவர் பற்றிய தகவல்களை டாக்டர் வழங்கியதும் பொலிஸார் உஷாரடைந்தனர்.

எப்படிக் கொலை செய்யப்பட்டார்? என்ற கேள்வி எழுந்தது. டாக்டரின் இரசாயன ஆய்வு தொடர்ந்தது.

பகுதி பகுதியாக நுணுக்கமாக ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன.

கூர்மையானதொரு கத்தியால் ஒரே வீச்சில் கழுத்து துண்டாடப்பட்டுள்ளது. முதலில் கழுத்து நெரிக்கப்பட்டதன் பின்னரே கழுத்து வெட்டப்பட்டிருக்கின்றது என்ற போதும் ஒரு மயிரிழையான நரம்பு மட்டும் அறுபடவில்லை. கீழ் நாடி துண்டாடப்பட்டுள்ளது. கைவிரல்கள் அறுத்து அறுத்து துண்டாடப்பட்டுள்ளன. தலையின் பின்பாகம் தீயினால் கொளுத்தப்பட்டுள்ளது. நெருப்பு நடு முதுகு வரை எரிந்து கொண்டு சென்றுள்ளது. இதனால் நடு முதுகெலும்பு வரை கருகியுள்ளது.

டொப்கினும் ரேசலும் கணவனும் மனைவியும். அவர்கள் நன்றாகவே குடும்பம் நடத்தி வந்தனர். எனினும் இருவருக்கும் இடையில் பிரச்சினைகளும் இல்லாமல் இல்லை. ஒரு நாள் டொப்கின் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டான். பின்பு ஒரு வாரத்தின் பின்னர் டொப்கினைத் தேடிக்கொண்டு ரேசலும் வெளியேறினாள். பல மாதங்கள் கடந்த நிலையில் காங்கிறீற்றுக்குக் கீழ் இருந்து சதை முற்றாகக் கரைந்து அழுகிய எழும்புக் கூடு ஒன்று மீட்கப்படுகிறது. அது யாருடைய எலும்புக்கூடு? தொடர்ந்து படியுங்கள்

புதைக்கப்பட்ட இடத்தில் சுண்ணாம்புப் பாறைகள் போடப்பட்டுள்ளன. சதை கரைந்ததன் பிறகு எலும்புகளும் சீக்கிரமாகக் கரைந்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில் இவைகள் போடப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு வியப்பு. ''அடேங்கப்பா ஆசாமி பலே கில்லாடியாய் இருப்பான் போலிருக்கே'' என சி.ஐ.டி அதிகாரி மூக்கில் விரலை வைத்தார்.

***

கொலைகாரனைத் தேடும் படலம் ஆரம்பமாயிற்று.

முதலில் முழு எலும்பும் ஓர் உருவமாக்கப்பட்டது. அறுந்த கழுத்து, கை விரல்கள், எரிந்த தலை, கருகிய நடு முதுகெலும்பு என்பன செயற்கையாக உருவாக்கப்பட்டு, செயற்கைச் சதை பொருத்தப்பட்ட மெழுகிலான பெண் பொம்மை ஒன்று உருவாக்கப்பட்டது. டாக்டரிடமிருந்து பெரும் ஒத்துழைப்பைப் பெற்றுவிட்ட சி.ஐ.டி அதிகாரி பிரட் ஹட்டன் உற்சாகமுடன் செயலில் இறங்கினார்.

முதலில் அந்தப் பிரதேசத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்குள் காணாமற் போனவர்கள் எவராவது இருக்கின்றார்களா என்ற புலன் விசாரணை ஆரம்பமானது.

பொலிஸ் நிலையங்களிலுள்ள முறையீட்டுப் புத்தகங்களைப் பரிசீலனை செய்து கொண்டு போனபோது ஒரு தகவல் கிடைத்தது.

திருமதி ரேசல் டொப்கின் என்பவர் காணாமற் போனதாக அவருடைய சகோதரர் பொலிஸில் முறையீடு செய்திருந்தார். ரேசல் டொப்கின் 47 வயதானவர் என்றும் அவர் 5 அடி ஓர் அங்குலம் உயரமானவர் என்றும் தகவல் வழங்கப்பட்டிருந்தது.

***

திருமதி ரேசல் டொப்கினின் வீட்டு வாசலில் சி.ஐ.டி அதிகாரி பிரட் ஹட்டனின் ஜீப் வந்து நின்றது.

ரேசல் டொப்கினின் சகோதரியை பிரட் ஹட்டன் விசாரித்தார்.

'மிஸ்' என்ன நடந்தது சொல்லுங்கள்? பயத்தால் நடுங்கிய ரேசலின் சகோதரி அவளுடைய குடும்ப வாழ்வைப் பற்றிச் சொன்னாள்.

'ரேசலும் மிஸ்டர் டொப்கினும் நன்றாகவே குடும்பம் நடத்தி வந்தார்கள் என்றாலும் அவர்களுக்கிடையில் அடிக்கடி சண்டை நடைபெற்றுக் கொண்டே இருந்தது. டொப்கின் சாதுவான குணம் படைத்தவர். அதிகமாகப் பேசமாட்டார். சதா சண்டை பிடிப்பது ரேசல் தான். டொப்கின் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்ததால் கடன் தொல்லையில் மாட்டிக் கொண்டார். சண்டைக்கு அதுவே காரணமாகும். கடைசியாக நடைபெற்ற சண்டையின் பின்னர் டொப்கின் வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். அன்று போனவர் தான் மறுபடியும் திரும்பவில்லை. அவர் சென்றதன் பின்னர் ஒரு வாரத்தின் பின்னர் அவரைத் தேடிக்கொண்டு ரேசல் வெளியேறிச் சென்றவள் தான். திரும்பவே இல்லை. அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை என்பதால் பிரச்சினை இல்லை....'

சி.ஐ.டி அதிகாரி வெகு கவனமாகக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

''மிஸ்டர் டொப்கின் எங்கே?''

''அவர் மஞ்செஸ்ட்டரில் இருப்பதாகக் கேள்வி.''

''ரேசல் வீட்டை விட்டுப் போவதற்கு முன்னர் ஏதும் கூறினாளா?''

''இல்லை. ஆனால் தொலைபேசி அழைப்பொன்று வந்ததன் பின்னரே மிகவும் உற்சாகமாகச் சென்றாள்.''

***

மஞ்செஸ்ட்டர் நகரம் முழுவதும் மூன்று நாட்கள் ஓடித்திரிந்த சி.ஐ.டி அதிகாரி டொப்கினை கண்டு பிடித்தார். ஒரு சூதாட்டக் கிளப்பிலிருந்து அவன் கைது செய்யப்பட்டான். பொலிஸ் கொடுத்த சித்திரவதையில் மனைவி ரேசலை கொன்றொழித்த விவரத்தை அவன் முழுவதுமாகக் கக்கினான். டாக்டர் தனது வைத்திய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது போல அனைத்தும் நடைபெற்றிருந்தன.




## அதிசய டாக்டர்

பிரேசில் நாட்டில் ஒரு போலி டாக்டர் அகப்பட்டிருக்கிறார். அவர் பெயர் அரிகோ.

சாதாரண விவசாயியான அரிகோ ஆரம்பப் பாடசாலைக்கே சென்றது கிடையாது. இவருக்குக் கனவில் அடிக்கடி ஒரு டாக்டர் வந்து மருத்துவம் பற்றிப் போதிப்பாராம். அந்த வழக்கம் நாளடைவில் அரிகோவும் மருத்துவராகும் வாய்ப்பைத் தந்திருக்கிறது.

ஆனால் இவர் வைத்தியம் பார்த்தவர்கள் குணமடையாமல் இருந்தது கிடையாது. தன்னிடம் வரும் நோயாளிகளிடம் அவர்களுக்கு என்ன நோய் என்றெல்லாம் விசாரிக்க மாட்டாராம் அரிகோ.

பெயரை மட்டும் கேட்டு அவருக்கான சிகிச்சையைச் சரியாக அளிப்பாராம். சிறிதும் வலி தெரியாது கண் ஆபரேஷனும் செய்து காட்டிய அரிகோவை இறுதியில் பொலிஸார் கைது செய்தார்கள். போலி டாக்டர் என்று பட்டம் கட்டி அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டது. ஆயினும் அவர் செய்த மருத்துவம் தவறானது என்று எந்த டாக்டர்களாலும் நிரூபிக்க முடியவில்லையாம்.

இதில் குறிப்பிடவேண்டியது என்னவென்றால் அரிகோ வைத்தியத்திற்காக எவரிடமும் பணம் வாங்கியது கிடையாது.

# தமிழ்ப் பெண்களின் மானம் காக்கும் போராட்டம் மன்னாரில் ஆரம்பம்

## அமைதி ஊர்வலம் நடத்த படையினர் அனுமதி மறுப்பு

தமிழ்ப் பெண்களுக்கு எதிரான படையினரின் பாலியல் வல்லுறவுகள், சித்திரவதைகள் ஆகியவற்றுக்கு இனியாவது முற்றுப் புள்ளி வைக்கப்படுமா?

மன்னாரில் இரண்டு தமிழ்ப் பெண்களைக் கைது செய்து படையினர் இழைத்துள்ளதாகக் கூறப்படும் கொடூர சித்திரவதைகளை அடுத்து இக் கேள்வி இன்று எழுப்பப்படுகிறது.

தமிழ்ப் பிரதேசங்களில் முன்னரும் இவ்வாறான அநியாயங்கள் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுள்ளன.

அப்பொழுதெல்லாம் ''கடும் நடவடிக்கை எடுப்போம். இனி இவ்வாறான சம்பவங்கள இடம் பெற அனுமதிக்க மாட்டோம்'' என்று அரசாங்கத் தலைவர்கள் உறுதி அளித்தார்கள்.

ஆனால் அந்த உறுதி மொழிகள் வடக்கு–கிழக்கில் 'கட்டுமீறும்' படையினருக்கு கடிவாளமிடத் தவறி விட்டன என்பதையே மன்னார் சம்பவமும் நிரூபிக்கின்றது.

படையினரில் பலர் மனித உரிமைகளை மதிப்பதில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டு.

விஜிகலா, சிவமணி என்னும் இரண்டு பெண்கள் படையினரால் கைது செய்யப்பட்டு, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து பல தரப்பினரும் ஆத்திரமடைந்துள்ளனர்.

லண்டனை தலைமையகமாகக் கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபை இது குறித்து ஜனாதிபதியிடம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இச் சம்பவத்துக்கு காரணமானவர்களை நீதியின் முன் கொண்டு வருமாறு அச்சபை அறிக்கை ஒன்றில் கோரியுள்ளது.

''மன்னார், மட்டக்களப்பு, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பாதுகாப்புப் படையினரால் மேற் கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவுகள் பற்றிய பல தகவல்களை அறிவோம். கைது செய்யப்பட்டுள்ள பெண்களைக் காப்பாற்றும் பாதுகாப்புகள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம்'' என்று சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மன்னார் பள்ளிமுனையில் காமலிற்றா என்னும் யுவதியின் கொலைக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை. இந்த நிலையில் இந்த இரு பெண்கள் விடயத்திலும் அரசிடமிருந்து நீதி கிடைக்குமா என்ற சந்தேகமே மன்னார் மக்களிடையே உள்ளது.

மன்னார் மக்கள் கடந்த சனியன்று மரியன்னை ஆலய முன்றலில் ஒன்று கூடி இந்த பாலியல் வல்லுறவுச் சம்பவத்தைக் கண்டித்து சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெருந்தொகையான ஆண்கள், பெண்கள், சிறுவர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

மன்னார் மாதர் முன்னணி, மறைவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு என்பன இதனை ஒழுங்கு செய்திருந்தன.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை கூடியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றினார். ''பெண்களுக்கு இழைக்கப்படும் அட்டூழியங்கள், அநியாயங்கள் பல ஆண்டுகளாக இடம்பெற்று வருகின்றன. இரண்டு பெண்களுக்கு நேர்ந்தவற்றை நேரடியாகக் கேட்டு அறிந்து கொண்டேன். அநீதிகள் இழைக்கப்படும் பொழுது முறையிட்டால் விசாரிப்போம், தண்டிப்போம் என்று உறுதியளிப்பார்கள். கதை அத்துடன் முடிந்து விடும்.

''இப்பொழுதும் நீதி கிடைக்கும் என்பது நிச்சயமல்ல. இருந்தாலும் உலகம் இதனை அறிந்து கொள்ள வேண்டும். அதற்காக நாம் குரல் கொடுக்க வேண்டும்''.

இப்படி ஆயர் கூறினார்.

சாத்வீகப் போராட்டத்தின் இறுதியில் மௌன ஊர்வலம் செல்லத் திட்டமிடப்பட்டது. அடைக்கலநாதன் எம்.பி படையினரிடம் இதற்கான அனுமதியைக் கோரினார். ஆனால் அனுமதி மறுக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் கடற்படையினரும் சம்பந்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவித்தன. இச் செய்திகளை கடற்படையின் ஊடக இணைப்பாளரான கமாண்டர் ரொஹான் அமர சிங்க மறுத்துள்ளார்.

இந்த இரு பெண்களையும் கடற்படையினரே கைது செய்தனர் என்பதை அவர் ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால் பாலியல் வன்முறையிலோ, சித்திரவதையிலோ கடற்படையினர் எவரும் சம்பந்தப்படவில்லை என்பதை அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஜி. சோமசேகரம் இந்த இரு பெண்களையும் இரண்டு தடவைகள் வைத்திய பரிசோதனை செய்துள்ளார். விஜிகலா பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டிருப்பதையும் சிவமணி பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டிருப்பதையும் அவர் இரண்டாவது அறிக்கையில் உறுதிப்படுத்தியுள்ளார். அவரது மருத்துவ அறிக்கை மன்னார் மாவட்ட நீதிவானிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 22 ஆம் திகதி இந்த இரு பெண்களும் முதல் தடவையாக மருத்துவ அதிகாரியின் முன் பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டனர். நடந்த உண்மைகளை மருத்துவ அதிகாரியிடம் கூறக் கூடாதென இருவரும் எச்சரிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. இதனால் நடந்த சம்பவங்கள் எதுவும் வெளிவரவில்லை.

மார்ச் 27 ஆம் திகதி மன்னார் ஆயர் இந்தப் பெண்களை அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்தில் சென்று சந்தித்தார்.

அப்பொழுது அவர்கள் இருவரும் தமக்கு நேர்ந்தவற்றைக் கூறியுள்ளனர்.

அந்த விடயங்களை ஆயர் பின்னர் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

அதையடுத்து நீதிவானின் உத்தரவுப்படி இரு பெண்களும் இரண்டாவது தடவையாக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இரண்டாவது பரிசோதனையிலேயே விஜிகலா பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதும் சிவமணி பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டதும் தெரியவந்தது.

இப்பொழுது இந்தச் சம்பவம் மன்னார் நீதிமன்றத்தில் முறையிடப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் விசாரணைக்கு உதவுவது அரச தரப்பின் கடமை ஆகும். அந்தக் கடமை சரிவர நடைபெறுமா?

— அவதானி

# இலங்கை உப்புக்கு சர்வதேச விருது

ஈரத்தன்மையற்ற சுத்திகரிக்கப்பட்ட அயடீன் கலந்த உப்பை இலங்கையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர்கள் ''லிங்க் இம்போர்ட்ஸ்'' ஸ்தாபனத்தார். இவர்கள் தமது லிங்க் உப்பை 10 வருட காலமாக சந்தைப்படுத்தி வருகின்றனர்.

இவர்களுக்கு 2000 ஆம் ஆண்டுக்கான சர்வதேச தரச் சிறப்பு விருது (World Quality Commitment Award) வழங்கப்பட்டுள்ளது. இதனை Business Initiative Direction என்ற ஸ்தாபனம் வழங்கியிருக்கிறது.

இந்த விருது வழங்கும் வைபவம் கடந்த மார்ச் மாதம் ஸ்பெயினில் நடைபெற்றது. இந்த ஸ்தாபனத்தின் சார்பாக லிங்க் இம் போர்ட்ஸ் ஸ்தாபனத்தின் நிர்வாக முகாமையாளர் ஏ.தேவானந்தன் விருதைப் பெற்றுக் கொண்டார்.



கடந்த மாதம் ஸ்பெயினில் இடம்பெற்ற வர்த்தக முன் முயற்சி தொடர்பான சர்வதேச மாநாட்டில் 2000 ஆம் ஆண்டுக்கான சர்வதேச தரச் சிறப்பு தங்க நட்சத்திர விருதை லிங்க் இம்போர்ட்ஸ் நிர்வாக முகாமையாளர் ஏ. தேவானந்தன் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

லிங்க் தூள் உப்பை உள்நாட்டில் மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்த ஸ்தாபனத்தார் ஏற்றுமதி செய்து வருகின்றனர். அத்துடன் ரோயல், லிங்க், ஆசியன் பமிலி புட் என்ற முத்திரை பதிக்கப் பட்ட பெயர்களில் துணை உணவுப் பொருட்களையும் கனடா, டென்மார்க் போன்ற நாடுகளுக்கு இவர்கள் ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

சர்வதேச ரீதியில் இலங்கைக்குப் பெருமை தேடித் தந்த லிங்க் நிறுவனத்தினரின் லிங்க் தூள் உப்பு மயுரா (Mayura) கட்டி உப்பு போன்றவை பாவனையாளர்களிடையே நல்ல பெயரைப் பெற்றுள்ளன. இவற்றை இலங்கையின் அனைத்துக் கூட்டுறவு நிலையங்களிலும் பலசரக்குக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.


**HOTEL ANNAPOORANAA**

High Class Vegetarian Food and Sweets

ஸ்தாபனத்தார் தமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், அபிமானிகள் அனைவருக்கும் தமது புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார்கள்.

159-A, Sea Street, Colombo - 11
Sri Lanka.
Tel : 330621



**Internet & E-mail** — One day class with Practicals

Learning Internet has never been so easy before.
With our scientific approach, now it is not only easy but a fun too!

How to search for information in the Internet?
How to use E mail programmes?
How to do a live chat with thousands of people around the world?
How to take free IDD calls through Internet?
How to send a free fax from your Computer?

Learn all this in ONE day !!
Learn the power of Internet today!!!

9am-5pm. (Every Sunday)
Course fee 900/= Only
Limited Participants.
Call now & reserve your seat

BIOS Computer Systems
No:12, Rajapokuna Mw. Maligawattha, (Opposite PRADEEPA HALL) TP: 543663



அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**SRI KRISHNA TRADERS**

No. 160, Wlofendhal Street,
Colombo -13.
Tel: 321449

HAPPY NEW YEAR

Branch:
**JEYA KRISHNA TRADERS**
No. 240, Stanley Road,
Jaffna.
Tel: 021-2837



தமிழ் பேசும் அனைத்து உள்ளங்களிற்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களைக் கூறி பாலவிநாயகர் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்!

**BVM**
**BALA VINAYAKAR MOTORS**
Dealers in Motor cycle and spare Parts

Colombo Office :- 42C, Galle Road, Wellawatte.
Colombo - 06.
Tel : 505065

Head Office :- No. 8, Stanley Road, Jaffna.

# 'காதலன்' தொல்லையால் மார்ட்டினா அச்சம்

டென்னிஸ் வீராங்கனை மார்ட்டினா ஹிங்கிஸை காதலிப்பதாகக் கூறும் ஒரு நபர் நீதிமன்றத் தண்டனையை எதிர்நோக்கியுள்ளார்.

சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த மார்ட்டினா ஹிங்கிஸ் 1997இல் விம்பிள்டன் சாம்பியனாகி மிக இளம் வயதில் அப்பட்டத்தைக் கைப்பற்றிய பெருமைக்குரியவர். தற்போது டென்னிஸ் வீராங்கனைகளின் தரப்படுத்தல் வரிசையில் முதல் நிலையிலுள்ளார்.

டப்ரவ்கோ ரஜ்செவிக் என்பவருக்கு மார்ட்டினா ஹிங்கிஸ் மீது தீவிர ஒருதலைக் காதல். குரோஷியாவில் பிறந்த ரஜ்செவிக் தற்போது அவுஸ்திரேலிய பிரஜை. கப்பல் பொறியியலாளராகத் தொழில் புரிந்தவர். வயது 46. ஏற்கனவே திருமணம் புரிந்து 7 வயதில் ஒரு மகனும் உள்ளார்.



மார்ட்டினா ஹிங்கிஸ்



ரஜ்செவிக்.

ஹிங்கிஸ் போகுமிடமெல்லாம் இவரும் பின்தொடர்ந்தார். மலர்ச் செண்டுகளை அனுப்பினார். தொலைபேசி, பெக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு தான் ஹிங்கிஸை திருமணம் செய்ய விரும்புவதாகவும் தன்னை சந்திக்கும்படியும் கூறினார்.

ஜேர்மனியில் நடந்த சுற்றுப்போட்டியொன்றின்போதே முதன்முதலில் ஹிங்கிஸை தொடர்புகொண்டார் ரஜ்செவிக். ஹிங்கிஸ் தங்கியிருந்த ஹோட்டலறைக்குத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு தனியாக சந்தித்து தனது காதல் எவ்வளவு ஆழமானது என்பதை வெளிப்படுத்த சந்தர்ப்பம் தருமாறு கூறியதோடு, "உங்கள் காதலனாக நான் இருக்கலாமா?" என்றும் கேட்டார்.

"நீங்கள் எனது தந்தையாக வேண்டுமானால் இருக்கலாம். தயவு செய்து எனது வாழ்க்கையில் குறுக்கிட வேண்டாம்" என்று கூறிவிட்டார் 20 வயதான மார்ட்டினா.

ஆனால் ரஜ்செவிக் விடவில்லை. கடந்த வருடம் அமெரிக்காவில் நடந்த எரிக்ஸன் கிண்ணச் சுற்றுப்போட்டியின்போதும் 'காதல் யாத்திரையை' மேற்கொண்டார்.

இதனால் தன்னை அநாவசியமாகப் பின்தொடர்ந்து தொல்லை தருவதாக பொலிஸில் முறைப்பாடு செய்தார் ஹிங்கிஸ். ரஜ்செவிக் கைது செய்யப்பட்டு 1,000 அமெரிக்க டொலர் ரொக்கப் பிணையில் விடுதலையானார். அதன்பின் ரஜ்செவிக் மீண்டும் மார்ட்டினா போட்டியிடும் அரங்கிற்குள் டிக்கட் ஒன்றுடன் நுழைய முற்பட்டார். இதனால் அவர் மீண்டும் கைதானார். இம்முறை இருபது லட்சம் டொலர் ரொக்கப் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. இதை செலுத்த வழியில்லாததால் ஒரு வருடமாக சிறையில் இருக்கிறார் ரஜ்செவிக்.

அநாவசியமாகப் பின்தொடர்தல், அத்து மீறிப் பிரவேசித்தல் போன்ற (மும்முறை) குற்றங்களுக்காக இவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

நீதிமன்றில் சாட்சியமளித்த மார்ட்டினா ஹிங்கிஸ், 1999 விம்பிள்டன் போட்டியில் முதல் சுற்றிலேயே தான் வெளியேறுவதற்கு ரஜ்செவிக்கே காரணம் எனக் கூறினார். அச்சம் காரணமாக முழுநேர மெய்ப் பாதுகாவலர்களை நியமிக்க நேர்ந்ததாகவும் கூறுகிறார்.

"ஒருவர் விவாகரத்துச் செய்துவிட்டு இன்னொருவரை மணம்புரிவது ஒரு குற்றமில்லையே! நான் ஒருபோதும் மார்ட்டினாவை துன்புறுத்தவில்லை. எப்போதாவது என் மனைவியாகப் போகிறவரை நான் துன்புறுத்துவேனா?" என்று நீதிமன்றில் கூறினார் டப்ரவ்கோ ரஜ்செவிக்.

கடந்த வாரம் முடிவுற்ற வழக்கு விசாரணையின் படி ரஜ்செவிக் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. தண்டனை விவரம் உடனடியாக அறிவிக்கப்படவில்லை. ஒவ்வொரு குற்றத்திற்கும் தலா ஒரு வருடம் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## விளையாட்டுச் செய்திகள்!

– ஆர். சேதுராமன்

# சச்சினின் 10000 ஓட்டங்களில்...

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 10,000 ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை புரிந்துள்ளார் சச்சின் டெண்டுல்கர். அணிகள், துடுப்பாட்ட வரிசை, ஆண்டு வாரியாக அவரது சாதனை விவரம் இங்கே தரப்படுகிறது.



சச்சின்

ஒவ்வொரு துடுப்பாட்ட நிலையிலும்...

| நிலை | இன். | ஆ.இ | ஓட் | சரா. | 100 | 50 |
|---|---|---|---|---|---|---|
| 1,2 | 176 | 10 | 7853 | 47.30 | 27 | 33 |
| 3 | 4 | - | 49 | 12.25 | - | - |
| 4 | 41 | 4 | 1369 | 37.00 | 1 | 12 |
| 5 | 36 | 8 | 797 | 28.46 | 0 | 5 |
| 6 | 3 | - | 91 | 30.34 | - | - |
| 7 | 1 | - | 20 | 20.00 | - | - |
| மொத். 261 | 22 | 10179 | 42.94 | 28 | 51 | |

ஒவ்வொரு 1000 ஓட்டங்களையும் பூர்த்தி செய்த விவரம்:

| | போ | இ | ஓட். | கூ.ஓ | சரா. | 100 | 50 | எதிரணி | இடம் | திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1000 | 36 | 34 | 1075 | 81 | 35.83 | - | 10 | ஸிம்ப். | ஹமில்டன் | 07-03-92 |
| 2000 | 73 | 70 | 2006 | 84 | 32.89 | - | 16 | ஐ.அ.எ. | சார்ஜா | 13-04-94 |
| 3000 | 96 | 93 | 3029 | 115 | 36.94 | 4 | 21. | இலங். | சார்ஜா | 09-04-95 |
| 4000 | 115 | 112 | 4081 | 137 | 40.01 | 8 | 25 | தெ.ஆ | சார்ஜா | 17-04-96 |
| 5000 | 141 | 138 | 5021 | 137 | 40.17 | 11 | 31. | தெ.ஆ | டேர்பன் | 12-02-97 |
| 6000 | 176 | 170 | 6050 | 137 | 39.29 | 12 | 39 | பாக். | டாக்கா | 14-01-98 |
| 7000 | 196 | 189 | 7070 | 143 | 41.10 | 17 | 42 | இலங் | கொழும்பு | 07-07-98 |
| 8000 | 217 | 210 | 8038 | 143 | 42.53 | 22 | 43 | பாக். | மஞ்செஸ்டர் | 08-06-99 |
| 9000 | 242 | 235 | 9043 | 186* | 42.46 | 25 | 46 | தெ.ஆ. | நாக்பூர் | 19-03-00 |
| 10000 | 266 | 259 | 10105 | 186* | 42.64 | 28 | 50 | அவுஸ். | இந்தூர் | 31-03-01 |

ஒவ்வொரு அணிகளுக்கும் எதிராக....

| | போ. | இ | ஓட் | அகூ | 100 | 50 |
|---|---|---|---|---|---|---|
| ஆஸி. | 33 | 33 | 1552 | 143 | 6 | 6 |
| பங்களா. | 6 | 5 | 199 | 54 | - | 1 |
| இங்கி. | 14 | 14 | 384 | 91 | -- | 2 |
| கென். | 5 | 5 | 410 | 140* | 3 | - |
| நியூஸி. | 31 | 30 | 1279 | 186* | 3 | 7 |
| பாக். | 43 | 41 | 1335 | 118 | 2 | 9 |
| தெ.ஆ. | 36 | 36 | 1117 | 122 | 2 | 5 |
| இலங். | 45 | 43 | 1760 | 137 | 6 | 9 |
| ஐ.அ.எ. | 1 | 1 | 63 | 63 | - | 1 |
| மே.இ. | 26 | 26 | 843 | 105 | 1 | 7 |
| ஸிம். | 28 | 27 | 1163 | 146 | 5 | 3 |
| மொத். | 268 | 261 | 10179 | 186* | 28 | 51 |

(போ.-போட்டி, இ-இன்னிங்ஸ், ஓட்-ஓட்டங்கள், ஆ.இ. ஆட்டமிழக்காத தடவை, கூ.ஓ- கூடுதலான ஓட்டம், சரா. -சராசரி, 100 -சதம், 50- அரைச்சதம்,)

ஒவ்வொருவருடமும்பெற்றஓட்டங்கள்

| வருடம் | போ. | இ. | ஓட் | 100 | 50 |
|---|---|---|---|---|---|
| 1989 | 1 | 1 | - | - | - |
| 1990 | 11 | 10 | 239 | - | 1 |
| 1991 | 14 | 14 | 417 | - | 4 |
| 1992 | 21 | 20 | 704 | - | 6 |
| 1993 | 18 | 17 | 319 | - | 1 |
| 1994 | 25 | 25 | 1089 | 3 | 9 |
| 1995 | 12 | 12 | 444 | 1 | 1 |
| 1996 | 32 | 32 | 1611 | 6 | 9 |
| 1997 | 39 | 36 | 1011 | 2 | 5 |
| 1998 | 34 | 33 | 1894 | 9 | 7 |
| 1999 | 22 | 22 | 843 | 3 | 1 |
| 2000 | 34 | 34 | 1328 | 3 | 6 |
| 2001 | 5 | 5 | 206 | 1 | 1 |

### உலகக்கிண்ண கிரிக்கெட் மைதானத் தெரிவு:
# இந்திய வம்சாவளியினர் புறக்கணிப்பென ஆட்சேபம்

2003ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணச் சுற்றுப் போட்டிக்கான மைதானத் தெரிவில் இனவாதம் காட்டப்படுவதாக ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளுக்கான மைதானங்களின் பட்டியலை சுற்றுப்போட்டியின் பிரதம அமைப்பாளர் அலிபச்சர் அண்மையில் வெளியிட்டார்.

இதில் டேர்பன் நகரிலுள்ள சாட்ஸ்வோர்த் ஓவல் மைதானம் இடம் பெறவில்லை. சர்வதேச போட்டிகளுக்கான தரத்தில் இம்மைதானம் இல்லை என இதற்குக் காரணம் கூறப்பட்டது.

டேர்பன் பெருமளவு இந்திய வம்சாவளியினர் வாழும் பிரதேசமாகும். இங்கு மூன்று லட்சத்திற்கு அதிகமான இந்திய வம்சாவளி மக்கள் வாழ்கின்றனர். இனவாதம் காரணமாகவே இங்குள்ள மைதானம் புறக்கணிக்கப்பட்டுள்ளதென இந்திய வம்சாவளி மக்கள் கூறுகின்றனர்.

இந் நடவடிக்கைக்கு எதிராக அண்மையில் ஆர்ப்பாட்டமொன்றும் நடத்தப்பட்டது.

இந்திய சமூகத் தலைவர்களில் ஒருவரும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உறுப்பினருமான கிரிஷ் மோரர் இதுபற்றிக் கூறுகையில் "இனவாதம் காரணமாகவே இம்மைதானம் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்படவில்லை. இன்னும் இன ஒடுக்கல் முற்றாக மறைந்துவிடவில்லை என்பதை இது நிரூபிக்கிறது" எனக் கூறியுள்ளார். இவ்விடயம் பற்றி சர்வதேச கிரிக்கெட் பேரவையும் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

# பாக். நியூஸிலாந்துக்கு விட்டுக் கொடுத்தது - மியண்டாட்

கடந்த மாதம் நியூஸிலாந்தில் நடை பெற்ற ஒருநாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முடிவுகள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டவை என்று ஜாவிட் மியண்டாட் கூறுகிறார்.



மியண்டாட்

இச்சுற்றுப்போட்டியில் பாகிஸ்தான் 2-3 அடிப்படையில் தோல்வியுற்றது. இத்தொடரில் பாகிஸ்தான் அணியின் பயிற்றுநராகப் பணிபுரிந்தவர் மியண்டாட்.

"சில பாக். வீரர்கள் எனது அறிவுரைகளைப் புறக்கணித்தனர். அதற்குப் பொருத்தமான காரணம் இருக்கவில்லை. போட்டி முடிவுகள் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டும். இத்தொடரிலிருந்து இடை நடுவில் நான் விலகி பாகிஸ்தானுக்கு திரும்ப விரும்பினேன். எனினும் சபையின் வேண்டுகோள் காரணமாக தொடர்ந்தும் கடமை புரிந்தேன்" என்று கூறியுள்ளார் மியண்டாட்.

ஆனால் மியண்டாட் இதுபற்றி தமக்கு முன்னர் தெரிவிக்கவில்லை என பாக். கிரிக்கெட் சபைப் பேச்சாளர் ஒருவர் கூறுகிறார்.

நியூஸிலாந்தில் ஏற்பட்ட தோல்விகள் காரணமாக ஜாவிட் மியண்டாட் பயிற்றுநர் பதவியிலிருந்தும், சாகிர் அப்ஸாஸ்டின் முகாமையாளர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளனர். சார்ஜா போட்டிகளுக்கான முகாமையாளராக யாவர் சயீட் நியமிக்கப்பட்டுள்ளார். நிரந்தர பயிற்றுநராக வெளிநாட்டவர் ஒருவரை நியமிக்க பாக். முயற்சித்து வருகிறது. இதற்காக கிரேக் செப்பல், பெரி ரிச்சார்ட், ஜெப் போய்கொட் ஆகியோருடன் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன.


## சுடர் ஒளி
# சார்ஜா கிரிக்கெட் பரிசுப் போட்டி!

ஏப்ரல் 8-20 ஆம் திகதிவரை பாகிஸ்தான், இலங்கை, நியூஸிலாந்து ஆகிய அணிகளுக்கிடையில் சார்ஜாவில் நடைபெறும் முக்கோண கிரிக்கெட் சுற்றுப்போட்டி தொடர்பாக இங்கே கேட்கப்பட்டுள்ள 5 கேள்விகளுக்கும் சரியான பதில்களை எழுதி அனுப்பிப் பரிசுகளை வெல்லுங்கள்!

- முதலாம் பரிசு:- ரூபா 5,000/-
- இரண்டாம் பரிசு:- ரூபா 3,000/-
- மூன்றாம் பரிசு:- ரூபா 2,000/-
- மூன்று ஆறுதல் பரிசுகள்:- ஒவ்வொன்றும் ரூபா 1,000/-

**கேள்விகள்:**

1. இச்சுற்றுப் போட்டியில் சாம்பியனாகும் அணி எது?
2. தொடரின் சிறப்பாட்டக்காரராகத் தெரிவாகும் வீரர் யார்?
3. தொடரில் அதிக ஓட்டங்களைப் பெறும் வீரர் யார்?
4. தொடரில் அதிக விக்கட்டுகளைப் பெறும் வீரர் யார்?
5. இன்னிங்ஸ் ஒன்றில் வேகமான அரைச்சதம் பெறும் வீரர் யார்?

**போட்டி விதிகள்:**

* ஆகக் கூடுதலான சரியான பதில்களை அனுப்புபவருக்கு முதலாம் பரிசும் இரண்டாவது ஆகக் கூடுதலான சரியான பதில்களை அனுப்புபவருக்கு இரண்டாம் பரிசும் வழங்கப்படும். இவ்வாறே மூன்றாம், ஆறுதல் பரிசுக்குரியோரும் தேர்ந்தெடுக்கப்படுவர்.
* சரியான பதில்களைக் கொண்ட கூப்பன் ஒன்றிற்கு மேல் கிடைத்தால் பரிசுக்குரியோர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
* பதில்களை தபால் அட்டையில் எழுதி அடியில் உள்ள முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
* 17.04.2001 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கூப்பன்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
* ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பி பரிசு பெறும் சந்தர்ப்பத்தை அதிகரித்துக் கொள்ளலாம். எனினும் ஒருவருக்கு ஒரு பரிசு மாத்திரமே வழங்கப்படும்.
* சுடர் ஒளி பத்திரிகையில் பணிபுரிவோர் இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
* நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

**பரிசுகளுக்கு அனுசரணை:**

*முதலாவது பரிசு:*
ஹரி மார்க்கட்டிங் என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
5, டாம் வீதி, கொழும்பு -12.

*இரண்டாம், மூன்றாம் பரிசுகள்:*
வேர்ல்ட் பஸார் டெக்ஸ்டைல் சென்டர்
4, ரோஹினி வீதி, கொழும்பு -06.

*ஆறுதல் பரிசுகள்:*
லாண்ட்மார்க் என்டர்பிரைசஸ்
36/2, பிரெட்ரிகா ரோட்,
கொழும்பு -06.

சார்ஜா கிரிக்கெட் பரிசுப் போட்டி
சுடர் ஒளி
36/2, பிரெட்ரிகா ரோட்
கொழும்பு -06

# மட்டக்களப்பு அபிவிருத்தி: படையினர் தடையாவதா?

## உலக வங்கியின் நியாப் திட்டம் கைநழுவிப் போகும் ஆபத்து

உலகவங்கியின் உதவியுடன் வடக்கு– கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் ''நியாப்'' (வடக்கு–கிழக்கு நீர்பாசனத் திட்டம்)திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் கைநழுவிப்போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பதினைந்து மாதங்களாக அமுல்படுத்தப்பட்டுவரும் இந்தத் திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் கூடிய பலனை அளிக்கவில்லை என்று நியாப் திட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுக்கபபாடற்ற பிரதேசங் களான வவுணதீவு, பட்டிப்பளை, ஏறாவூர் பற்று, கோறளைப்பற்று, வாகரை ஆகிய பிரதேசங்களிலேயே இத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

உலகவங்கியின் இலங்கைக்கான பணிப் பாளர்திருமதி மரியானாரொறோடோவா, திட்ட செயற்பாட்டாளர்நிகால் பெர்னான்டோ ஆகியோர்கொண்டகுழுவினர்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசமான கறடியானாறுப்பகுதிக்குசமீபத்தில் சென்றனர்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் சி. மோனகுருசாமியும் மற்றும் அதிகாரிகளும் இவர்களுடன் சென்றனர்.

சர்வதேச செஞ்சிலுவைக்குழுவின் வழித்துணையுடன் சென்ற இந்தக் குழுவினர் அங்கு மேற்கொள்ளப்படும் விவசாயத்திட்டங்களைப் பார்வையிட்டதுடன் பொது மக்களிடம் கருத்துக்களையும் கேட்டறிந்தனர்.

மறுநாள் மேற்படி குழுவினர் படுவான் கரைக்குச் சென்றனர். அங்கு விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

இதன் பின்னர் மட்டக்களப்புக் கச்சேரியில் நியாப் திட்டம் தொடர்பான மாநாடு ஒன்று நடைப்பெற்றது. இந்த மாநாட்டில் ''நியாப்'' திட்டத்தின் இலக்கு முகாமையாளர் நிஹால் பெர்னாண்டோவும் கலந்து கொண்டார். இந்த மாநாட்டிலேயே அவர் இந்தத் திட்டம் குறித்து அதிருப்தி தெரிவித்தார்.

''பதினைந்து மாதங்களாக நடைமுறைப் படுத்தப்படும் இத்திட்டத்தில் எமக்கு பூரண நம்பிக்கை இல்லை. வேலைகள் மந்தகதியில் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டம் தொடர்பாக பொது மக்களுக்கு பூரண விளக்கம் அளிக்கப்படவில்லை''

இப்படி நிஹால் பெர்ணாண்டோ கூறினார்.

உள்ளூர் அதிகாரிகளையும் அவர் குறைபட்டுக் கொண்டார்.

இதேவேளை 2001 ஆம் ஆண்டுக்குரிய ''நியாப்'' திட்ட முழு ஒதுக்கீடு 40 கோடி ரூபா ஆகும். இவற்றில் 6 கோடி ரூபா மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

சரியானதிட்டமுன்வரைவு களை உலகவங்கிப்பொறுப் பதிகாரிகளிடம்சமர்ப்பிக்க வேண்டும். அவற்றை உலகவங்கி உயர்அதிகாரிகள்பரிசீலனைசெய்யும்போது திருப்திஏற்படா விட்டால்நிதிஒதுக்கீடுரத்துச்செய்யப் படலாம். இப்படி அதிகாரிகள்சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதே சமயம் இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு இராணுவத்தினரின் அனுமதியும் அங்கீகாரமும் முற்றுமுழுதாகத் தேவை என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான அனுமதிகள் இராணுவத்தால் மறுக்கப்படும் பட்சத்தில் ''நியாப்'' பயனளிக் காத் திட்டமாக மாறிவிடும்.

குறிப்பாககனரக வாகனங்கள், அணைக்கட்டுகளுக்குத் தேவையான சிமெந்து மற்றும் கட்டட உபகரணப் பொருட்கள் ஆகியவற்றைத் தங்குதடையின்றிக் கொண்டு செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்க வேண்டும். இவற்றில் தடங்கல்கள் ஏற்பட்டாலும் திட்டம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரை விவசாயம் மிகவும் பின்தள்ளப்பட்ட நிலையில் உள்ளது.

சிறுநீர்பாசனத்திட்டத்தின் கீழ் செய்கை பண்ணக் கூடிய காணிகள் இருந்தும் குளங்கள் புனரமைக்கப்படாமையினால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்கள் செய்கை பண்ணப்படாத நிலையில் தரிசு நிலமாகக் கிடக்கின்றன.

இதே போன்று நீர்வடிகால் அமைப்பு வசதிகள் இல்லாத காரணத்தினால் ஆயிரக்கணக்கான நெற்காணிகள் வெள்ளத்தில் மூழ்கிவிடுகின்றன.

நியாப் திட்டமும் கைநழுவிப் போனால் விவசாயிகளுக்கே பெரும் பாதிப்பு.

—சத்துருக்கன்

## மன்னார் சம்பவம் குறித்து கிழக்கு மாணவர் குமுறல்

மன்னார் உப்புக் குளத்திலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த இரு பெண்கள் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்து கிழக்குப்பல்கலைக் கழக சமூகம் கடந்த 30ஆம் திகதி மறியல் போராட்டம் நடத்தியது.

உலக நாடக தின இறுதி நாளான அன்றைய தினம், தின விழா முடிவில், இந்த மறியல் எதிர்ப்புப் போராட்டம் இடம் பெற்றது.

பிற்பகல் 1.30 மணியளவில் வந்தாறுமூலை பல்கலைக் கழக நுழைவாயிலில் கூடிய மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள், கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் உட்பட நாடகதின விழாவினைக் கண்டுகளிக்க வந்திருந்த பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் ஒரு மணி நேரம் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற பாலுறவு வல்லுறவுச் சம்பவங்களையும் தற்போது மன்னாரில் நிகழ்ந்த பாலுறவு வல்லுறவுச் சம்பவத்தையும் கண்டித்து எழுதப்பட்ட பதாதைகளை இவர்கள் வைத்திருந்தனர்.

''ஸ்ரீ லங்கா இனவாத பயங்கரவாத அரசினால் எமது இனம் திட்டமிடப்பட்டு அழிக்கப்படுகிறது!''

''உப்புக்குள விடுதியில் இடம் பெற்றவை எங்கள் வீட்டிலும் இடம் பெறலாம்!''

''ஸ்ரீ லங்கா அரசினால் தொடரும் மனித உரிமை மீறல்களையும், பாலியல் வதைகளையும் சர்வதேச சமூகத்துக்கு அம்பலமாக்குவோம்!''

''படையினரின் காமவெறிக்கு தமிழ்ப்பெண்களா பலி!''

மேற்கண்ட சுலோகங்கள் பதாதைகளில் காணப்பட்டன. இந்த சுலோகங்கள் அடங்கிய சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

அரச சார்பற்ற நிறுவனங்கள், பெண்கள் அமைப்புக்கள் என்பன மன்னார் பாலியல் வல்லுறவுச் சம்பவம் குறித்து மௌனம் சாதிப்பது குறித்தும் கண்டனக் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

மன்னார்ச் சம்பவத்தைக் கண்டித்து கிழக்குப் பல்கலைக் கழகம் துண்டுப்பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பெண்கள் கைது செய்யப்படும்போதும் விசாரணை செய்யப்படும்போதும் பெண்பொலிஸார் உடன் இருக்க வேண்டும். ஆனால் இந்த நடைமுறையைப் பின்பற்ற பொலிஸார் முயற்சிக்கவில்லை.

அரசாங்கத்தால் தொடுக்கப்பட்டுள்ள யுத்தம் தமிழ் பேசும் மக்களின் உயிர் உடைமைகள் மீது மாத்திரமன்றி சுயமரியாதை, தன்மானம் என்பவற்றின் மீதும் தொடுக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் உளவியல் ரீதியாக அச்சுறுத்தி தமிழ் பேசும் மக்களை ''சிந்தனைக் கோமா''வில் வைத்திருப்பதில் பேரினவாத அரசு வெற்றி கண்டுள்ளது.

இதனைக் கண்டிப்பதும் சர்வதேச சமூகத்துக்கு உணர்த்துவதும் எமது கடமை. இக்கடமையில் இருந்து தவறினால், தங்கவேலாயுதபுரம், வீரமுனை, பாண்டிருப்பு, கொக்கட்டிச் சோலை, சத்துருக்கொண்டான், கிழக்குப்பல்கலைக்கழகம் போன்ற பாரிய களங்களில் மீண்டும் கதியற்றவர்களாகி, மக்கள் மடிவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

அத்துடன் கோணேஸ்வரிகள், கமாலீட்டாக்கள் போன்றவர்கள் பேரினவாத விலங்குகளால் குதறப்படுவதும் தவிர்க்கமுடியாததாகிவிடும்.


இப்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

—சன்

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

சக்தி TV

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் (நேரடி ஒளிபரப்பு) குட்டிச் சுட்டி |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | இசைக்கோலம் |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்னி | சக்தி வீக்கென்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | வசந்த நிலா |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | ஸ்டார் ஷோ |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகனே | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | சாவித்ரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்... | ஜன்னல் |



## பச்சைப்பசேல் என்ற காட்சிக்குப் பஞ்சம்!

மரம் செடி கொடிகள் சடைத்து வளர்ந்து பச்சைப்பசேல் என்ற காட்சிகள் தென்படும் பகுதிகளில் வாழ்வதற்கு மக்கள் விரும்புவர். ஆனால் இந்தியாவிலுள்ள ராஜஸ்தான் மாநிலம் பாலைவனமாக மாறிவருகிறது. இங்கே பச்சைப்பசேல் என்ற காட்சிக்கே பஞ்சம்தான். நீண்டதூரம் நடந்து குடிதண்ணீர் அள்ளி வருவதற்கு ஒரு பெண் செல்லும் காட்சி இது. கள்ளிச் செடிகளைவிட வேறு செடிகள் இங்கே இல்லை.



## வாய் இருந்தால் போதும் வயிற்றுப் பிரச்சினை தீரும்

மனிதனின் உடல் உறுப்புகளில் வாய் முக்கியமானது. ஆயினும் சிலர் வாயின் துணையுடன் உணவை மட்டும் அருந்திவிட்டு ஓய்ந்து போய் இருந்துவிடுகிறார்கள். ரஷ்யாவைச் சேர்ந்த யேகேதரீனா என்ற பெண் வாயின் பயன்பாட்டை உரிய முறையில் பயன்படுத்தித் தனது வயிற்றுப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டியிருக்கிறது. இவருடைய கழுத்துக்குக் கீழ் உடல் செயற்படுவதில்லை. தனது பல்லிடுக்கில் பிரஸ்ஸைப் பிடித்துக்கொண்டு ஓவியம் வரைகிறார் இந்தப் பெண். அந்த ஓவியங்களை விற்றுப் பிழைப்பு நடத்துகிறார் யேகேதரீனா.



## கண்ணாடிப் போத்தலுக்குள் கப்பல் ஒன்று வடிவமைப்பு

ஒரு சின்னஞ் சிறிய போத்தலுக்குள் அழகிய பாய் மரக் கப்பல் ஒன்று உருவாக்கப் பட்டிருக்கிறது. கப்பலின் பல்வேறு பாகங்களைத் தனித் தனியாகப் போத்த லுக்குள் செலுத்திப் பின்னர் அவற்றைப் போத் தல் வாயினூடாகப் பொருத்தும் மிக நுண்ணிய வித்தை இதுவாகும். டென்மார்க் நகரிலுள்ள கப்பல் கட்டும் தொழிற்சாலை ஒன்றில் இந்தப் போத்தல் கப்பல் காட்சிக்கு வைக்கப் பட்டிருக்கிறது.

## அணுசக்தித் துகள்கள் பரவினால் ஆபத்து!

வேறு கிரகவாசிகள் பூமிக்கு வந்துவிட்டார்களா? இல்லை. யுத்த தாங்கி ஒன்றை நிபுணர்கள் பரீட்சிக்கும் காட்சி இது.

அணு சக்தியைக் கொண்டு எவ்வளவோ சாதனைகளைச் செய்யக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் அணு சக்திக்குப் பயன்படும் யுரேனியம் சுற்றுப்புறச் சூழலை அசுத்தமாக்கிவிட்டால் ஆபத்துத்தான். யுகோஸ்லாவிய தாங்கி ஒன்றில் அணு சக்தித் துகள்கள் பரவியிருக்கின்றனவா என்பதை இத்தாலி நாட்டு அணு சக்தி நிபுணர்கள் பரீட்சித்துப் பார்க்கிறார்கள்.



## ஆழ்கடலின் கீழே கண் குளிரும் காட்சி

ஆழ்கடலின் கீழ் ஓர் உலகம் இருக்கிறது என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு ஆகும். உலக மக்களுக்குத் தேவையான சத்து நிறைந்த உணவுகள் ஆழ்கடலின் கீழ் இருக்கின்றன. கடலுக்குள் மூழ்கி சுழியோடிச் சென்று சிலபொழுதுகள் தங்கியிருந்தால் போதும். ஆழ்கடலின் வளங்களை நாம் கண்டறிந்துவிடலாம். ஸ்கொட்லாந்து நாட்டின் வடக்கு குயின்ஸ்பெரி கடல் படுகையில் இருக்கும் ஆழ்கடல் வளங்களைக் கண்டு ரசிக்க இவ்வாறு வசதிகள் செய்து தந்திருக்கிறார்கள்.





## ஒளிந்திருக்கும் முகம் எது?

ஏப்ரல்—1, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை பானுப்பிரியாவினுடையது சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு:—

1. எ. எம். நஸீர், காத்தான் குடி
2. கே. அருள்மணி, வவுனியா
3. எப். எல். சுஹைர், சிலாபம்

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (08.04.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகை யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? முரட்டுத்தனமாக நடித்து முன்னுக்கு வந்தவர். பின்னர் பேபி நடிகையைக் காதலித்து மணவையாக்கியவர்

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதிப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு — 06.



# பிரச்சினைகள் இருந்தால் குடும்ப வாழ்வு இனிக்காது



இனிமையான இல்லறம் ஒருவருடன், ஒருவர் மனம் விட்டுப் பேசுவதில்தான் தங்கி இருக்கின்றது.

இன்று நாம் காணும் பல தம்பதிகள் ஒருவருடன் ஒருவர் பேசுவதோ, சிரிப்பதோ குறைவு. சந்தோஷரேகைகளை அவர் களிடம் காணவே முடிவதில்லை. வெளி இடங்களிலேயே அவர்கள் இப்படி என்றால் வீட்டில் எப்படி இருப்பார்கள் என்பதை ஊகித்துவிடலாம்.

திருமணமான புதிதில், ஒருவரையொருவர் சரியாகப் புரிந்து கொள்ள முன்பு, பேசுவதற்கு ஒருவித தயக்கம் இருக்கும். ஆனால் இந்த நிலை தொடர்ந்தால் நிச்சயமாகக் குடும்ப வாழ்வு இனிக்காது.

கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் அவசரத்தில் பேசுவதற்கு என்ன இருக்கின்றது? பேசி என்ன நடக்கப் போகின்றது? என்று நினைத்து விடாதீர்கள். கணவனிடம், மனைவியும் மனைவியிடம் கணவனும் பேசப் பல விடயங்கள் இருக்கின்றன.

வேலைத் தளத்தில் நடந்த விஷயங்களை மாலையில் இருவரும் பேசுங்கள். இதனால் இருவருக்கும் உள்ள மனப்பாரங்கள் குறைந்துவிடுகின்றன. சந்தோஷமான விஷயத்தை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்ளும் போது அது இரட்டிப்புச் சந்தோஷத்தைத் தருகிறது. துன்பமான செய்தியைப் பகிர்ந்து கொள்ளும் போது சுமை பாதியாகி விடுகின்றது. இதனால் மாலைப் பொழுது நிம்மதியாகக் கழிந்து விடுகின்றது. தினமும் இப்படி யான மாலைப் பொழுதை ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கி விடுவீர்கள்.

பேசுகிறோம் என்று அலட்ட ஆரம்பித்து விடாதீர்கள். பேசுவதிலும் ஓர் ஒழுங்கு முறையைப் பின்பற்றுங்கள். பேசும் போது வார்த்தைகளை அவதானமாகப் பிரயோகியுங்கள். ஏனெனில் தவறான வார்த்தைகள் மாறாத வடுவை ஏற்படுத்திவிடும்.

கணவன், மனைவி இருவரும் உங்கள் துணையின் அன்பையும், திறமையையும், பொறுமையையும், குணத்தையும் மனம் திறந்து வெளிப்படையாகப் பாராட்டுங்கள். அப்போதுதான் குறைகளைச் சுட்டிக் காட்டும் போது, பாதிப்புகள் ஏற்படாது.

மனம் விட்டுப் பேசுவதன் மூலம் வாழ்க்கையில் ஏற்படு கின்ற பல பிரச்சினைகளை இலகுவில் தீர்க்க முடியும், மேலும் உங்கள் வளர்ச்சி, எதிர் காலத்திட்டம் ஆகியவற்றைச் செயற்படுத்தத் தேவையான நல்ல திட்டங்கள் உருவாகும்.

சிலர் பொய் பேசுவார்கள். இது ஆரம்பத்தில் சந்தோஷத்தைத் தந்தாலும் எதிர் காலத்தில் குடும்பத்தில் பாரிய பிரச்சினைகளையே உருவாக்கி விடும்.

எனவே அற்ப சந்தோஷங் களுக்காகப் பொய் பேசாமல், உண்மை பேசி ஒருவருக்கு ஒருவர் உண்மையானவர்களாக நடந்து கொள்ளுங்கள்.

கோபதாபங்களை நாசூக்காக வெளிப் படுத்தி விடுங்கள். இதனால் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ள முடியும்.

எனவே மனம் விட்டுப் பேசுங்கள், மகிழ்ச்சியான இல்லறத்தை அமைத்துக் கொள்ளுங்கள்!

பெண்



# உங்களுக்குத் தெரியுமா?

* ஆபிரிக்காவில் சஹாரா பாலைவனத்தை அடுத்துள்ள பிரதேசத்தில் 'ரெகுபாட்' என்றழைக்கப்படும் இனத்தவரில் பெண்களின் கையில் தான் எல்லா அதிகாரங்களும் உள்ளன.

  பெண்களுக்கு அடங்கியே ஆண்கள் நடந்து கொள்கின்றனர். ஆண்கள் முக்காடிட்டு தங்கள் முகத்தை மறைத்துக் கொள்கின்றனர். பெண்களின் முன் மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்கின்றனர்.

  பெண்களின் முன்னால் ஆண்கள் சாப்பிடுவதோ, புகைபிடிப்பதோ இல்லை. பெண்கள் பேசும் போது ஆண்கள் குறுக்கே பேசமாட்டார்கள். வாய் பொத்தி நின்று மௌனமாகக் கேட்டுக் கொண்டிருப்பார்களாம்.'

* உடன்கட்டை ஏறி உயிர் துறக்கும் விதவைகளின் உடலில் எத்தனை மயிர்கால்கள் உண்டோ அத்தனை ஆண்டுகள் அவள் சொர்க்கத்தில் வாழ்வாள் என்று ராஜஸ்தானியர்கள் நம்புகின்றனர்.

* 'ஷீயா கௌரட்' என்ற அமெரிக்க வீராங்கனை 100 மீற்றர் ஓட்டப்பந்தயத் தூரத்தை 13.97 விநாடிகளில் ஓடி முடித்து உலக சாதனை புரிந்துள்ளார். 9.99 விநாடிகள்தான் இதுவரை உலக சாதனையாக இருந்தது. இது எப்படி உலக சாதனையாயிற்று என்கிறீர்களா?

  இந்த வீராங்கனைக்கு முழங்கால்களுக்குக் கீழ் கால்கள் இல்லை! செயற்கைக் கால்களைப் பொருத்திக் கொண்டு சிட்னியில் நடந்த 'பரா ஒலிம்பிக்கில்' உற்சாகமாக ஓடி வந்து இந்த உலக சாதனையைப் படைத்துள்ளார்.

* ஒவ்வொரு ஆண்டும் பிரசவ கால நோய்கள் காரணமாக ஐந்து லட்சம் பெண்கள் இறக்கிறார்கள். வளர்ந்து வரும் நாடுகளிலேயே இது அதிக அளவில் நிகழ்கின்றது. உலகம் முழுவதும் ஐந்து கோடி கருக்கலைப்புச் சம்பவங்கள் ஒவ்வொரு ஆண்டும் இடம் பெறுகின்றன சட்டவிரோதமாகவும், முறையாக செய்யாததாலும் இவர்களுள் இரண்டு லட்சம் பெண்கள் உயிர் துறக்கிறார்களாம்.

# குழந்தைகளுக்கு உதவும் காப்பகம்

வேலைக்குப் போகும் பெற்றோர்களுக்கு தமது குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள உதவியாக இருப்பது ''குழந்தைகள் காப்பகம்'' ஆகும்.

குழந்தைகளைக் காப்பகத்தில் சேர்க்க எண்ணும் பெற்றோர்கள் பின்வரும் ஆலோசனைகளைக் கருத்திற் கொள்ளுங்கள்.

* குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்கான அத்திபாரம் அதன் முதல் 3 ஆண்டுகளில் போடப்படுவதால் கவனமாக நல்ல காப்பகத்தைத் தெரிவு செய்யுங்கள்.
* காப்பகம் உங்கள் வீட்டுக்கு அல்லது அலுவலகத்திற்கு அண்மையில் அமைவது நன்று.

  ஏனெனில் அப்போதுதான் குழந்தைகளை அடிக்கடி கவனித்துக் கொள்ள முடியும்.
* காப்பகம் சுத்தமாக இருக்கின்றதா எனக் கவனித்துக் கொள்ளுங்கள்.
* காப்பகத்தில் கடமையாற்றுபவர்கள் குழந்தைகளை நன்றாகக் கவனிப்பார்களா என்பதை விசாரித்து அறிந்து கொள்ளுங்கள்.

  குழந்தைகள் பல விடயங்களைக் கிரகித்துக் கொள்ளும் பருவம் இது என்பதால் காப்பகம் என்பது வெறுமனே குழந்தைகளைக் கவனித்துக் கொள்வது மட்டுமல்ல, அவர்களின் எதிர்காலத்துக்கான சிறந்த சூழலாகவும் அமைகின்றது.



# பட்டுப் புடைவைகளை பாதுகாப்போம்!

இன்று நவீனரக ஆடைகள் வந்துவிட்டாலும் பெண்களுக்கு பட்டுப்புடைவைகளில் இருக்கும் மோகம் குறையவில்லை.

அதிக பணம் செலவழித்து வாங்கும் பட்டுப்புடைவைகளை நீண்டகாலம் பேணிப் பாதுகாக்க இதோ சில வழிகள்:-

* பட்டுப் புடைவைகளை அட்டைப் பெட்டிகளில் வைப்பதைத் தவிருங்கள் ஏனெனில் அட்டைப் பெட்டிகளில் பயன்படுத்தப் பட்டிருக்கும் பசை, இரசாயனக் கலவைகளால் ஆனது. அத்துடன் பட்டுப்புடைவைகளின் சரிகைகளிலும் இரசாயனக் கலவை உள்ளது. வெவ்வேறு இரசாயனங்கள் சேரும் போது ஏற்படும் தாக்கம் பட்டுப்புடைவைகளின் சரிகையின் பளபளப்பை மங்கச் செய்துவிடும்.
* பட்டுப்புடைவைகளை எலுமிச்சைச் சாறு கலந்த நீரில் ஊறவைத்து அழுக்குள்ள இடத்தில் சவர்க்காரத் தூளைத் தேய்த்து சுத்தமான நீரில் அலசி எடுக்க வேண்டும்.
* பட்டுப் புடைவைகளை ஒரு போதும் பிழியக்கூடாது.
* புடைவையும், கரையும் வெவ்வேறு நிறமாக இருந்தால், இரண்டு பகுதிகளையும் தனித்தனியாக அலச வேண்டும்.
* புடைவையை உலர்த்தும் போது புடைவையின் கனம் இருபக்கங்களும் சமமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

  புடைவையின் தலைப்பு கனமானதாக இருந்தால் உலர்த்தும்போது சரிகையின் கனம் தாங்காமல் புடைவை சிதைந்துவிடும்.
* பட்டுப்புடைவைகளை அடிக்கடி நீரில் நனைக்கக் கூடாது.
* பட்டுப்புடைவைகளை நிழலில் உலர விடவேண்டும்.
* பட்டுப்புடைவை கட்டியிருக்கும் போது புடைவையின் கரை கதிரைகளில், அல்லது வேறு இடங்களில் சிக்கிக் கொள்ளாமல் கவனிக்க வேண்டும்.
* பட்டுப் புடைவையைக் கட்டிக் கொண்டு வெளியில் போய் வந்ததும், வியர்வை காய கொடியில் விரித்துப் போட வேண்டும்.
* பட்டுப் புடைவைகளை வெளிச்சம் படும் இடங்களில் தொடர்ந்து வைக்கக் கூடாது. அப்படி வைத்தால் அவற்றின் நிறம் மங்கிவிடும்.



# ராசி பலன்

**15.04.2001 முதல் 21.04.2001 வரை**
**பொ.சந்திரன்.**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1**
இராசிநாதன் பாக்கிய ஸ்தானமான ஒன்பதாம் வீட்டில் இருப்பது விசேஷம். மேலும் சூரியனும் புதனும் இராசியில் இருப்பதால் முன்னேற்றம் உண்டு. கையில் காசு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். உற்றார், உறவினர் விசுவாசமாக இருப்பர் என்று சொல்ல முடியாது. அறிவுக்கும் மனதுக்கும் தொடர்பு இருக்கும். மனக் கட்டுப்பாடு இருக்கும். நல்ல எண்ணங்கள் உருவாகும். எதிரிகளால் தொல்லை வர வாய்ப்புண்டு. அவதானம் வேண்டும். குடும்ப சுகம் உண்டு. அமைதி உண்டு. விசுவாசம் இருக்கும். காதலர் வாழ்வு விசுவாசம் கலந்த இன்ப சுகம். தேக ஆரோக்கியம் நன்று. தொழிலில் முன்னேற்றம் உண்டு.

**இடபம் : கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2**
இராசியில் குருவும் சனியும் இருப்பது அவ்வளவு நன்மை இல்லை. ஆனால் இராசிநாதன் இலாப ஸ்தானத்தில் உச்சம் பெற்று இருப்பது நல்ல அம்சம். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம்.
சகோதரர்களுக்கிடையில் மனக்கசப்பு வர வாய்ப்புண்டு. வீடு, வாகனங்களால் செலவு ஏற்படலாம். உற்றார், உறவினர் ஒடும் புளியம் பழமும் போல இருப்பர். மனம் ஒரு சமயம் அறிவின் தொடர்பை விட்டுவிலகி கற்பனை சுகம் காணும். நீங்களே சில சமயம் உங்களுக்கு எதிரியாகக் கூடும். உங்கள் செயலே உங்களுக்குப் பாதகமாக அமையலாம். குடும்ப அமைதி குறையலாம். சில சமயம் மனத்தளவிலாவது விலகி இருக்கலாம். காதலருக்கும் சோதனை வரலாம். தேக சுகம் பாதிக்கலாம். தொழில் துறையில் தடங்கல் இருக்கும்.

**மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**
இராசி நாதன் இலாபத்தானத்தில் சூரியனும் கூடி பலமாக இருப்பது விசேஷம். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். சகோதரச் சிறப்பு இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் விசுவாசமாக இருப்பர். மனம் அறிவு வசப்பட்டு பூரண அமைதியடையும். நல்ல எண்ணங்கள் உருவாகும். எதிரிகளின் தொல்லை இருக்கும். அவதானம் வேண்டும். குடும்ப சுகம் இல்லை. குடும்பத்தில் சண்டை சச்சரவு இருக்கும். சில சமயம் விலகி இருக்கவும் கூடும். காதலர் வாழ்விலும் புயல் வீசலாம். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் விருத்தியுண்டு. பதவி உயர்வு உண்டு.

**கடகம் : புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்**
இராசிக்கு சனி, செவ்வாய் பார்வை கிடைப்பது அவ்வளவு நல்லதல்ல. பணப்பற்றாக் குறையுண்டு. கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் அயலவர் அன்பாய் இருப்பர். மன அமைதி குறையலாம். அறிவின் தொடர்பு அறுந்து போகும். மனம் தீய வழியில் செல்ல முற்படும். எதிரிகளின் பலம் குன்றுவதால் நீங்கள் ஆறுதலாக இருக்கலாம். குடும்ப சுகம் உண்டு. காதலர் விசுவாசமாக இருப்பர். காதல் புனிதமானது என்பதை அனுபவத்தில் உணர்வர். தேக ஆரோக்கியம் நன்று. பிரயாணம் அமையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு.

**சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1.**
இராசிநாதன் பாக்கிய ஸ்தானத்தில் புதனுடன் கூடி இருப்பது பல வழிகளிலும் நன்மை பயக்கும். கையில் காசு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரச் சிறப்பு இருக்கும். வீடு வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினருக்குள் பிணக்கு உருவாக வாய்ப்பு உள்ளது. மனம் அறிவின் தொடர்பை விடுத்து தன் இயல்பிலான கற்பனைசுகம் காணும். எதிரிகளின் செயற்பாட்டில் மாற்றம் வர வாய்ப்புள்ளது. நட்பாகலாம். குடும்ப அமைதியுண்டு. சுகம் உண்டு. விசுவாசம் இருக்கும். காதலர் வாழ்வில் வசந்தம் உண்டு. தேக ஆரோக்கியம் நன்று. பிரயாணம் அமையலாம். தொழில் விருத்தி உண்டு. புதுத் தொழில் அமைய வாய்ப்புண்டு.

**கன்னி : உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2**
இராசிக்கு சுக்கிரனின் பார்வையும் குருவின் பார்வையும் கிடைக்கும். பெரும்பாலும் நன்மையே நடக்கும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் விசுவாசமாக இருப்பர். மனம் ஒரு கால் அறிவின் பால் நடக்கும். மறுகால் தன் சுய பலத்தில் செயற்படும். இரு நிலையில் செயற்படுவதால் அமைதி குன்றலாம். எதிரி பலமாக இருப்பதால் நாம் அவதானமாக இருக்க வேண்டும். தேக சுகம் நன்று. குடும்ப சுகம் உண்டு. விசுவாசம் இருக்கும். இளமைத் துடிப்பு இருக்கும். காதல் வாழ்வு களை கட்டும். இதய விசுவாசம் இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் போட்டி நிலவும். சமாளித்து வெற்றி பெறுவீர்கள்.

**துலாம்: சித்திரை 3,4, சுவாதி,விசாகம் 1,2,3**
இராசிநாதன் பலம் பெறுவதும் சூரியன், புதன் ஆகிய கிரகங்களின் பார்வை இராசிக்கு கிடைப்பதால் யோகம் உண்டு. கையில் பணம் இருக்கும் கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் செலவை உண்டுபண்ணும். உற்றார், உறவினர் விலகி இருக்க முயலுவர். மனம் அறிவின் சொல் கேளாமல் தன்னிச்சையாக செயற்பட்டு மன அமைதி இழக்கும். எதிரியின் பலம் குன்றுவதால் நீங்கள் அமைதியாக இருக்கலாம். குடும்ப அமைதி உண்டு. குடும்ப சுகம் உண்டு. காதலர் கருத்தொருமித்து கண்ணியமாக நடந்து கொள்வர். தேக சுகம் உண்டு. தொழில் போட்டி இருப்பினும் முன்னேற்றம் உண்டு.

**விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை**
இராசிநாதன் பணபர ஸ்தானத்தில் இருப்பது நல்லது. குருவினதும் சனியினதும் பார்வை இராசிக்குக் கிடைப்பதும் நன்மையே. பணப் பற்றாக்குறை இருக்கும். கல்வியில் ஆர்வம் குன்றலாம். சகோதர உதவி இருக்கும். வீடு வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் அன்பாய் இருப்பர். மனம் அறிவின் பால் செயற்படும். மன அமைதி இருக்கும். நல்ல எண்ணங்கள் தோன்றும். எதிரி மறைமுகமாக நாச வேலை செய்யலாம். விழிப்புடன் இருக்கவும். குடும்ப சுகம் உண்டு. மன்மத நாட்டம் இருக்கும். காதலர் கவலையற்று களி நடனம் புரிவர். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் சில பின்னடைவுகள் வரலாம். சமாளிப்பீர்கள்.

**தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1.**
இராசிநாதன் சனியுடன் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆனால் செவ்வாய் இராசியில் இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி குறையலாம். வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் அன்பாய் இருப்பர். மனம் அறிவின் தொடர்பை விடாது பின்பற்றும். மன அமைதி இருக்கும். நல்ல சிந்தனை உருவாகும் . எதிரி பலமாக இருப்பதால் அவதானம் வேண்டும். குடும்ப உறவில் திருப்தி உண்டு. எச்சரிக்கையுடன் கூடிய அமைதி இருக்கும். காதலர் வாழ்வு திருப்திகரமாக இருக்கும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறை விருத்தியடையும்.

**மகரம் : உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2**
இராசிநாதன் குருவோடு பூர்வபுண்ணியஸ் தானமான ஐந்தாம் வீட்டில் இருப்பது யோகமான காலம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு,வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் அன்பாய் இருப்பர். மன அமைதி இருக்கும். ஒருகால் உலக இன்பத்திலும் மறுகால் ஆன்ம இன்பத்திலும் மன செயற்பாடு இருக்கும். எதிரி பலமாக இல்லை. நீங்கள் ஆறுதலாக இருக்கலாம். குடும்ப அமைதி குலையலாம். வாக்குவாதம் இருக்கும் . காதலர் வாழ்விலும் நிம்மதி இல்லை. தேக சுகம் ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. புதிய தொழில் தொடங்கலாம். பதவி உயர்வு உண்டு. குறுந்தூரப் பிரயாண வாய்ப்புண்டு.

**கும்பம் : அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3**
இராசிநாதன் சுக ஸ்தானத்தில் குருவோடு இருப்பது நலம். கையில் பணம் இருக்கும் கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவியுண்டு. வீடு ,வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் அன்பாய் இருப்பர். மனம் அறிவின்பால் யதார்த்த நிலையில் செயற்பட்டாலும் சிலசமயம் மனமயக்கம் இருக்கும். எதிரியின் பலம் குறைவதால் ஆபத்தில்லை. குடும்ப அமைதியுண்டு. சுகம் உண்டு. நிம்மதியுண்டு. காதலர்கள் இதய விசுவாசத்தோடு செயற்படுவர். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் போட்டி, பொறாமை இருக்கும். ஆனால் தொழிலில் முன்னேற்றம் அடைவீர்கள். குறுகிய பிரயாணம் அமையும்.


**மீனம் : பூரட்டாதி4, உத்தரட்டாதி, ரேவதி**
இராசிநாதன், வீரிய ஸ்தானத்தில் சனியோடு இருப்பது நல்லதல்ல. ஆனால் இராசியில் சுக்கிரன் பூரணபலத்தோடு இருப்பது நல்லது. கல்வியில் ஆர்வம் இருக்கும். கையில் பணம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் விசுவாசமாக இருப்பர். மன அமைதி குன்றலாம். கற்பனையில் சுகம் காணும் . நல்ல சிந்தனை உருவாக வாய்ப்பில்லை. எதிரி பலமாக இருப்பதால் அவதானம் வேண்டும். குடும்ப சுகம் உண்டு. அமைதியுண்டு. காதலர் வாழ்வு அன்பு மயம். விசுவாசம் இருக்கும். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் சில பின்னடைவுகள் ஏற்பட்டாலும் முன்னேறும் வாய்ப்புண்டு.

# வெற்றுத் தகரங்களில் இருந்து பீனிக்ஸ் சிலை உருவாக்கம்

எகிப்து நாட்டின் பண்டைய பெருமையை விளக்குவதற்கு பிரமிட்டுகள் இருக்கின்றன. அந்தப் பிரமிட்டுகளை விடத் தொன்மை வாய்ந்தது பிரமாண்டமான பீனிக்ஸ் உருவச் சிலை ஆகும்.

அமெரிக்காவில் பீனிக்ஸ் சிலையின் மாதிரி உருவத்தை வெற்று ரின்களை ஒட்டி உருவாக்கியிருக்கிறார்கள். ஏழைகளுக்கு உணவளிப்பதற்காக நிதி திரட்டும் விதத்தில் இந்தக் கலைப்படைப்பை உருவாக்கியிருக்கிறார்கள்.

உணவுகள் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வந்த ரின்கள் பயன்படுத்தப்பட்ட பின்னர் குப்பைகளில் வீசப்பட்டன. அவ்விதம் குப்பையில் கிடந்த வெற்று ரின்கள் கலை வடிவம் பெற்றுள்ளன.



# இந்திய அழகிகளுக்கு சர்வதேச பிரபல்யம்

இந்திய அழகிகள் இப்போது சர்வதேச அரங்கில் முத்திரை பதித்துள்ளனர். பல சர்வதேச அழகிப் போட்டிகளில் வெற்றி பெறுகின்றனர். அது மட்டுமல்ல. சர்வதேச அளவில் புகழ் பெற்றுள்ள பிரபலமான ஆண்கள் பலர் இந்திய அழகிகள் வசம் தங்கள் மனதைப் பறிகொடுக்கின்றனர்.

இந்திய அழகிகள் பெரும் பாலும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் அழகிகளை விட நிறத்தில் வேறுபட்டிருப்பார்கள். இவர்களுக்கு அதீதமான வெள்ளைத் தோல் இல்லை. இதைக் காரணமாக வைத்துப் பெரும்பாலும் இந்திய அழகிகளை 'டஸ்கி பியூட்டிஸ்' (கருநிற அழகிகள்) என்றே வெளிநாட்டினர் குறிப்பிடுவார்கள்.

இப்போது இந்திய அழகிகளைப் போன்று கறுப்பும் வெள்ளையும் கலந்த ஒருவிதமான கலவை நிறம் வேண்டும் என்று பெரும்பாலான வெள்ளையர்கள் நீண்ட நேரம் சூரிய ஒளியில் தங்கள் உடலைக் காய வைக்கின்றனர். தோல் நிறத்தை மங்கச் செய்கின்றனர்.

அந்த அளவிற்கு இந்திய அழகிகளின் சொக்லேட் நிறம் சர்வதேச அளவில் மிகவும் கவர்ச்சிகரமானதாக கருதப்படுகிறது. இந்திய அழகிகளால் கவரப்பட்டு தங்களது மனைவிகளை விவாகரத்து செய்துள்ளனர் இரண்டு பிரபல பிரமுகர்கள்.

டென்னிஸ் வீரர் போரிஸ் பெக்கர், எழுத்தாளர் சல்மான் ருஸ்டி ஆகியோர்தான் இந்த இருவரும்.

மிஸ் யுனிவர்ஸ் பட்டம் பெற்ற அழகி லாரா தத்தாவிடம் மனதைப் பறிகொடுத்துள்ளார் அமெரிக்காவின் பிரபல பேஸ்பால் ஆட்டக்காரர் ஒருவர்.

சல்மான் ருஸ்டி சாத்தானின் கவிதைகள் என்ற புத்தகம் எழுதியதற்காக இஸ்லாமிய தீவிர வாதிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்.

பிரிட்டிஷ் அரசு இவருக்குப் பாதுகாப்பு வழங்கி வருகிறது.

இந்நிலையில் அமெரிக்காவில் வாழும் தமிழ்ப்பெண் பத்மலட்சுமி மீது இவருக்கு காதல் ஏற்பட்டுள்ளது.


அதனால் உயிரையும் துச்சமாக மதித்து அடிக்கடி அமெரிக்காவுக்குச் சென்று விடுகிறார் ருஸ்டி.

போரிஸ் பெக்கர், பார்பரா என்ற அழகியைக் காதல் திருமணம் செய்தார். இவர்களுக்கு இரண்டு குழந்தைகளும் உள்ளனர்.

இந்நிலையில் போரிஸ் பெக்கர் சபாரினா செட்லூர் என்ற இந்திய பொப் பாடகி வசம் மனதைப் பறி கொடுத்தார். இதனால் பார்பராவும் பெக்கரும் பிரிந்தனர். சாபரினாவின் தந்தை இந்தியாவிலிருந்து ஜெர்மனி சென்று குடியேறியவர்.

அங்கேயே வளர்ந்த சாபரினா பொப் பாடகி ஆனார். ஜெர்மனியின் 'ஆசையைத் தூண்டும் அழகிகள்' வரிசையில் சாபரினா இடம்பெற்றுள்ளார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்





ரம்பொடை ஸ்ரீ பக்த அனுமன் ஆலய மகா கும்பாபிஷேகம், பல்லாயிரக்கணக்கான அடியார்களின் பக்திப் பிரவாகத்தின் மத்தியில் சிறப்பாக நடந்தது. மூலஸ்தான மூர்த்திக்கு அபிஷேகம் செய்யப்படுவதையும், கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட அடியார்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியின் கனிஷ்ட பிரிவு மாணவர்களின் இல்ல விளையாட்டுப்போட்டி கடந்த 7ஆம் திகதி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. போட்டிகளில் ஓர் அங்கமாக விநோத உடைப்போட்டியும் இடம்பெற்றது.




## குமார் பொன்னம்பலம் கூட்டமும் புளொட் தலைவர் சித்தார்த்தனும்

கொழும்பில் நடைபெற்ற மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவு தினக் கூட்டம் சம்பந்தமாகக் கடந்த முதலாம் திகதி சுடர் ஒளி அரசியல் அம்பலம் பகுதியில் குறிப்பிடப்பட்டு இருந்தது அல்லவா?

அதுபற்றி ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) தலைவர் சித்தார்த்தன் சுடர் ஒளிக்கு கடிதம் அனுப்பியிருக்கிறார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நினைவு தினக் கூட்டத்திற்கு பத்திரிகையில் குறிப்பிட்டது போல் எந்த அழைப்பிதழும் எங்கள் கட்சிக்கு அனுப்பப்படவில்லை.

ஆனால் பொது இடங்களில் நடைபெறும் தமிழ்க் கட்சிகளின் மறைந்த தலைவர்களுடைய நினைவு தினக் கூட்டங்களில் எமது கட்சியின் சார்பில் முக்கிய உறுப்பினர்கள் பங்குபற்றுவது வழக்கம்.

அந்த வகையில் குமார் பொன்னம்பலத்தின் நினைவு தினக் கூட்டத்திலும் எமது மத்திய குழு உறுப்பினர் ஒருவர் உட்பட மூவர் கலந்து கொண்டிருந்தனர் என்பதைத் தங்களுக்கு அறியத் தருகிறோம்.

வழக்கமாகவே தமிழ்க் கட்சிகள் சேர்ந்து நடத்தும் ஆலோசனைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்கும் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் அந்தச் சந்தர்ப்பத்தில் தமக்கு வாகன வசதிகள் இல்லாவிட்டால் ஏனைய கட்சிகளின் வாகனங்களைப் பயன்படுத்துவது வழக்கம்.

கடந்த காலங்களில் மறைந்த தலைவர் குமார் பொன்னம்பலம் கூட மாற்றுக்கட்சி வாகனங்களில் பயணம் செய்துவந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு கட்சியின் வாகனத்தில் மற்றொரு கட்சித் தலைவர் செல்வது ஒன்றும் தவறான அல்லது இரகசியமான செயல் அல்ல என நாம் கருதுகின்றோம்.

குமார் பொன்னம்பலம் ஏனைய கட்சிகளுடன் அரசியல் முரண்பாடுகளைக் கொண்டிருந்தாலும் ஒரு போதும் பகை முரண்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. அந்த வகையில் மாற்றுக் கட்சிகளை அல்லது இயக்கங்களை அரசியல் ரீதியாக விமர்சனம் செய்திருந்த போதிலும் எல்லாக் கட்சித் தலைவர்களுடனும் அவர் நல்லுறவைப் பேணிவந்தார் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அக்கறை கொண்டுள்ள சுடர் ஒளி வாரமலர் தமிழ்க் கட்சிகளிடையே, தமிழ் பேசும் மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் மலராக மலரவேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இப்படிச் சித்தார்த்தன் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

## தமிழ்க் காங்கிரஸ் குமரகுருபரன் கடிதம்

அரசியல் அம்பலம் பகுதிக் குறிப்புகள் சம்பந்தமாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமரகுருபரனும் கடிதம் எழுதியிருக்கிறார். அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:—

சுடர் ஒளி அரசியல் அம்பலம் பகுதியில் அண்மைக் காலமாக எமது தமிழ்க் காங்கிரஸைப் பற்றியும் எங்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி பற்றியும் வெளிவரும் குறிப்புகள் ஒரு வித பாதிப்பை ஏற்படுத்த முனைபவையாக இருக்கின்றன என்று தமிழ்க் காங்கிரஸ் நலன் விரும்பிகள் கருதுகின்றனர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஆத்மார்த்தமான நிலைப்பாடும் தமிழர் தலை நிமிர்ந்து இருக்க விரும்புகிறார்கள் என்பதும் அகிலம் அறிந்தவையே.

எமது மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம் எமது தனித்துவத்தைப் பேணிக் கொண்டே தேசியப் பிரச்சினைகளில் தமிழினம் விசுவாசமாக ஒருமித்த குரலில் ஒருமைப்பாட்டினை வெளிப்படுத்த வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். அதற்காகச் செயற்பட்டும் வந்தார்.

அவருடைய வழியில் தான் தற்போதைய தலைமையும் அதே வீரியத்துடன் செயற்பட்டு வருகிறது.

இந்த ஒருமைப்பாடு அண்மைக் காலத்தில் தமிழ் மக்களால் வரவேற்கப்பட்ட ஒன்று. இனவாதிகள் எதிர்பார்க்காத ஒன்று. எனவே ஒரு நியாயமான மனிதனை நியாயமாகக் கணிப்பிடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக் குமர குருபரன் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

## மானம் காக்கும் போராட்டம்

இரு குடும்பப் பெண்கள் கடற்படையினரால் உப்புக் குளத்தில் கைது செய்யப்பட்ட பின்னர் பாலியல் வல்லுறவுக்கும் துன்புறுத்தலுக்கும் உட்படுத்தப்பட்ட கொடுமையை எதிர்த்து மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் என்று பல்வேறு இடங்களிலும் தமிழ்ப் பெண்களின் மானம் காக்கும் போராட்டம் ஆரம்பமாகியிருக்கிறது.

கொழும்பில் ஊஹூம். அப்படி ஒன்றையும் காணோம். கொழும்பில் பெண்கள் அமைப்புகளுக்குக் குறைவில்லை. அந்த இயக்கங் களில் உள்ளவர் கள் முன்னர் எத்தனையோ பிரச்சினைகளில் வீதிக்கு வந்து நீதி முழக்கம் செய்திருக்கிறார்கள்.

இதில் மட்டும் அவர்கள் ஏன் மௌனம்? பாலியல் வல்லுறவு கொழும்புப் பெண்களுக்கு ஒன்றும் பெரிய விஷயமாகப்படவில்லையா? அல்லது பாதிக்கப்பட்ட பெண்கள் வன்னிப் பகுதியைச் சேர்ந்த தமிழ்ப் பெண்கள் தானே என்ற அலட்சியமா?

பெண்கள் விவகாரத்தில் மிகுந்த அக்கறை காட்டி பாராட்டும் விருதும் கூடப் பெற்ற தமிழ்ப் பெண்மணி ஒருவர் இருக்கிறார். அவருக்கே அக்கறை இல்லை என்றால்....?

எல்லோரும் ஆத்திரப்படுகிறார்கள்.

## அரசு குழப்புகிறது.......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தும் நோக்குடன் பல அம்சங்களை இலங்கை அரசு திணித்துள்ளது.

* போர் நெருக்கடியைத் தவிர்த்து பேச்சு வார்த்தைக்கு ஏற்றதான சூழ்நிலையையும் இயல்புநிலையையும் தோற்றுவிப்பதே இந்த உடன்படிக்கையின் நோக்கமாக இருக்க வேண்டும். இதன் அடிப்படையிலேயே இப்புரிந்துணர்வு உடன்படிக்கையில் சில மாற்றங்களைச் செய்யவேண்டும் என்பதில் எமது தலைமைப் பீடம் உறுதியாக உள்ளது.
* டிசம்பர் மாதத்தில் எமக்கு கையளிக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டின் முகவுரை யில் 'சமாதானப்பேச்சு நடத்துவதற்காக ஓர் உகந்த சூழ்நிலையை உருவாக்குவதே இந்த உடன்படிக்கையின் நோக்கம்' எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "The purpose of this Memorandum of Understanding is to create an atmosphere for a negotiation process" என்று சொல்லப்பட்டிருக்கிறது.
* ஆனால் திருத்தம் செய்யப்பட்ட அறிக்கையில் தலைப்பு "மனிதாபிமான நடவடிக்கைகள் பற்றிய உடன்பாடு" Agreement on Humanitarian Measures) என்று மாற்றப்பட்டிருக்கிறது.
* உடன்பாட்டின் நோக்கமும் முன்னர் இருந்தது போல் அல்லாமல் வேறுபாடாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.
* உடன்பாட்டின் தலைப்பு ஆரம்பத்தில் இருந்தது போன்று "புரிந்துணர்வு உடன்பாடு" என்று இருக்க வேண்டும். அதற்கு முன்னால் தேவையானால் "மனிதாபிமான நடவடிக்கைகள் பற்றி" என்ற வாசகத்தைச் சேர்த்துக் கொள்ளலாம். மொத்தத்தில் "மனிதாபிமான நடவடிக்கைகள் பற்றி, புரிந்துணர்வு உடன்பாடு" (Memorandum of Understanding on Humanitarion Measures") என்று திருத்தம் செய்யப்பட வேண்டும்.
* உடன்பாட்டின் முகவுரையில் போர் நெருக்கடியைத் தணித்துப் பேச்சு வார்த்தைக்கு ஏற்றதான ஒரு சமாதான சூழலையும் இயல்பு நிலையையும் தோற்றுவிப்பதே இந்த உடன்படிக் கையின் நோக்கம் என்ற வசனம் சேர்க்கப் படுவதும் அவசியம்.
* விமானக் குண்டு வீச்சுக்களை முழு மையாக நிறுத்துதல் வேண்டும். பொதுமக்கள் வாழ்விடங்கள் மீதான ஷெல் வீச்சுக்களையும் முழுமையாக நிறுத்த வேண்டும்.
* அப்பாவிப் பொதுமக்களைக் கைது செய்தல், சித்திரவதைக்கு உட்படுத்துதல், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துதல் ஆகியன முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.
* ஜனநாயகப் போராட்டங்களைத் தடை செய்தல், அச்சுறுத்தல், கைது செய்தல் என்பன நிறுத்தப்பட வேண்டும்.
* டீசலும், பெற்றோலும் பாவனையாளர்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தேவையான அளவில் வழங்கப்பட வேண்டும். மக்களின் போக்குவரத்து, விவசாயம், கடற்றொழில் ஆகியவற்றிற்கு இவை அவசியம் தேவை.
* சிமெந்தும் அவசியம் தேவைப்படுகிறது. குளங்களைப் புனரமைப்பதற்கு, வாழ்க்கைக்கு அத்தியாவசியமான கட்டுமானங்களை அமைப்பதற்கு, போக்குவரத்துச் சாலைகள், பாலங்கள் ஆகியவற்றில் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு வீடுகளைத் திருத்துவதற்கு, புதிதாக வீடுகளைக் கட்டுவதற்கு என்று எல்லாம் சிமெந்து தேவைப்படுகிறது.
* இப்படியான பொருட்களைப் புலிகள் தமது இராணுவத் தேவைக்குப் பயன்படுத்துவார்கள் என்று சந்தேகிப்பது முட்டாள் தனம். புலிகளின் தேவைக்கு ஏற்ப எரிபொருள், சிமெந்து ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளும் வழிவகைகள் உள்ளன.

இப்படித் தமிழ்ச் செல்வன் தெரிவித்திருக்கிறார்.

SRI LANKA INSURANCE CORPORATION

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

**Mrs. S.Ganesaratnam**
(Organiser)

OFFICE:
30/9, Hampden Lane,
Colombo - 06.

Tel : 597450
Fax: 075-552758
Mobile: 077-307227

KURINCHY PHARMACY
Colombo - Jaffna Agent for Edna Chocholate and Tex Pen




No. 558, Hospital Road,
Jaffna.
Tel: 021-3191

Van for Hire

100 Scholarships for O/L & A/L Students to study DCA
Diploma in Computer Applications

Duration: 4 months
Course Fee: 7000/=
Register now for the Placement Test.
Closing date for registration : 20th April 2001

For Top Ten Students - Course is 100% FREE
For Next - 30 -students 75% Free
For Next - 30 -students 50% Free
For Next - 30 -students 25% Free

A never to miss opportunity

BIOS Computer Systems
No: 12, Rajapokuna Mawatha., Maligawattha, (Opposite PRADEEPA RECEPTION HALL)
TEL: 543 663.

தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும்
எமது உளம் கனிந்த
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

S.T.CONSTRUCT



சகலவிதமான
மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்
மற்றும் HERO HONDA, YAMAHA போன்ற
மோட்டார் சைக்கிள்களின் ஏகவிநியோகஸ்தர்கள்

T.ஞானசுந்தரம்,
சுரந்தன், நீர்வேலி.
தொ.பே: 0702 12572

159 2/2, 2ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 12.
தொ.பே: 074 515561

# யாழ்ப்பாணத்தில் மேயருக்கே கருத்துச் சுதந்திரம் இல்லை!

**யா**ழ். மாநகர முதல்வர் நடராஜா ரவிராஜ் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த சமயம் படையினரால் இரண்டு தடவைகள் விசாரிக்கப்பட்டார் என்ற தகவல் வெளியாகி இருக்கிறது.

அண்மையில் யாழ். மேயர் வெளியிட்ட சில கருத்துகளுக்காகவே அவர் விசாரிக்கப்பட்டார் என்று தெரிகிறது.

யுத்தத்தினால் பெரிதும் அழிவுண்டு போன தென்மராட்சிப் பிரதேசத்துக்கு யாழ். மேயர் கூட்டணிப் பிரமுகர்களுடன் விஜயம் செய்தார். அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டுத் திரும்பிய பின் அது தொடர்பாக மேயர் சில கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொதுமக்களை உடனடியாக மீளக் குடியமர்வதற்கான வாய்ப்புகள் இல்லை. அங்கு செல்லும் மக்கள் வெடிபொருள்களாலும் வேறு வழிகளினாலும் ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் மேயர் கூறி இருந்தார்.

தமது இருப்பிடங்களைப் பார்ப்பதற்காக முண்டியடித்துச் செல்லும் பொதுமக்களுக்கு அனுமதி வழங்குவதற்குப் படையினர் பல கட்டுப்பாடுகளை விதிப்பதாகவும் —

முறைகேடான வழிகளில் சிலருக்கு அனுமதி வழங்கப்படுவதாகவும் —

இதற்காகப் பொதுமக்களிடம் படையினர் பணம் பெறுவதாகவும் — மேயர் ரவிராஜ் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்துக்களே படைத் தரப்பினரைச் சீற்றமுற வைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இவை குறித்தே புலனாய்வுப் பிரிவினர் மேயரைத் துருவித் துருவி விசாரித்துள்ளனர்.

''தென்மராட்சியில் மக்கள் மீளக் குடியமர முடியாது என்று நீங்கள் எப்படிக் கூறமுடியும்?

''பொதுமக்களிடம் படையினர் பணம் வாங்கியதை நீங்கள் கண்டீர்களா?'' என்று கேள்விகளைக் கேட்டு மேயரின் வாக்குமூலங்களைப் படையினர் பதிவு செய்துள்ளனர்.

மேயர் தெரிவித்த கருத்துக்கள் ஒன்றும் பாரதூரமானவை அல்ல. தென்மராட்சியில் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்ற பொதுமக்கள் பலர் அடுத்தடுத்து மிதிவெடிகளில் சிக்கி கால்களை இழந்து கொண்டிருந்த சமயத்திலேயே மேயர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருந்தார்.

இது ஒன்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குக் குந்தகமான கருத்து அல்ல. பொதுமக்கள் தமது வீடுகளைப் பார்க்கச் செல்ல அனுமதி கோரி ஒருபுறம் முண்டியடித்துக் கொண்டிருக்கிறார்கள். மறுபுறத்தில் சில பகுதிகளில் மட்டும் படையினரால் உள்ளே அனுமதிக்கப்பட்ட சிலர் தமது இருப்பிடங்களைப் பார்வையிடும் போர்வையில் வேறு வீடுகளுக்குள்ளும் புகுந்து உடைமைகளை அபகரித்துச் சென்று கொண்டிருந்தனர்.

அத்தகையோருக்கு படையினர் அனுமதி வழங்கியது எப்படி என்று மக்கள் மத்தியில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

பொதுமக்கள் செய்த முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே படையினர் பணம் வாங்குவதாக தான் கூறியதாக மேயர் தெரிவித்திருக்கிறார்.

யாழ். நகரின் முதல் பிரஜையாக மதிக்கப்படும் நகர மேயர் பொதுமக்கள் பாதிக்கப்பவது பற்றிக் கூறியிருக்கிறார். இந்தச் சம்பவம் விசாரணைக்குட்பட்டிருப்பது யாழ்ப்பாண மக்களின் கருத்துச் சுதந்திரம் எத்தகைய நிலையில் இருக்கிறது என்பதற்கு ஆகப்பிந்திய உதாரணமாகும்.




தமிழ் மக்களின் உரிமைகள் சம்பந்தமாக ஒன்று திரண்டு கருத்துக்களை வெளிப்படுத்த முடியாது யாழ். பல்கலைக்கழக சமூகம் தடுக்கப்பட்டிருக்கிறது. சில செய்திகளை வெளியிட்டதற்காக பத்திரிகையாளர்கள் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாணவர்களைப் பாடசாலைக்குச் சமுகமளிக்க விடாது தடுத்ததாக தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கை கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது.

அமைதி மற்றும் சமாதானத்துக்காக ஒன்றுகூடி பேரணிகளை நடத்த மத நிறுவனங்களுக்குக் கூட அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

இந்த வரிசையில் யாழ். மாநகர மேயர் ரவிராஜ் விசாரிக்கப்பட்டிருக்கிறார்.

இயல்பு நிலை திரும்பி இருப்பதாகக் கூறும் யாழ்ப்பாணத்தில் மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் எப்படிப் பேணப்படுகிறது என்பதை எடுத்துக் காட்ட இச்சம்பவங்கள் போதுமானவை அல்லவா?

## ஆஸ்பத்திரிக் கழிவுகள்

யாழ். நகரின் மத்தியில் உள்ள போதனா வைத்தியசாலையில் இருந்து வெளியேறும் கழிவுகள் யாழ். நகரின் சில இடங்களில் வெளியே கசிந்து சுகாதாரத்துக்குப் பெரும் பங்கம் ஏற்படுத்துவது குறித்து ஏற்கனவே இப்பத்தியில் தகவல் வெளியானது தெரிந்ததே.

ஆஸ்பத்திரிக்கு உள்ளே இருக்கும் மனிதக் கழிவுகள் வெளியே பரவும் மற்றொரு தகவல் இது.

யாழ். ஆஸ்பத்திரியின் 28ஆம் 29ஆம் வார்ட்டுகளில் உள்ள கழிப்பறைகளில் இருந்து கழிவுகளை வெளியேற்றும் குழாய் இடையில் சேதமடைந்து காணப்படுகிறது.

இந்த வார்ட்டுகள் மேல் தளத்தில் அமைந்திருப்பதால் அங்கிருந்து கீழ்த் தளம் நோக்கிப் பொருத்தப்பட்டுள்ள குழாய்கள் மூலமே கழிவுகள் அகற்றப்படுகின்றன. அந்தக் குழாய்களில் ஒன்றே வெடித்துச் சேதமடைந்துள்ளது.

இதனால் மலக்கழிவுகள் உட்பட கழிப்பறைக் கழிவுகள் கீழே கொட்டப்படுகின்றன. அந்தக் கழிவுகள் கழிவு நீர் ஓடும் வாய்க்காலினுள் சிந்தப்பட்டு அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு வெளியே ஆஸ்பத்திரி வீதியை அண்டி அமைந்துள்ள கழிவு நீர் கால்வாயினுள் கலப்பதாகத் தகவல்.

கடந்த சில மாத காலமாக இந்த சுகாதாரச் சீர்கேடு இடம்பெற்றுவருகின்றபோதும் அதனைச் சீர் செய்வதற்கு இன்னமும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இதைவிட யாழ். ஆஸ்பத்திரியில் சேரும் கழிவுகளை 'பம்ப்' செய்து பண்ணைக் கடலுக்குள் செலுத்தும் நிலத்தடிக் குழாய்கள் சேதமடைந்து இருக்கிறன. அதனைச் சீர் செய்வதற்கு இன்னமும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் விசனம் தெரிவித்தன.

— வலிகாமத்தான்

## குமுறுகிறார்கள் திருமலை கடற்றொழிலாளர்கள்

திருகோணமலை மாவட்டத்தில் சின்னம் பிள்ளைச்சேனை, வெள்ளை மணல், திருமலையூற்று, கிண்ணியா, மூதூர், போன்ற பிரதேசங்களில் வாழும் கடற்றொழிலாளர்களின் தற்போதைய வறுமை நிலை பெரும் சோதனைக்குரியது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 23ஆம் திகதி திருகோணமலைக் கடற்படைத்தளம் தாக்கப்பட்ட பின்னர் மேற்படி பிரதேச மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்ல கடற்படையினரால் அனுமதிக்கப்படவில்லை.

இதனால் இத்தொழிலையே நம்பி வாழ்ந்த மீனவர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமது குடும்பத்துக்கான ஒரு நேர உணவைக் கூட வழங்க முடியாத நிலையில் வறுமையில் இவர்கள் வாடுகின்றனர்.

கடற்படையினர் தமது பாதுகாப்புக் கருதித் தற்போது ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை மாத்திரமே மீன்பிடிக்க அனுமதி அளித்துள்ளனர்.

ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடித்துச் சீவியம் நடத்தி வந்த இவர்கள் ஒரு கிலோ மீற்றருக்குள் கடலுக்குச் சென்று என்ன செய்வது? இந்த லட்சணத்தில் தற்போது பாஸ் முறையும் அமுல் செய்யப்பட்டு வருகிறது.

ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்குள் செல்வதாயினும் பாஸ் இருக்க வேண்டும். பாஸ் இல்லாமல் பிடிபட்டால் மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்ட முறையில் அடி, உதை.

பெப்ரவரி 22ஆம் திகதி கிண்ணியாப் பிரதேசத்தில் இருந்து பாஸ் இல்லாமல் கடலுக்குச் சென்ற இருவர் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவரான தாஜுதீன் என்பவர் சுடர் ஒளிக்குத் தெரிவிக்கையில் தனது பிள்ளைக்கு மருந்து எடுக்கக்கூட பணம் இல்லாத நிலையில் வாழ்வதாகக் கூறினார்.

அத்துடன் கடலில் கடற்படையினரிடம் அகப்பட்டால் சிலவேளை தமது வலைகளையும் அவர்கள் அபகரித்துச் செல்வதாகக் குறிப்பிட்டார்.

ஆனால் இந்தச் சட்ட திட்டங்கள் எல்லாம், எங்களுக்கு மாத்திரமே தவிர பெரும்பான்மை சமூகத்துக்குக் கிடையாது. அவர்கள் தமது தொழிலைச் செய்து கொண்டிருக்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

இந்த நிலையில் சில மீனவர்களுக்கு சமுர்த்தி வறுமை நிவாரண உணவு முத்திரையும் நிறுத்தப்பட்டுள்ளது.

இப்பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தரும் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர். மரத்தால் வீழ்ந்தவனை மாடேறி மிதித்தது போல் இந்த மீனவர்கள் தொழிலையும் இழந்து சமுர்த்தி வறுமை நிவாரண உணவு முத்திரையையும் இழந்த நிலையில் வாழ்கின்றனர்.

— சுஜா


**HATTON STORES**

(News Paper Agent)

ஸ்தாபனத்தார்

வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் தமது உள்ளங் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

**HATTON STORES,**

*No. 3, Main Street, Hatton.*

*Tel: 051-22563*

சகல பத்திரிகைகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

தமிழ் மக்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.



**PRAKASH TRANSPORT SERVICE**

General Merchants, Commission Agents & Rice Millers

**PRAKASH AGENCY**

No. 457, K.K.S Road, Jaffna.

No.112, Dam Street, Colombo-12, Tel : 434805.

**Dilka Cream House**

ஸ்தாபனத்தார் வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் தமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார்கள்.

*Dilka Cream House*

66-68, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.

தொ.பே: 026-22709

**சிவசக்தி ஸ்டோர்ஸ்**

உரிமையாளரும் ஊழியர்களும் தமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றனர்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு மிகப் பரபரப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் மாதர் சஞ்சிகைகளுக்கும் கதைப் புத்தங்களுக்கும் மற்றும் மலிகைப் பொருட்களுக்கும் ஆண்டிவால் தெருவில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

சிவசக்தி ஸ்டோர்ஸ்

226/3D, ஆண்டிவால் தெரு, (செட்டியார் தெருவுக்கு முன்பாக)

கொழும்பு – 13. தொ.பே: 452965

*யாழ்ப்பாண விவசாயிகளின் விவசாய உற்பத்தி பொருட்களை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு ஏற்றுமதி செய்வதற்கு உதவும் யாழ் விவசாய பெருங்குடி மக்களிற்கும் அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!*

**K.MUTHUKUMARASAMY**

*Proprietor*


KM

**K.M.STORES**

*No. 90, Market Circular Road, Vavuniya.*

# மலையகத் தமிழரா அல்லது இந்திய வம்சாவழித் தமிழரா?

## இரு தலைவர்களின் கருத்து மோதலால் குழப்பம்


இராதா கிருஷ்ணன்

நாம் இந்திய வம்சாவளித் தமிழர்கள் என எம்மை அடையாளம் காட்டிக் கொள்ளத் தவறினால் பல்வேறு நன்மைகளை இழக்க நேரிடும். எனவே நாம் குடிசன மதிப்பீட்டின் போது இந்திய வம்சாவளித் தமிழர்கள் என்று கட்டாயமாகப் பதிந்து கொள்ள வேண்டும்.

மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் வி.இராதா கிருஷ்ணன் இப்படிக் கூறினார்.

இங்கு வாழும் அனைவருமே இலங்கையர்கள். 'இந்தியத் தமிழர்—இலங்கைத் தமிழர்' என பிரிக்கக் கூடாது என ஒரு சாரார் குரல் எழுப்பி வருகின்றனர்.

அதேவேளை சந்திரசேகரன் போன்ற தலைவர்கள் இந்திய வம்சாவளித் தமிழர்களை மலையகத் தமிழர்கள் என்றே அழைக்கவேண்டும் என்கிறார்கள். இதனால் ஒரே குழப்பம். இதனைத் தெளிவுபடுத்துமாறு அமைச்சர் இராதா கிருஷ்ணனிடம் கேட்டோம்.


இன்று இலங்கையில் அனைத்து விவகாரங்களும் விகிதாசார அடிப்படையிலேயே கணிக்கப்படுகின்றன. சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்கள் என விகிதாசார அடிப்படையில் ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன.

இதில் இந்திய வம்சாவளித் தமிழர்கள் 5.5 சதவீதம் இருக்கின்றோம். இதன் அடிப்படையிலேயே எல்லா ஒதுக்கீடுகளும் வழங்கப்படுகின்றன. தொழில் வாய்ப்புக்கள், மானியங்கள், பொது வசதிகள் என்பனவும் இதன் அடிப்படையிலேயே கிடைக்கின்றன.

இப்பொழுது மலையகத்திலும், நகரப்புறங்களிலும் வசிக்கும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் தம்மை "இலங்கைத் தமிழர்கள்" என பதிவு செய்து கொள்கின்றனர். இதனால் இந்திய வம்சாவளித் தமிழர்களின் விகிதாசாரம் படிப்படியாகக் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை தொடர்ந்தால் ஆசிரியர்கள், கிராமசேவகர்கள், சமுர்த்தி அதிகாரிகள், விளையாட்டுத்துறை அதிகாரிகள் எனப் பதவி வெற்றிடங்கள் ஏற்படும்போது இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளும் சலுகைகளும் கை நழுவிப் போய்விடும்.

அண்மையில் வழங்கப்பட்ட தமிழ் ஆசிரியர் நியமனங்களின் போதும் இத்தகையதொரு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ்ப்பாடசாலைகளுக்கு கூடுதலான முஸ்லிம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கூடுதலான தகுதிகள் இருந்தும் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு இடம் கிடைக்கவில்லை.


சந்திரசேகரன்

இதற்கு ஒரே மாற்றுவழி இந்திய வம்சாவளித் தமிழர்களின் விகிதாசாரத்தை அதிகரிக்க வேண்டும். இவ்வாறு அதிகரிப்பதற்கு இந்திய வம்சாவளித் தமிழர்களான நாம் "இலங்கைத் தமிழர்" எனப் பதிவு செய்வதை நிறுத்தி "இந்திய வம்சாவளித் தமிழர்" எனப் பதிவு செய்ய வேண்டும்.

இப்படி அமைச்சர் இராதாகிருஷ்ணன் கூறினார்.

இந்திய வம்சாவளி என்று பிறப்புச் சான்றிதழ்களில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அவர்களை பாடசாலைகளில் சேர்க்கும் போதும் புலமைப்பரிசில்களுக்கு அவர்கள் விண்ணப்பிக்கும் போதும், நேர் முகப் பரீட்சைகளுக்கு தோற்றும்போதும் பிரஜாவுரிமை சான்றிதழ்களையே கேட்கின்றனர். இலங்கைத் தமிழர் என்றிருந்தால் இவை கேட்கப்படுவதில்லை. இது ஒரு வகையில் பாதிப்புதானே என்று சுட்டிக்காட்டினோம்.

"நிச்சயமாக பாதிப்பு ஏற்படாது. பிரஜாவுரிமை சான்றிதழ்களைக் கேட்டு வற்புறுத்த முடியாது. தேவைப் படும் நேரங்களில் சத்தியக்கடதாசிகளை சமர்ப்பித்தாலேயே போதும்" என்று அமைச்சர் பதில் அளித்தார்.

இதே வேளை மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் எம்.பி 'மலையகத் தமிழர்கள்' என தேசிய ரீதியாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதனை அவர் நாடாளுமன்றத்தில் பிரதி அமைச்சராக இருந்த போதே கூறி இருக்கின்றார். இது விடயமாக தமது நீண்ட காலக் கோரிக்கையை அடுத்த மேதினத்தில் மேதின தீர்மானங்களில் ஒன்றாக நிறைவேற்றப்படும் என்று சொன்னார். இதனை வலியுறுத்துவோம் என்றார் சந்திரசேகரன் எம்.பி.

இதில் எது சரி, எதனால் நன்மை என்பதை காலம் தீர்மானிக்கட்டும்.

# ஆறுமுகம் முயற்சியால் பொலிஸ் பிரச்சினை தீர்வு

வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்களை ஏற்க மறுத்ததால் வேலை இழந்த 35 மலையகப் பொலிஸாருக்கும் மீண்டும் மலையகப் பகுதிகளில் நியமனம் வழங்கப்படும். இதே வேளை யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் 15 மலையக தமிழ்ப் பொலிஸாரும் மலையகத்துக்கே இடமாற்றம் செய்யப்படுவர்.

கால் நடை அபிவிருத்தி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் நேரடி முயற்சியினால் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை இதற்கான பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது 375 மலையக இளைஞர்களுக்கு பொலிஸ் துறையில் நியமனங்கள் வழங்கப்பட்டன. இவர்களுள் 20பேர் சப்—இன்ஸ்பெக்டர் களாகவும் ஏனையோர் பொலிஸ் கான்ஸ்டபிள்களாகவும் நியமனம் பெற்றனர்.

தமிழர்கள் செறிந்து வாழும் மலையகப் பிரதேசங்களில் கடமையாற்றுவதற்கென்றே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபின் 50 மலையகத் தமிழ் பொலிஸார் யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். இவர்களுள் 15 பேர் மட்டுமே யாழ். மாவட்டத்திற்குச் சென்று பணியாற்றினர். மிகுதி 35பேரும் இதனை ஆட்சேபித்து கடமைக்குச் செல்லாமல் இருந்து விட்டனர். இதனால் இவர்களுக்கு இங்கும் வேலை மறுக்கப்பட்டது. இவர்கள் மூன்று வருடங்களுக்கு மேல் வேலை இன்றி இருக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் பொலிஸ் மாஅதிபருடனும் பிரதி பொலிஸ் மாஅதிபருடனும் பலமுறை பேச்சு நடத்தினார். பேச்சின்போது பிரச்சினையை தீர்த்து வைப்பதாக உத்தரவாதம் அளிக்கப்பட்டது. எனினும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இறுதியாக அமைச்சர் அனுருத்த ரத்வத்தையுடன் ஆறுமுகம் பேச்சு நடத்தினார். யாழ் மாவட்டத்துக்கு அனுப்பப்பட்ட பொலிஸாரை மலையகத்துக்கு திருப்பி அழைக்கவும், வேலைஇழந்தவர்களுக்கு மீண்டும் நியமனங்களை வழங்கவும் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஆறுமுகம் தெரிவித்தார்.

மலையகக் கண்ணோட்டம்
இரா. புத்திரசிகாமணி

# பண்டாரவளையில் கூட்டு மேதினக் கொண்டாட்டம் ஏன்?

ஊவா மாகாணத்திலும் சப்பிரகமுவ மாகாணத்திலும் பெரும்பான்மை அரசியல் கட்சிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவர்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கவும் செயல் திட்டம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

மலையக மக்கள் முன்னணியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இணைந்து இதர மலையக அமைப்புகளின் ஆதரவுடன் இதனை செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளன.

மத்திய மாகாண சபை உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் செயலாளருமான எம்.சிவலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

ஊவா மாகாணத்திலும், சப்பிரகமுவ மாகாணத்திலும் தமிழர்கள் கூடுதலாக வாழ்கின்ற போதிலும் அவர்கள் மத்திய மாகாணத்தில் வாழும் தமிழர்கள் போன்று தனித்துவமாச் செயற்பட முடியாத நிலையில் இருக்கின்றனர்.


எம். சிவலிங்கம்

ஏதாவது ஒரு பெரும்பான்மை அரசியல் கட்சியின் தயவுடன் அந்தக் கட்சியை அண்டியே இருக்க வேண்டிய நிலை!

இதுவரை இப்பிரதேசங்களில் இயங்கும் தொழிற்சங்கங்கள் தமது வசதிக்கேற்ப தாம் விரும்பிய அரசியல் கட்சிகளுக்கு ஆதரவு வழங்கின. வேட்பாளர்களின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் வாக்குப் பலம் தமிழர்களின் கைகளிலேயே இருக்கின்றது. எனினும், அங்கு போட்டியிடும் தமிழர்கள் வெற்றிபெற முடியவில்லை. தமிழ் அமைப்புகளிடையிலான போட்டி தமிழர்களின் வாக்குகளைப் பிரித்து சிதறடித்து விட்டிருந்தது.

இந்த நிலை இனியும் ஏற்படக் கூடாது, பிரதேச சபைத் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள், நாடாளுமன்றத் தேர்தல்கள் என்பனவற்றில் மலையகத் தமிழர்களின் வாக்குகளைச் சிதற விடாமல் பாதுகாக்க வேண்டும்.

இதற்கு முன்னோடி நடவடிக்கையாகவே எதிர் வரும் மே தினக் கொண்டாட்டத்தை ஊவா மாகாணத்தில் இணைந்து நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் சிவலிங்கம் குறிப்பிட்டார்.

ஊவா மாகாணத்தில் குறிப்பாக பண்டாரவளையில் மேதினக் கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்யப்படுவது ஏன் என்று கேட்டபோது.

"இங்கே தான் இனவாதக் கட்சியான சிஹல உறுமய போன்ற கட்சிகள் வேரூன்றி இருக்கின்றன. அக்கட்சிகள் தமிழர்களுக்கு எதிரான கடும் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன. அது மட்டுமன்றி அச்சுறுத்தலாகவும் இருக்கின்றன. இங்கு தான் பிந்துனுவெவ மனிதப் படுகொலைகளும் இடம் பெற்றன."

"எனவே இப்பிரதேசங்களில் எமது மக்களுக்கு தைரிய மூட்டி ஆதரவளிக்க வேண்டியது எமது கடமை. அங்கு அச்சத்தைப் போக்கி எழுச்சியை ஏற்படுத்த வேண்டும்."

"இதே போன்று சப்பிரகமுவ மாகாணத்திலும் பல எழுச்சிக் கூட்டங்களை நடத்த திட்டமிட்டுள்ளோம். தொழிற்சங்க வேறுபாடுகளுக்கு அப்பால் அரசியல் ரீதியாக எமது மக்களை ஓரணியில் திரட்டுவதே எங்களுடைய நோக்கம்" இப்படி சிவலிங்கம் மேலும் குறிப்பிட்டார்.

"முட்டுப்பட்ட பின்பாவது மூளை வந்ததே" என்று திருப்தி அடைவோம் என்கின்றனர் அனுதாபிகள். இவர்களுடைய திட்டம் வெற்றி பெற்றால் நன்மையே.


இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

நியூ அஷோக் வீடியோ புறொடக்ஷன்

* உங்கள் நிகழ்வு எதுவானாலும் நவீன தொழில், நுட்ப சாதனங்களின் உதவியுடன் உங்கள் திருப்திக்கேற்ப நிறைவேற்றித் தருவதற்கு மிகத் தரமான நிழற்படங்கள், வீடியோ படப்பிடிப்புகளில் கைதேர்ந்த நிபுணத்துவ சேவை.

298 1/2, காலி வீதி,
கொழும்பு — 06, இலங்கை.
தொலைபேசி: 586240, 598599

இந்து, பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் திருமண வைபவங்கள், பிறந்தநாள் நிகழ்வுகள் மற்றும் சமூக, வர்த்தக ரீதியான வைபவங்கள், விளையாட்டுத்துறை நிகழ்வுகள், அரங்கேற்ற நிகழ்வுகள் என்பவற்றை அற்புதமாக வீடியோ படமாக்கித் தருபவர்கள்.

VHS ல் இருந்து CDக்கு மாற்றுதல், கலர் பிலிம் டெவலப்பிங்கும் மற்றும் பிரின்டிங் சேவை, ஆங்கில, தமிழ் CD வாடகைக்குப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

New ASHOK VIDEO PRODUCTION

298 1/2, Galle Road,
Colombo - 06, SriLanka.
Tel: 586240, 597400, 598599

# படிக்கத் துடிக்கும் 'பிஞ்சுகள்' புத்தளத்தைக் கலக்கிய விந்தை!

## 'பாடசாலைக்கு அனுப்பு'!, 'வேலைக்கு விரட்டாதே'! என்று வீதியில் இறங்கிப் பேரணி

பத்துவயதுக்கு உட்பட்ட சின்னஞ் சிறிசுகள் புத்தளம் நகரை ஒரு கலக்குக் கலக்கி விட்டார்கள்.

பாடசாலை சென்று படித்து முன்னேற வேண்டும் என்ற தணியாத தாகம் அவர்களுக்கு.

வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். கோஷங்களை எழுப்பிய வண்ணமும் பதாதைகளை ஏந்திய படியும் சுமார் 1400 சிறுவர், சிறுமியர் புத்தளம் வீதிகளில் பேரணிகளாகச் சென்றார்கள்.

புத்தளத்தில் மட்டுமென்ன இந்த நாட்டிலேயே இது ஒரு புதுமை நிகழ்ச்சி. பார்த்தவர்கள் பிரமித்துப் போனார்கள்.

ஊர்வலமாகச் சென்ற சிறார்களில் ஒருவர் கூடப் பாடசாலையில் காலடி வைத்தது கிடையாது. பலர் குடும்ப வறுமை காரணமாக வேலைக்குச் செல்பவர்கள் பிஞ்சுக் குழந்தைகள் வேலை செய்ததால் அவர்களின் கைகள் மரத்துப் போயிருந்ததைக் காணமுடிந்தது.

சிறுவர் சிறுமியரில் பெரும் எண்ணிக்கையினர் இடம் பெயர்ந்து அகதிகளாகப் புத்தளம் வந்தவர்களின் பிள்ளைகள் ஆவர். வேறு வழியின்றி அவர்கள் வேலைக்குச் செல்கிறார்கள். நடைபெறும் யுத்தத்தின் கோர விளைவுகளில் இதுவும் ஒன்று.

''நாங்கள் படிக்க விரும்புகின்றோம்!''

''எங்களை பாடசாலைக்கு அனுப்பி வையுங்கள்...!''

''சிறுவர்கள் விளையாட்டுப் பொருட்கள் அல்லர்...!''

''எங்களை விலைபொருளாக மாற்றாதீர்கள்''

''சிறுவர்கள் கடவுளை ஒத்தவர்கள்... அவர்களை துஷ்பிரயோகம் செய்யாதீர்கள்!''

இவை போன்ற பல வாசகங்களைக் கொண்ட நூற்றுக் கணக்கான பதாதைகளையும் சுவரொட்டிகளையும் தாங்கியபடி சிறார்கள் சென்றார்கள்.

மேற்படி நிகழ்வை அரச சார்பற்ற நிறுவனமான ''சைல்ட் விஷன்'' (CHILD VISION) ஏற்பாடு செய்திருந்தது. அதன் பொதுச் செயலாளரான




சிறுவர்கள் பேரணி

ஏ.சீ.எம் ருமைஸின் அயராத முயற்சியினால் சிறார்களின் பரிதாப நிலைமை அனைவரதும் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

ஒரு சிறுவனை ''சுடர் ஒளி'' நிருபர் அணுகியபோது அச்சிறுவன் தெரிவித்த தகவல்கள் அதிர்ச்சியைத் தந்தன. அந்தச் சிறுவன் இடம் பெயர்ந்த அகதிகள் வாழும் முகாமொன்றின் பெயரைக் கூறி ''நாங்கள் அந்த முகாமில்தான் இருக்கின்றோம் எனக்கு வயது ஒன்பது.

எனக்கு ஒரு தம்பியும், தங்கையும் இருக்கிறார்கள். எங்களுக்கு 'ஸ்கூல்' என்றால் என்ன வென்றே தெரியாது. எங்க உம்மாவும் நானும் பக்கத்திலுள்ள காணியில் வெங்காயம் வெட்டும் வேலையைச் செய்கின்றோம். காலை எட்டு மணி தொடக்கம் மாலை ஐந்துமணி வரை வேலை'' என்றான்.

''சைல்ட் விஷன்'' பொதுச்செயலாளர் ஏ.சீ.எம்.ருமைஸ் தலைமையில் மாணவர்கள் அணிவகுத்து சென்றது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

இபுனு பதூதா மண்டபத்தில் இடம் பெற்ற வைபவத்தின் போது சிறுவர் உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் சிறுவர்கள் கல்வி பெறவேண்டியதன் அவசியம் பற்றியும் பலரும் உரையாற்றினார்கள்.

பெரும்பாலான சிறுவர்கள் அன்றைய தினம் பாடசாலைகளில் சேர்ந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை செல்வதற்கு வேண்டிய உடைகளும் மற்றும் உபகரணங்களும் அன்பளிப்புச் செய்யப் பட்டன.

—ஏ.எஸ்.புல்கி.


GOLDEN TOWER
APARTMENTS



இல. 41, மகாவித்தியாலய மாவத்தை, கொழும்பு 13 இல் அமைக்கப்பட்டுள்ள

கோல்டன் ரவர் எபார்ட்மென்ட்ஸ்

சொகுசு மாடி வீடுகள் உங்கள் எதிர்காலக் கனவுகளை இன்றே நனவாக்கக் காத்திருங்கள்.....!

பொதுவான அம்சங்கள்

- 2 மற்றும் 3 படுக்கை அறைகள் கொண்ட வீடுகள்.
- Tiles பதிக்கப்பட்ட அறைகள்.
- சகல அறைகளுக்கும் மின் விசிறி வசதிகள்.
- தொலைபேசி இணைப்பு வசதிகள்.
- வாகன நிறுத்துமிட வசதி.
- சாரதிகளுக்கான தனியான குளியல், கழிவு அறை வசதிகள்.
- சகல மாடிகளுக்குமான அதி நவீன Lift வசதிகள்.
- தேக்கு மரத்தாலான பிரதான கதவுகள்.

விசேட அம்சங்கள்

- செய்மதி தொலைக்காட்சி இணைப்புக்கள்.
- கூரைத்தளத்தில் உடற்பயிற்சிக் கூடம், விசேட வைபவங்களுக்கான மண்டபம், சிறுவர் விளையாட்டுத் தளம் ஆகியவை அமைந்த வசதி.
- பிரதான மண்டபம் மற்றும் படுக்கை அறைகளுக்கான குளிரூட்டல் வசதிகள்.
- அவசர தேவைகளுக்காகத் தயார் நிலையிலுள்ள மின்பிறப்பாக்கி.
- வரவேற்பு மண்டபத்துக்கும் வீடுகளுக்கும் இடையிலான இன்ரகொம் இணைப்பு வசதி.
- Villeroy & Boch வோஷ் பேசின்கள், HANSGROHE நீர் கலப்புக் குழாய்கள் பொருத்தப்பட்ட கைப்பாவனை நீர் விசிறிகள். வெந்நீர் விநியோகத்துடன் கூடிய பிரத்தியேக குளியலறை மற்றும் கழிவறை வசதி.
- வெந்நீர் வசதி உட்பட சகல நவீன வசதிகளும் கொண்ட பொதுக்கழிவறை.

Devi Property Development Pvt. Ltd.
No.131, Sea street, Colombo - 11. Sri Lanka.
Tel: 432502, 452821, Fax: 433178, E-mail: devi131@visual.lk

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

SINGHAM'S TEXTILES



'Lion' மார்க் கைக்குட்டைகள்
'Lion' மார்க் பெனியன்கள்
'Lion' மார்க் சாரங்கள்
ஆகியவற்றின்

ஏக இறக்குமதியாளர்களும், இந்திய திருமண சாரிகள், மற்றும் அனைத்து ஜவுளிகளையும் நம்பிக்கையும், நாணயத்துடன் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்பவர்கள்.

சிங்கம்ஸ் டெக்ஸ்டைல்ஸ்

இல. 24, பிரதான வீதி, கொழும்பு-11.
தொலைபேசி : 324153
தொலை நகல் : 440463, 599602

வெளிவந்துவிட்டன.....

மாணவ மணிகளே! உங்களைத் தேடி உங்களுக்காகவே!

அணில் குஞ்சு தரம் 1 - 2
அணில் தரம் 3 - 5
வித்தியா தரம் 6 - 8
சிஷ்யன் தரம் 9 - 11

மாணவர்கள் முன்னேற்றத்தின் வழிகாட்டி

பிரதிகளுக்கு முந்துங்கள்

உங்களூர்க் கடைகளில் கேட்டு வாங்குங்கள்

Gurukula Publications 17/12, Silva Lane, Meethotamulla, Kolonnawa.



நியூ திவ்யா ஜுவலர்ஸ்

கலை நயத்துடன் தங்கம், வைரம், நவரத்தினம் பதித்த அழகிய டிசைன்களில் நகைகளை உங்கள் மனம் கவர் விதத்தில் தெரிவு செய்ய வெள்ளவத்தையில் ஒரே இடம்

NEW DHIVIYA JEWELLERS
42-C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 508501, 505065
Specialist in 22kt. Gold Jewellery

Tex City



வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் உளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

தலைநகரில் புடவை, ஷல்வார் கமிஸ் விற்பனையில் தனக்கென தனிப்பெயர் பெற்ற பிரபல்யமான ஸ்தாபனம் !

நாகரிக புடவை உலகின் முன்னோடிகள்

இன்றே விஜயம் செய்யுங்கள் !

ரெக்ஸ் சிட்டி

இல. 42A, காலி வீதி, வெள்ளவத்தை. தொ.இல. 074-514332



நியூ திவ்யா ஜுவலர்ஸ்

கலை நயத்துடன் தங்கம், வைரம், நவரத்தினம் பதித்த அழகிய டிசைன்களில் நகைகளை உங்கள் மனம் கவர் விதத்தில் தெரிவு செய்ய வெள்ளவத்தையில் ஒரே இடம்

NEW DHIVIYA JEWELLERS
42-C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 508501, 505065
Specialist in 22kt. Gold Jewellery


இப்பத்திரிகை கொழும்பு 06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 ஏப்ரல் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.